விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 27 செவ்வாய்க்கிழமை (12.09.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 267

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

## தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்டம் அஸ்கிரிய, மல்வத்து பீடங்கள் ஆராய்வு

(கொழும்பு)

அஸ்கிரிய மற்றும் மல்வத்த பௌத்த பீடாதிபதிகளும் தமிழ் மக்கள் பேரவையால் கையளிக்கப்பட்ட தீர்வுத்திட்டம் தொடர்பில் குறித்த பௌத்த பீடங்களின் உயர்மட்டக்குழு ஆராய்ந்து வருவதாக கொழும்புத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 09, 10ஆம் திகதிகளில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான குழுவொன்று மல்வத்த மற்றும் அஸ்கிரிய பௌத்த பீடாதிபதிகளைச் சந்தித்து தமிழ் மக்களின் சமகால நிலைமைகள் குறித்து எடுத்துரைத்திருந்தனர்.

வடக்கு மாகாண முதலமைச்சருடன் தமிழ் மக்கள் பேரவையின் பிரதிநிதிகளான பேராசிரியர் ப.சிவநாதன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாயத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருக்குமரன் ஆகியோரும் சென்றிருந்தனர்.

இவ்வாறு முதலமைச்சருடன் சென்றிருந்த தமிழ் மக்கள் 24☛

## வடக்கு வைத்தியர்கள் இன்று பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

சயிட்டம் தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிராக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் இன்றைய தினம் முதல் மாவட்ட ரீதியில் சுழற்சி முறையில் போராட்டமொன்றை முன்னெடுக்க உள்ளதாக அறிவித்துள்ளது.

அந்தவகையில் வடமாகாண மருத்துவர்கள் (வவுனியா 24☛

## வித்தியா வழக்கு தொகுப்புரை இன்று

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி கொலை வழக்கு யாழ்.நீதிமன்ற கட்டடத் தொகுதியின் இரண்டாம் மாடியில் மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் அன்னலிங்கம் பிரேமசங்கர் மற்றும் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் முன்னிலை 23☛

## கோபமூட்டாதீர்கள் கடுப்பானார் மகிந்த

(கொழும்பு)

நாம் தவறு செய்யவில்லை. எனக்கு கோபமூட்டாதீர்கள் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று ஊடகவியலாளர்களிடம் கடிந்து கொண்டார்.

சிறைத் தண்டனை பெற்று, சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும், மகிந்த ராஜபக்ஷவின் முன்னாள் 24☛

# கால எல்லையை நிர்ணயித்து துரிதமாக செயற்பட வேண்டும்

## ஐ.நா. மனித உரிமை ஆணையர் இலங்கைக்கு அறிவுறுத்து

(ஜெனிவா)

அரசாங்கம் மனித உரிமைகள் பேரவைக்கு வழங்கிய வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்த தெளிவான கால எல்லை ஒன்றை வகுக்க வேண்டும். இந்த பொறுப்புக்களை நிறைவேற்றுவது பேரவையை சமாதானப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக கருதாது எல்லா மக்களுக்கும் உரிமைகளை வழங்குவதற்கான ஓர் அவசியமான கடமையாக கருதவேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசேன் வலியுறுத்தியுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)



## பூநகரியில் விபத்து; ஹயஸ் மோதி குடும்பப்பெண் உயிரிழப்பு



24☛

## வடக்கு மக்கள் புலிகள் இல்லை
## நினைவுத் தூபி அமைக்கப்படுவது புலிகளை நினைவு கூரவல்ல!
### - பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

வடக்கு மக்களுக்கு நாம் ஒருபோதும் புலிகள் என்ற முத்திரை குத்தவில்லையென பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

அண்மையில் வடக்கு முதல்வர் மாநாயக்க தேரர்களை சந்தித்த பின்னர் "என்னையும் வடக்கு மக்களையும் தென்னிலங்கை 23☛

## கிழக்கு, மேல் மாகாணங்கள் 20ஆவது திருத்தத்திற்கு அங்கீகாரம்

(கொழும்பு)

அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள 20 ஆவது அரசியலமைப்பு திருத்த வரைபுக்கு கிழக்கு மாகாண சபையும் மேல்மாகாண சபையும் நேற்று அங்கீகாரம் அளித்துள்ளன.

மாகாண சபை தேர்தல்களை ஒரே நாளில் நடத்தும் வகையில் அரசாங்கம் 20 ஆவது அரசியலமைப்பு திருத்தவரைபை நாடாளுமன்றத்தில் முன் வைத்திருந்தது.

இந்த வரைபு மாகாணங்களின் உரிமைகளை மீறுவதாக 23☛

## படையினரை காக்க வேண்டுமாயின் பொன்சேகாவை பைத்தியமாக்கவேண்டும்
### – உதய கம்மன்பில



(கொழும்பு)

இராணுவ வீரர்களை பாதுகாக்க வேண்டும் என்றால் பீல்ட் மார்ஷல் அமைச்சர் சரத் பொன்சேகாவை மனநலம் பாதிக்கப்பட்டவர் என நிரூபிக்க வேண்டும் என 24☛

## முல்லையில் விபத்து 4 பேர் படுகாயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலைக்கு முன்பாக நேற்றுக்காலை இடம்பெற்ற விபத்தில் நால்வர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 23☛

## இடைக்கால அறிக்கை 21ஆம் திகதி வெளிவரும்; அரசியலமைப்பு உருவாக்கம் ஒக்ரோபரில் ஆரம்பம்
### 20ஆம் திருத்தத்தை கூட்டமைப்பு ஆதரிக்கும் எனவும் சுமந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புதிய அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கை இம்மாதம் 21ஆம் திகதி வெளியாகுமென தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் ஊடகபேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மேலும் 20ஆவது திருத்தச் சட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்குமெனவும் அவர் கூறியுள்ளார்.

நேற்றுக் காலை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் யாழ்.அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் 24☛

## வவுனியா பாணியில் கிளியிலும் ஆட்டை; 18 ஆடுகள் திருட்டு

(கண்டாவளை)

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் வாழ்வாதாரத்தேவைக்காக வளர்க்கப்பட்ட 18 ஆடுகளை இராணுவ முகாமில் கண்காட்சியும் படப்பிடிப்பும் இருப்பதாகத் தெரி 24☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நடவடிக்கை எடுத்த பின்பும் — போராட்டம் தொடர்வது விசித்திரமானது

## யாழ். பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மேற்கொண்டுவரும் வேலை நிறுத்தப் போராட்டம் சற்றும் பொருத்தமற்ற முறையில் புதிய குற்றச்சாட்டுக்களை முன்வைத்து நீண்டு செல்கிறது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர் ஒன்றியமானது தெரிவித்துள்ளது. இது தொடர்பில் ஒன்றியத்தால் விடுக்கப்பட்ட அறிக்கை இங்கு அப்படியே தரப்படுகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கத்தினர் கடந்த வெள்ளிக்கிழமை (08.09.2017) தொடக்கம் வேலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர் ஒன்றியமானது பின்வருவனவற்றை அறிக்கையிட விரும்புகின்றது.

ஆயிரத்து தொளாயிரத்து எழுபதுகளில் ஆரம்பிக்கப்பட்ட எமது பல்கலைக்கழகமானது இன்றுவரை பல்வேறு நெருக்கடிகளையும் எதிர்கொண்டு இயங்கி வருகின்றது. அண்மையில் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் விரும்பத்தகாத சம்பவம் ஒன்று தொடர்பில் ஊழியர் சங்கம் தலையிட்டு உரிய நடவடிக்கைகளைக் கோரிப் போராட்டம் ஒன்றினை உரிய கால அவகாசத்தை நிர்வாகத்துக்கு வழங்காமல் திடீரென ஆரம்பித்திருந்தது.

மேற்படி போராட்டம் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகம் குறித்த பெண் உத்தியோகத்தரின் நலன் கருதி விரைந்து செயல்பட்டு பல துரித நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. எனினும் ஊழியர் சங்கமானது தமது பிரதான கோரிக்கைகள் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ள நிலையில்,

தமது கையறு நிலையை மூடி மறைப்பதற்காக தமது போராட்டத்துக்கான கோரிக்கையை மாற்றிக் குத்துக்கரணமடித்து தற்போது முன்னைய கோரிக்கைகளுக்கு சற்றும் பொருத்தமற்ற வகையில் புதிய குற்றச்சாட்டுக்களை முன்வைத்து போராட்டத்தை தொடர எத்தனிக்கிறார்கள்.

தமது தூரநோக்கற்ற செயற்பாடுகளின் மூலம் குறித்த பெண் உத்தியோகத்தருக்கும் அவரின் குடும்ப உறுப்பினர்களுக்கும் ஈடுசெய்ய முடியாத பாதிப்புக்களை குறித்த தொழிற்சங்கம் தெளித்து விட்டிருந்தது.

தற்போது குறித்த பெண் உத்தியோகத்தர் நிர்வாகம் மேற்கொண்ட நடவடிக்கைகளால் திருப்தியுற்று கடமைக்கு திரும்பியுள்ள நிலையிலும் அவருக்காக களமிறங்கிய ஊழியர் சங்க உறுப்பினர்கள் தொடர்ந்தும் வீதியில் நிற்கின்ற விநோதமான காட்சிகளை பல்கலைக்கழக சமூகத்தினர் கண்டு வியந்து நிற்கின்றனர்.

அத்துடன் குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பல்கலைக்கழகத்தின் ஊழியர் சங்கத்தினை ஒத்த பிறிதொரு தொழிற்சங்கமானது மிகவும் நாகரிகமான முறையில் தமது கருத்துக்களை அறிக்கையிட்டிருந்தமை மிகவும் ஆரோக்கியமான செயற்பாடாகும்.

சம்பவத்தில் ஒரு பெண் ஊழியரின் எதிர்காலம் சம்பந்தப்பட்டிருந்தமையை கருத்திற் கொண்டு அதன் அணுகு முறைகளை முன்னெடுப்பதில் அந்தத் தொழிற்சங்கம் கரிசனையாக இருந்தது. முகநூலிலும் இணையத்தளங்களிலும் கருத்துக்களைப் பொறுப்பின்றி பதிவிடுவது தான் ஒரு தொழிற்சங்கப் பண்பா என சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்புகின்றார்கள்.

மேலும் பல்கலைக்கழக ஊழியர் சங்கமானது பெண் ஊழியருக்காக குரல் கொடுப்பதாக அறிவித்த போதும் நடைமுறையில் அன்றைய தினம் பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளில் கடமையில் இருந்த பெண் உத்தியோகத்தர்களை அலுவலகங்களிலிருந்து பலவந்தமாக வெளியேற்றிய முறைமையும், அவர்களின் தகாத வார்த்தைப் பிரயோகங்களும் அவர்களின் நோக்கத்தையே கொச்சைப்படுத்துவதாக அமைந்திருப்பதை பலரும் அருவருப்புடன் நோக்கினர்.

இச்சந்தர்ப்பத்தில் ஊழியர் சங்கமானது தங்கள் வேலைப் பகிஷ்கரிப்பினை கைவிட்டு நிர்வாகத்துடன் ஒத்துழைத்து தமது பிரச்சினைக்களுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதோடு தமது நீதியற்ற கடும் போக்கினை கைவிட்டு நிர்வாக இயந்திரம் செவ்வனே செயற்பட நிர்வாகத்தின் ஓர் பங்குதாரர் என்ற ரீதியில் தங்கள் ஒத்துழைப்பினை வழங்கி மாணவர்கள் எவ்வித இடையூறுகளுமின்றி கல்வியை தொடர வழிசமைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நீண்ட கல்விப் பாரம்பரியத்தின் அடிநாதமாக விளங்கும் யாழ்.பல்கலைக்கழகத்தில் இவ்வாறான தொடர் இடையூறுகளை தமிழ் சமூகமானது தொடர்ந்தும் அனுமதிக்காது என்பதே எமது ஒன்றியத்தின் ஆழமான கருத்தாகும்.

மேற்படி விடயங்களை சரியான நிர்வாக ரீதியாலான அணுகுமுறைகளினால் மட்டுமே தீர்க்கப்பட முடியும் என்பதனையும் அதுவே பல்கலைக்கழகத்திற்கு பலம் சேர்க்கும் என்பதை எமது ஒன்றியம் ஆணித்தரமாக வலியுறுத்துகிறது, எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)


### கார்கள், வான்கள் வாடகைக்கு தேவை

நிறுவனத்துக்கு கார்கள், வான்கள் மாத வாடகைக்குத் தேவை.

(330) 076 448 1101

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



சந்நிதியான் ஆச்சிரம ஸ்தாபகரும் மடாதிபதியுமான

**மோகனதாஸ் சுவாமிகள்**

'கௌரவ டாக்டர்' பட்டம் பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி மகிழ்வதுடன் அவரின் சேவை மேன்மேலும் தொடர எல்லாம் வல்ல சந்நிதியான் அருள் புரிவாராக.

*வாழ்த்துவோர்:*

குருபீடாதிபதி, பரிபாலனசபை,
ஸ்ரீ சிவகுருநாத குருபீடம்,
வேதாந்தமடம்,
கந்தர்மடம்.

(R-1613)

### ஏல விற்பனை

எமது கல்லூரியில் வருடாந்த பொருட்கணக்கெடுப்பின் போது விற்பனைக்கு அனுமதிக்கப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 22.09.2017 வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு தென்பகுதி பழைய நூலக கட்டடத்தில் ஏலம் விடத் தீர்மானித்திருப்பதால் பொருட்களைப் பெற விரும்புவோர் குறித்த நேரத்திற்கு சமுகமளித்து ஏலத்தில் பங்கு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**ஏலத்தில் விடப்படும் பொருட்கள்**

| | | | |
|---|---|---|---|
| 01. Tape Recorder | 01 | 07. Engine Block | 01 |
| 02. Stabliser | 01 | 08. Engine Head | 01 |
| 03. Benches Dual | 10 | 09. Back Axile | 01 |
| 04. Duplicating Mechine | 03 | 10. Differencial | 01 |
| 05. Veenai | 01 | | |
| 06. Motor Car | 01 | | |

அதிபர்,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

(C-9611)

### காணி விற்பனை

காணியில் முதலீடு செய்து வருமானத்தை உயர்த்துக. A9 வீதி நுணாவில் சந்திக்கு அருகில் உள்ள மட்டுவில் வீதியில் எல்லை வீதிக்கு அருகே 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

(335)

தொடர்பு:-0778730129

### நோயாளர் பராமரிப்பு சேவை

வயோதிபர்கள், நோயாளர்களை உங்கள் வீட்டிற்கே வந்து பராமரிக்கப்படும். வைத்திய சேவையும் உண்டு. அழையுங்கள்.

(335) 077 873 0129

### வெட்டு மிசின் விற்பனைக்கு உண்டு

மேற்படி எமது இல்லத்திற்குச் சொந்தமான நல்ல முறையில் பேணி பராமரிக்கப்பட்டு உடன் பயன்படுத்தக் கூடிய நிலையில் உள்ள மொபோட்டா (Mobota Harvester) அரிவு வெட்டு மிசின் இரண்டு, ராப் உழவியந்திர றொட்டவேற்றர் கலப்பை (புதிது) விற்பனைக்கு உண்டு.

இவற்றை பெற விரும்புவோர் எதிர்வரும் 20.09.2017ற்கு முன்னர் நேரில் வந்து பார்வையிட்டு தாங்கள் கோரும் ஆகக் கூடிய கூறுவிலையினை நேரில் மூடுதபாலிலோ அல்லது பதிவுத் தபாலில் 25.09.2017க்கு முன் சமர்ப்பித்து உரிய காலத்தில் ஆகக் கூடிய கூறுவிலையினை கோரிய தாங்கள் பெற்றுக்கொள்ளலாம் என்பதைச் சகலருக்கும் அறியத்தருகின்றோம். இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் இல்லத்திற்கு உண்டு.

*தொடர்புகளுக்கு :*

தி.இராசநாயகம்,
தலைவர்,
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி.

தொ.பே. இல.: 077 060 4950, 071 749 3196, 021 492 3118

(C-9613)


### வேலணை பிரதேச சபையின் முக்கிய அறிவித்தல்

### சாட்டி புனித சித்தாந்திரை மாதா ஆலய பெருவிழா - 2017

வேலணை சாட்டி புனித சித்தாந்திரை மாதா ஆலய பெருவிழா 14.09.2017 முதல் 23.09.2017 வரை சிறப்பாக நடைபெற உள்ளது. இக்காலப்பகுதியில் ஆலயத்திற்குள் வருகை தரும் யாத்திரிகர்கள் மற்றும் தற்காலிக வியாபாரம் செய்பவர்கள் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றி ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

01. துவிச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் ஏனைய வாகனங்களை வாகனத் தரிப்பிடத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் தரித்து அவற்றுக்கான பாதுகாப்புக் கட்டணங்களைச் செலுத்திப் பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளவும்.
02. தற்காலிக வியாபார நிலையங்கள் எமது சபையால் 20.09.2017ஆம் திகதி புதன்கிழமை அன்று பிற்பகல் 2.00 மணிக்கு கேள்வி மூலம் வழங்கப்படும். கேள்வி கோருபவர்கள் கோரப்படும் கேள்வித்தொகை முழுவதையும் சபையின் தலைமை அலுவலகத்தில் உடன் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக்கொள்ளலாம்.
03. உணவுப் பண்டங்களை கையாளும் வியாபாரிகள் தங்களது உள்ளூராட்சி மன்றங்களில் ஏற்கெனவே பெற்ற நிரந்தர வியாபார அனுமதிப் பத்திரத்தின் உறுதிப்படுத்திய பிரதி சமர்ப்பித்தல் வேண்டும்.
04. வியாபார நிலைய உரிமையாளர்கள், ஊழியர்கள் ஒவ்வொருவரினதும் தேசிய அடையாள அட்டையின் பிரதி உறுதிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
05. மேலும் உற்சவ காலத்தில் பொது ஒழுங்குவிதிகளையும் சுகாதாரத்தையும் பேணுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**பிரதேச சபை, வேலணை.**

(C-9614)

# படையினர் எவரும் போர்க்குற்றம் புரியவில்லை

## ஐ.தே.க.அமைச்சர் சஜித் உறுதி

(கொழும்பு)

**முப்படைகள், பொலிஸார், சிவில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த எவருமே, எந்தவொரு போர்க்குற்றங்களையும் இழைக்கவில்லை என்று வீடமைப்பு மற்றும் கட்டுமானத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**



திம்புலாகலவில், நேற்று முன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர்,

"எமது போர் வீரர்கள் போர்க்குற்றங்களை இழைத்தார்கள் என்று சிலர் கூறுகின்றனர். அவர்கள் எவருமே அப்படியான குற்றங்களை புரியவில்லை.

விடுதலைப்புலிகள் மட்டும்தான் போர்க்குற்றங்களை இழைத்தார்கள். பாதுகாப்புப் படையினர், மூன்று பத்தாண்டுகால போரை முடித்து வைத்து, அமைதியை உருவாக்கினார்கள்.

போர்க்குற்றங்களுக்காக அனைத்துலக நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டியவர்கள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களே தவிர, தாய்நாட்டை விடுவிப்பதற்காக சண்டையிட்ட போர் வீரர்களையல்ல.

எமது போர் வீரர்கள் எவரையும் கைது செய்வதற்கு நல்லாட்சி அரசாங்கம் அனுமதிக்காது.

போர் வீரர்களை போர்க்குற்ற நீதிமன்றத்தில் நிறுத்தி மின்சார நாற்காலிக்கு கொண்டு செல்லப் போவதாக எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர், கூச்சலிடுகின்றனர். அவர்கள் முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர்.

அவர்களின் நோக்கம் போர் வீரர்களைப் பாதுகாப்பது அல்ல. மீண்டும் அதிகாரத்துக்கு வருவதற்கான வாக்குகளைப் பெறுவதே அவர்களின் நோக்கம்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# எனது உத்தரவிற்கமைய செயற்பட்டதனால் தான் லலித்துக்கு இந்த நிலை

## மகிந்த ராஜபக்ஷ கவலை



லலித் வீரதுங்கவுக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பானது அரசியல் பழிவாங்கலாகும். எனது உத்தரவுக்கு அமைய செயற்பட்டதனாலேயே இந்த நிலை ஏற்பட்டது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்துடன் அரசாங்கத்தில் இருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலர் கூட்டு எதிர்க்கட்சியில் இணைந்துகொள்வதாக தெரிவித்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

குருநாகலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அரச அதிகாரிகள் மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும். அரச கொள்கையின் அடிப்படையிலேயே சில் துணி வழங்கப்பட்டது. மாறாக தேர்தல் பிரசாரத்துக்காக வழங்கப்படவில்லை. அத்துடன் நாட்டின் அரசியலமைப்பில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் அதனை பாதுகாக்க வேண்டும் என தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரமே விகாரைக்கு வருபவர்களுக்கு சில் ஆடை வழங்கி மதத்தை போஷிக்க எனது அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. அதனை தவறு என்று யாரும் கூறமாட்டார்கள்.

மேலும் அரசாங்கத்தின் கொள்கையை நிறைவேற்றுமாறு அதிகாரிக்கு தெரிவிப்பது எனது கடமை. அதனையே லலித் வீரதுங்கவிடம் நான் தெரிவித்தேன். என்னால் வழங்கப்பட்ட உத்தரவை செயற்படுத்தியதனாலேயே அவர் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளார். அதனால் அவரின் கைதானது அரசியல் பழிவாங்கும் நோக்கத்தில் மேற்கொள்ளப்பட்டதொன்றாகும்.

அத்துடன் அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் அரசாங்கத்தில் இருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் விரக்தியடைந்துள்ளனர். அதனால் அவர்களில் ஒரு பிரிவினர் எதிர்வரும் மாகாண சபை தேர்தலுக்கு முன்னர் கூட்டு எதிர்க்கட்சியில் இணைந்து கொள்ளவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கிழக்கு மாகாணத்தில் கோரமின்மையால் சபை ஒத்திவைப்பு

## 20 ஆவது திருத்தத்தால் புறக்கணிப்பு

20ஆவது திருத்தச் சட்ட மூலம் தொடர்பாக நேற்று திங்கட்கிழமை காலை 9.30 அவசரமாகக் கூடிய கிழக்கு மாகாண சபை, கோரமின்மையால் மீண்டும் 11 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சபையின் அமர்வு, தவிசாளர் சந்திரதாச கலப்பதி தலைமையில் நேற்று கூடிய போதும் ஆளும் தரப்பு உறுப்பினர்களின் வரவு மிகக் குறைவாகக் காணப்பட்டதையடுத்து, தவிசாளரால் சபை ஒத்தி வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள், அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தச் சட்ட மூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்ற நிலையில், ஆளும் கட்சி உறுப்பினர்களும் தமது வருகையை தவிர்த்து மறைமுக ஆதரவு வழங்குவதை காண முடிகின்றது.

நேற்றைய கிழக்கு மாகாண சபை அமர்வில் எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் நால்வர் மாத்திரமே சமுகமளித்திருந்தனர்.

கடந்த 7ஆம் திகதி நடைபெற்ற கிழக்கு மாகாண அமர்வின் போது 20ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டதன் பின்னரே அதனை ஆராய்ந்து, ஆதரிப்பதா அல்லது எதிர்ப்பதா எனத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில், எந்தவிதத் திருத்தங்களும் முன்வைக்கப்படாமல் மீண்டும் நேற்று கிழக்கு மாகாண சபையில் 20ஆவது திருத்தச் சட்ட மூலத்துக்கு ஆதரவு கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# லலித்துக்கு உத்தரவிட்டவர் மகிந்தவே

## பந்துல விளக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் சில் அனுஷ்டான துணி விநியோகத்துக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே உத்தரவைப் பிறப்பித்திருந்தார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சில் அனுஷ்டானத்துக்கான துணி விநியோகம் தொடர்பான வழக்கில் குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோரை பார்வையிடுவதற்காக பந்துல குணவர்த்தன சிறைச்சாலை மருத்துவமனைக்கு சென்றிருந்தார். அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

"புத்த ஜயந்தியின் 2600 ஆண்டுகள் நிறைவையொட்டி நாடு முழுவதும் சில் அனுஷ்டானத் துணிகளை விநியோகிக்க அரசாங்க அதிகாரிகள் கொண்ட குழுவொன்று சிபாரிசு செய்திருந்தது.

பௌத்த சாசனத்தைப் பாதுகாக்கும் கடப்பாட்டைக் கொண்டவர் என்ற வகையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த அதற்கான உத்தரவைப் பிறப்பித்திருந்தார். அந்த வகையில் முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத் தொடர்பு ஆணைக் குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட ஆகியோர் முன்னாள் ஜனாதிபதியின் உத்தரவையே நிறைவேற்றியுள்ளனர்.

அரச அதிகாரிகள் குழுவின் சிபாரிசுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விநியோகம் என்பதால் இதனை முறைகேடானதாக கருதவே முடியாது.

எனவே இது குறித்து மகாநாயக்கர்களை தெளிவுபடுத்துவதுடன், சிறைக்கைதிகளின் அபராதத் தொகை செலுத்துவதற்கான நிதி சேகரிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சகோதரன் செலுத்திய வாகனம் மோதி மரணமானவர்களின் வீட்டில் மைத்திரி

(கொழும்பு)

தனது சகோதரனின் வாகனத்தில் மோதி இறந்தவர்களின் வீடுகளுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் நேரில் சென்று அஞ்சலி செலுத்தியுள்ளார். இதன்போது, உயிரிழந்தவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் எதிர்காலம் மற்றும் அவர்களின் குழந்தைகளின் கல்வி முதலான விடயங்களில் உச்சபட்ச உதவிகளை செய்து தருவதாகவும் ஜனாதிபதி வாக்குறுதியளித்துள்ளார்.

பொலன்னறுவை மாவட்டத்தின் ஹிங்குராங்கொடை - எதுமல்பிடிய பாதையில் கடந்த 8ஆம் திகதி அதிவேகமாகச் செலுத்தப்பட்ட வாகனமொன்றினால் மோதப்பட்டு இரண்டு பேர் அவ்விடத்திலேயே உயிரிழந்தனர். விபத்தை ஏற்படுத்திய லாண்ட் குரூசர் வாகனம் ஜனாதிபதியின் சகோதரர் பிரியந்த லால் சிறிசேனவுக்கு சொந்தமானது என்பதும் அவர் மணித்தியாலத்துக்கு 140 கிலோ மீற்றர் வேகத்தில் அதனை ஓட்டிவந்திருப்பதும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. விபத்தின் பின்னர் தலைமறைவான லால் சிறிசேன கடந்த 09ஆம் திகதி பொலிஸில் சரணடைந்த நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (இ-7)

# சமஷ்டி வழங்கப்பட்டால் அடுத்தது தனிநாடுதான்

## விமல் தெரிவிப்பு

(கொழும்பு)

சமஷ்டி வழங்கப்பட்டால் அடுத்தது தனிநாடு தான் என மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,


மகாநாயக்க தேரர்களை சந்தித்த வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், யாழ்ப்பாணத்தை வந்து பார்க்குமாறு கோரியுள்ளார்.

அத்துடன், தாம் தனி நாட்டைக் கேட்கவில்லை, சமஷ்டியைத்தான் கேட்கின்றோம் என கூறியுள்ளார்.

சமஷ்டி வழங்கப்பட்டால், அடுத்தது தனிநாடு தான். ஐக்கிய நாடுகள் சபை மூலமாக தனிநாடு உருவாக்கப்படும் என விமல் வீரவன்ச சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## யு.எஸ்., ஓபன் ஆடவர் ஒற்றையர்

# ரபேல் நடால் சம்பியன்



யு.எஸ்.ஓபன் டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயினின் ரபேல் நடால் மகுடம் சூடினார். இது இவரின் 16ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டமாக அமைந்ததுடன் யு.எஸ் ஓபனில் 3ஆவது பட்டமாக அமைந்தது சிறப்புக்குரியது.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்றது. இதன் ஆடவர்கள் ஒற்றையர் இறுதி போட்டியில் ஸ்பெயின் வீரர் ரபேல் நடால் சம்பியன் பட்டம் வென்றார்.

நேற்று அதிகாலை நடந்த ஆடவர் ஒற்றையர் இறுதி போட்டியில் ஸ்பெயின் நாட்டு வீரர்கள் நடால் - அண்டர்சன் இருவரும் மோதினர். இதில் ஆரம்பம் முதலே ரபேல் நடால் அதிரடியாக ஆடினார். அவரது ஒவ்வொரு சேர்விசிலும் அனல் பறந்தது.

ரபேல் நடால் முதல் செட்டை 6-3 என்ற கணக்கில் வென்றார். அதை தொடர்ந்து இரண்டாவது செட்டிலும் 6-3 என்ற கணக்கில் வென்றார்.

இதையடுத்து, நடைபெற்ற 3ஆவது சுற்றில் அண்டர்சன் ஓரளவு போராடினாலும், ரபேல் நடால் தனது நேர்த்தியான ஆட்டத்தால் 6-4 என்ற கணக்கில் மூன்றாவது சுற்றிலும் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றார். இது அவரது 16ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

வெற்றி குறித்து நடால் கூறுகையில், யு.எஸ்., ஓபனில் பட்டம் வென்றது மகிழ்ச்சி காயத்தில் இருந்து மீண்ட பின் இரண்டு கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றது சிறப்பு ஒட்டுமொத்தத்தில் இந்த ஆண்டு எனது சீசனில் சிறந்தது என்றார்

# மெஸ்சி ஹட்ரிக்; பார்சிலோனா வெற்றி



'லா லிகா' கால்பந்து தொடரின் லீக் போட்டியில் மெஸ்சி 'ஹட்ரிக்' கோல் அடித்து கைகொடுக்க, பார்சிலோனா அணி 5-0 என்ற கோல் கணக்கில் எஸ்பான்யால் அணியை வீழ்த்தியது.

இது பார்சிலோனாவுக்கான மெஸ்சி அடித்த 38ஆவது ஹட்ரிக் கோலாக அமைந்தது

ஸ்பெயினில், உள்ளூர் கால்பந்து கழக அணிகள் பங்கேற்கும் 'லா லிகா' தொடர் நடக்கிறது. இதன் லீக் போட்டியில் பார்சிலோனா, எஸ்பன்யால் அணிகள் மோதின.

ஆரம்பத்தில் இருந்து ஆதிக்கம் செலுத்திய பார்சிலோனா அணிக்கு நட்சத்திர வீரர் மெஸ்சி, 'ஹட்ரிக்' கோல் (26, 35, 67ஆவது நிமிடம்) அடித்து கைகொடுத்தார். பிக்கே (87 ஆவது), லூயிஸ் சுவாரஸ் (90) தங்கள் பங்கிற்கு தலா ஒரு கோல் அடித்தனர். ஆட்ட நேர முடிவில் பார்சிலோனா அணி 5-0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

இதேவேளை ரியல் மட்ரிட், லெவான்டே அணிகள் மோதிய மற்றொரு போட்டி 1-1 என்ற கோல்கள் கணக்கில் சமனிலையில் முடிந்தது. தடை காரணமாக இப்போட்டியில் கிறிஸ்டியானோ ரொனால்டோ விளையாடவில்லை.

பார்சிலோனா அணி, இதுவரை விளையாடிய 3 போட்டிகளிலும் வெற்றி பெற்று 9 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

## பாகிஸ்தானில் மீண்டும் களைகட்டுகிறது கிரிக்கெட்

# பாகிஸ்தான் - உலக XI இன்று மோதல்



பாகிஸ்தானுக்கு எதிராக ரி20 கிரிக்கெட் தொடரில் விளையாடுவதற்காக ஐ.சி.சியின் உலக லெவின் அணி பாகிஸ்தான் சென்றடைந்துள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ரி20 போட்டி இன்று லாகூர் கடாபி அரங்கில் நடைபெறுகிறது.

இலங்கை அணி கடந்த 2009ஆம் ஆண்டு பாகிஸ்தான் சென்று விளையாடிய போது தீவிரவாதிகள் இலங்கை வீரர்கள் சென்ற வாகனம் மீது தாக்குதல் நடத்தினர். இதில் 6 இலங்கை வீரர்கள் காயம் அடைந்தனர். 6 பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் இரண்டு பொதுமக்கள் உயிரிழந்தனர்.

இச்சம்பவத்தால் இலங்கை அணி உடனடியாக பாகிஸ்தான் தொடரை ரத்து செய்து சொந்த நாடு திரும்பியது. அதன்பின் எந்த நாடும் பாகிஸ்தான் சென்று விளையாடவில்லை. கடந்த 2015ஆம் ஆண்டு சிம்பாப்வே அணி மட்டும் ரி20 கிரிக்கெட் தொடரில் விளையாடியது.

தற்போது பாகிஸ்தானில் சர்வதேச போட்டிகள் தொடங்குவதற்கான காலம் கனிந்துள்ளது. ஐ.சி.சி. உலக லெவின் அணியை பாகிஸ்தான் அனுப்ப சம்மதம் தெரிவித்துள்ளது. பாகிஸ்தான் - ஐ.சி.சி. உலக லெவின் அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ரி20 கிரிக்கெட் தொடர் நடத்த திட்டமிடப்பட்டது.

அதன்படி முதல் போட்டி இன்று தொடங்குகிறது. 2ஆவது போட்டி 13ஆம் திகதியும் 3ஆவது மற்றும் கடைசி போட்டி 15ஆம் திகதியும் நடக்கிறது.

மூன்று போட்டிகளும் லாகூர் மைதானத்தில் நடக்கிறது. இதற்கான உலக லெவின் அணி ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அணி கடந்த சில தினங்களாக டுபாயில் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தது. இந்நிலையில் இன்று அதிகாலை 2 மணியளவில் 13 வீரர்கள் பாகிஸ்தான் சென்றடைந்தனர். பாகிஸ்தான் சென்றடைந்த அவர்கள் வரலாறு காணாத பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் ஹோட்டலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

போட்டி நடைபெறும் மைதானத்திற்கும் வீரர்கள் தங்கும் ஹோட்டலுக்கும் கடுமையான பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. பொலிஸார் மற்றும் துணை இராணுவத்தினர் உட்பட 9 ஆயிரம் வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர்.

இந்த தொடர் வெற்றிகரமாக முடிவடைந்தால் இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் போன்ற அணிகள் பாகிஸ்தான் சென்று விளையாட வாய்ப்பு இருக்கிறது. இலங்கை அணி ஒரு ரி20 கிரிக்கெட் போட்டியில் விளையாட ஒப்புக் கொண்டுள்ளது.

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை பாலசண்முகம்

(அல்வாய் வடக்கு, அல்வாய்)



தோற்றம்: 24 - 04 - 1931 மறைவு: 10 - 09 - 2017

*அல்வாய் வடக்கு இலட்சிங்கன் ஒல்லையை பிறப்பிடமாகவும், அல்வாய் வடக்கு அரசடி விநாயகர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பாலசண்முகம் நேற்றுமுன்தினம் (10.09.2017) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சிவகாமி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற சுந்தையா - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பாலசண்முகம் நாகரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஜெயபாலன் மற்றும் ஜெயசோதி (சுவிஸ்), கௌரி, கலாவதி, சந்தானலக்சுமி (சுவிஸ்), ஜீவறதி, சிவபாலன் (சுவிஸ்), வினோதினி (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகேவந்தன் (சுவிஸ்), மணிவாசகன், ஸ்ரீதாஸ், முஸ்தபா (சுவிஸ்), அற்புதராசா (யாழ். போதனா வைத்தியசாலை), சுபாசினி (சுவிஸ்), பார்த்தீபன் (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கோவிந்தசாமி, மகேசன் (அதிபர்), வேதநாயகம் (C.T.B) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர் வருண் (சுவிஸ்), தபித்தா (சுவிஸ்), கௌசல்யா, கௌசினி (லண்டன்), மதுசூதனன் (சுவிஸ்), மயூரி, மதுரா, மதுஷிகன், பிருந்தா, பிரியங்கா, றிஸ்வி (சுவிஸ்), றிஸ்வான் (சுவிஸ்), கிருஷாயினி, மதுஷிகா, வருண்சன் (சுவிஸ்), சுருதிசன் (சுவிஸ்), மதிசன் (சுவிஸ்), அக்ஷயா (லண்டன்), விசால் (லண்டன்), நிர்மலன் (பிரதேச செயலகம்-மருதங்கேணி), ரமேஸ் (லண்டன்), விஜயகுமாரன், உமாசங்கர் (லண்டன்), தர்மிகா (ஆசிரியை - எருக்கலம்பிட்டி முஸ்லிம் ம.வி), கனான் ஆகியோரின் பாசமிகு பேரனும் பிருதுவி, தருண் (லண்டன்), விகாஷ் (லண்டன்), மிகாஸ் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.09.2017) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11 மணியளவில் பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

அரசடி விநாயகர் வீதி,
அல்வாய் வடக்கு.

தகவல்:-
குடும்பத்தினர்
0770873431

(C-9603)

# வரதராஜப் பெருமாள் தேர்த் திருவிழா இன்று

வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய இரதோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெறும்.

அதிகாலை 5.30 மணிக்கு 108 கலச அபிஷேகம், விசேட பூசை, கொடிக்கம்ப பூசையைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெறும். அதனைத் தொடர்ந்து ஸ்ரீதேவி, பூமாதேவி சமேத வரதராஜப் பெருமாள் உள்வீதி வலம் வந்து நண்பகல் 12 மணிக்கு தேரில் ஆரோகணிப்பார்.



இரதோற்சவம் முடிவடைந்த பின்னர் பிற்பகல் 1.30 மணிக்கு உறியடி உற்சவம் இடம்பெறும். பிற்பகல் 2 மணிக்கு பச்சை சாத்தப்பட்டு சுவாமி தேரில் இருந்து அவரோகணிப்பார். இந்த வருடம் இரதோற்சவத்திற்கு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து வருகை தரும் ஏராளமான பக்தர்கள் ஒன்றுகூடுவார்கள் என்று எதிர்பார்க்கப் படுவதால் அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பக்தர்களின் வசதி கருதி யாழ். காரைநகர் சேவையில் ஈடுபடும் 782, 785, 786 வழி இலக்க அரச, தனியார் பேருந்துகள் ஆலயம் வரை சேவையில் ஈடுபடவுள்ளன.

ஆலயத்திற்கு அண்மையிலுள்ள மடாலயங்களினும் பொன்னாலைச் சந்தியில் உள்ள மடாலயத்திலும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தாகசாந்தி நிலையங்களும் அமைக்கப் படவுள்ளன. ஆலயத்தில் ஏற்படும் நெருக்கடிகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக பக்தர்கள் தமது துவிச்சக்கர வண்டிகள் உள்ளிட்ட அனைத்து வாகனங்களையும் வாகன பாதுகாப்பு நிலையங்களில் நிறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

சன நெருக்கடியைப் பயன்படுத்தி திருடர்கள் கைவரிசையைக் காட்டக்கூடும் என்பதால் பக்தர்கள் விலை உயர்ந்த தங்க ஆபரணங்கள் அணிந்து வருவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (இ-7)



வல்வெட்டி வேவில் வீரகத்தி விக்னேஸ்வரர் தேவஸ்தான இராஜகோபுர அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.



யாழ் .இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 95 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு நேற்றைய தினம் யாழில் இடம்பெற்றது. நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள பாரதியார் உருவச்சிலை அமைந்துள்ள இடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். இந்திய துணைத் தூதுவர் என்.நடராஜன் உட்பட பலர் கலந்து கொண்டு பாரதியாரின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந் நிகழ்வில் மதகுருமார்கள்,மாணவர்கள், தூதரக அதிகாரிகள் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். அத்துடன் இந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு இந்திய துணைத் தூதுவர் தென்னங்கன்றுகளை வழங்கிவைத்தார். (படங்கள்:-பொ.சோபிகா)

# யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் முத்தமிழ் விழா



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் "முத்தமிழ் விழா" கல்லூரியின் பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம் தலைமையில் நேற்றைய தினம் பேரறிஞர் அழகுசுந்தர தேசிகர் அரங்கில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் சி.பத்மநாதன், திருமதி பத்மலீலா பத்மநாதன் தம்பதியரும் சிறப்பு விருந்தினர்களாக கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் தம்பு சிவசுப்பிரமணியம், பம்பலப்பிட்டி பெல்வோர் சர்வதேச பாடசாலையின் ஆசிரியை செல்வி சௌந்தராம்பிகை கணபதிப்பிள்ளையும் கௌரவ விருந்தினர்களாக வர்த்தக பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதுநிலை விரிவுரையாளர் முருகேசு கௌரிகாந்தனின் நெறியாள்கையில் உருவான வீரசங்கிலி முத்தமிழ் விழா மலர் வெளியீடு இடம்பெற்றதுடன் இம்மலரின் வெளியீட்டுரையினை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி (நிதியும் நிர்வாகமும்) முனைவர் பாலசுப்பிரமணியம் தனபாலன், நயப்புரையினை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி.நந்தகுமார் செல்வஅம்பிகை ஆகியோர் வழங்கியிருந்தனர்.

மேலும் இந்த நிகழ்வில் ஆசிரிய மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம் பெற்றதுடன், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை அரங்கில் ஈழத் திலக்கிய வரலாற்றறிஞர் கௌரவிப்பு இடம்பெற்றது.

இதில் பேராதனைப்பல்கலைக்கழக மேனாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் துரை மனோகரன் தம்பதிகள், யாழ். பல்கலைக் கழக மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா' தம்பதிகள் உட்பட விருந்தினர்கள் பலர் கௌரவிக்கப்பட்டனர். (இ-9)

# வாக்களிப்பு நிலையத்திலேயே வாக்குகளை எண்ண முடிவு

(கொழும்பு)

அடுத்த உள்ளூராட்சித் தேர்தலின் போது, வாக்களிப்பு நிலையத்திலேயே வாக்குகளை எண்ணும் நடவடிக்கைகளை மேற்கொள்ள தேர்தல்கள் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

வாக்குகளை எண்ணும் பணியை திறமையாக முன்னெடுக்கும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வாக்குகளை எண்ணும் பணிக்குத் தேவையான வசதிகளைக் கொண்டதாக வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்கு அனுமதியளிக்கும் வகையில் புதிய தேர்தல் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

கடினமான பகுதிகளில் மாத்திரம், பல வாக்களிப்பு நிலையங்களை ஒருங்கிணைக்கவும், ஒரு இடத்தில் வாக்குகளை எண்ணவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் முடிவுகள், மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிக்கு அனுப்பப்பட்டு, முடிவு மீள் ஆய்வு செய்யப்படும்.

அதன் பின்னரே, தேர்தல் முடிவுகள், தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பப்படும். அதனையடுத்து, தேர்தல் ஆணையம், முடிவுகளை சம்பந்தப்பட்ட பிரிவு வாரியாக அறிவிக்கும்.

இந்த ஆண்டு இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு தொடக்கத்தில் நடத்தப்படவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் இந்த நடைமுறை கடைப்பிடிக்கப்படவுள்ளது. (இ-7)

# ஐங்கரநேசனுக்குரிய மாகாண நிதியில் இரண்டு குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டம்



(யாழ்ப்பாணம்)


முன்னாள் விவசாய அமைச்சரும் வட மாகாணசபை உறுப்பினருமான பொ.ஐங்கரநேசனுக்கு ஒதுக்கப்பட்ட மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியில் இருந்து போரினால் பாதிக்கப்பட்ட இரண்டு குடும்பங்களுக்கு வீடுகள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாகாணசபை உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களால் பரிந்துரைக்கப்படும் அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பதற்கென குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியாக ஆண்டுதோறும் 6 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு வருகிறது.

இந்நிதிக்கு மேலதிகமாக இந்த ஆண்டு பின்தங்கிய மற்றும் தனித்து விடப்பட்ட கிராமங்களுக்கான நிதி ஒதுக்கீடாக ஒவ்வொரு உறுப்பினருக்கும் 2 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பொ.ஐங்கரநேசன் தனக்கு மேலதிகமாக ஒதுக்கப்பட்ட இந்த இரண்டு மில்லியன் ரூபாவையும் போரினால் பாதிக்கப்பட்ட இரண்டு வீடற்ற குடும்பங்களுக்கு தலா 10 இலட்சம் ரூபா என்று பகிர்ந்து ஒதுக்கீடு செய்துள்ளார். வலி.மேற்கு மற்றும் நல்லூர் பிரதேசசபை எல்லைக்குள் இருந்து தெரிவு செய்யப்பட்ட இரு குடும்பங்களில் நல்லூரைச் சேர்ந்த குடும்பத்துக்குரிய வீட்டுக்கான அடிக்கல்லை நேற்று திங்கட்கிழமை பொ.ஐங்கரநேசன் சம்பிரதாயபூர்வமாக நாட்டி வைத்துள்ளார்.

அடிக்கல் நாட்டும் இந் நிகழ்ச்சியில் நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் சு.சுதர்ஜனும் கலந்து கொண்டிருந்தார். (இ-3)





கலைஞர் சங்கமம்-2017 நிகழ்வு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை உதவிப் பிரதேச செயலாளர் செ.நேசரட்ணம் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் வன்ஜா செல்வரட்ணம், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அபிராமி பாலமுரளி ஆகியோர் கலந்து கொண்டனர். கலைஞர்களது நிகழ்வுகளும் கருத்துப் பகிர்வுகளும் அனுபவப் பகிர்வும் இடம் பெற்றன.

# மானிப்பாய் மடத்தடி வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மானிப்பாய் மேற்கு மடத்தடி வீதி கடந்த முப்பது வருடகாலமாக புனரமைப்புச் செய்யப்படாமல் இருப்பதனால் இவ் வீதியால் பயணம் செய்வோர் பெரும் அசௌகரியங்களுக்குட்படுவதாகவும் இவ் வீதியை அண்டிய மதகு பல வருடங்களாக தூர்வாரப்படாமல் மழைநீர் தேங்கி நிற்பதால் டெங்கு நுளம்பு பரவும் அபாயம் இருப்பதாகவும் பிரதேச மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கையெடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-102)

# 95 ஆவது சர்வதேச கூட்டுறவுதின விழா

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை நடத்தும் 95 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் மண்டபத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர். நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக மக்கள் வங்கியின் கன்னாதிட்டி பிராந்திய முகாமையாளர் க.சுசீந்திரன், பொ.மோகன் (கூ.அ.உ.ஆணையாளர்), கௌரவ விருந்தினர்களாக வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் நா.கணேசன், யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் செ.இலகுநாதன், யாழ். மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத் தலைவர் செ.செல்வராசா, யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளன தலைவர் வே.தவச்செல்வன், யாழ். மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் க.மகாதேவன், யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் மு.ஜெ.சுஜீந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# கனகரத்தினம் சுவாமிகளின் வருடக் குருபூசை நாளை

ஸ்ரீ சிவகுருநாதபீட மகாதேவா சுவாமிகள் ஆச்சிரம ஸ்ரீமத் கனகரத்தினம் சுவாமிகளின் வருடக் குருபூசை நாளை புதன் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும். (இ-3)



முன்னாள் யாழ். மாநகர முதல்வர் பொன். சிவபாலனின் நினைவுநாள் நிகழ்வு நேற்றுக்காலை தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் நடைபெற்றபோது .....

# இராசி பலன்

12.09.2017
(ஆவணி 27, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04மணிக்கு
சப்தமி பின்னிரவு 2.12 மணிவரை
கார்த்திகை முற்பகல் 9.54மணிவரை
சுபநேரம் 10.33- 2.03 மணிவரை
இராகுகாலம் 3.03-4.33 மணிவரை
ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி
சித்தாமிர்தம்

வளவன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
விசாகம்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | ராகு, சுக் |
| கேது | | | சூரி செவ் புத |
| | சனி | குரு | |

**மேடம்:** யோசிக்காமல் செய்த வேலைகளில் கூட வெற்றி கிடைக்கும், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**இடபம்:** பெருமைகள் வந்து பெருமானை வழிபட வேண்டியநாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், போசனசுகமுண்டு

**மிதுனம்:** எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு இரு முறை அலையும் நிலை ஏற்படலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்

**கடகம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையை நீங்கள் எளிதாக செய்து முடிப்பீர்கள்.

**சிம்மம்:** கொள்கைப்பிடிப்போடு செயற்படும் நாள், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சுபசெய்திகள் வந்து சேரலாம், போசன நன்மையுண்டு.

**கன்னி:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம்.

**துலாம்:** பெருமானை வழிபட்டு மகத்துவம் காண வேண்டிய நாள், தொழில் கூட்டளிடம் விழிப்புணர்வு அவசியம், மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.

**விருச்சிகம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், வருமானமும் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு:** கடன் சுமை குறைந்த கவலைகள் தீரும் நாள், வியாபார விரோதம் விலகும், கௌரவ மான சம்பவங்கள் இடம்பெறலாம், தொழில் விருத்தியுண்டு.

**மகரம்:** போட்டியாக செயற்பட்ட சிலர் மனம் மாறுவர், சுப செய்திகள் வந்து சேரும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்,

**கும்பம்:** வளர்ச்சிப்பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், பெற்றோர் மீது பிரியம் கூடும் பயணங்களால் பலனுண்டு, சுபசெலவுகள் அதிகரிக்கும் நாள்.

**மீனம்:** பகைவிலகி பாசம் கூடும் நாள், தொழிலில் எதிர்பார்த்த சில நல்ல திருப்பங்களை காணலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

111

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



மாணவி வித்தியாவின் படு கொலை பிரதேசம், மாவட்டம், மாகாணம், நாடு என்ற எல்லை கடந்து சர்வதேச அளவில் முக்கியத்துவமடைந்தது.

இன, மத, மொழி என்ற பேதங்கள் கடந்து வித்தியாவின் கொலைக்கு எதிரான கண்டனங்கள் வலுப்பெற்றன. இந்நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 26.05.2015 அன்று திடீர் குத் தகவல் கொடுக்கப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரி யாழ்ப்பாணம் வருவார் என்ற செய்தி 26.05.2015 அன்று காலைவேளையிலேயே வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திற்கு வருகின்ற ஜனாதிபதி ஆளுநர் அலுவலகத்தில் தங்களைச் சந்திக்க விரும்புகிறார் என்று கூற அவசர அவசரமாக முதளார் என்ற போது, இப்படியிருந்தால்... இந்த நாட்டில் தமிழ ருக்குத் தனிநாடு எதற்கு? என்ற எண்ணம் முதல்வ ருக்கு மட்டுமல்ல தமிழ் மக்கள் அனைவருக்குமே ஏற்பட்டது எனலாம்.

ஜனாதிபதி புங்குடுதீவுக்குச் செல்வது அவ்வளவு நல்லதல்ல. பாதுகாப்பு ஏற்பாடுகள் எதுவும் இல்லை. படைத்தரப்பிற்கே சொல்லாமல் யாழ்ப்பாணத்திற்கு வெளிக்கிட்டு வந்த ஜனாதிபதியை புங்குடுதீவுக்கு அனுப்புவது அவ்வளவு நல்லதல்ல என்று வடக்கின் முதல்வர் உட்பட அங்கு நின்ற பலரும் கருதிக் கொண்டனர்.

இந்தச் செய்தியை மகளிர் விவகாரப் பிர்தியமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனுக்கு தெரியப்படுத்த, ஜனாதிபதி மைத்திரியின் புங்குடுதீவுக்கான விஜயம் தவிர்க்கப்பட்டு வித்தியாவின் தாயும் தமையனும் யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்திற்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஊர்காவற்றுறைப் பொலிஸ் வாகனத்தில் வித்தியாவின் தாயும் தமையனும் ஆளுநர் அலுவலகத்திற்கு அழைத்து






விஜயமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார்.

ஜனாதிபதி மைத்திரியின் யாழ்ப்பாண விஜயம் மிகவும் இரகசியமாக இருந்தது. எனினும் வலம்புரி நாளிதழ் மட்டும் 26.05.2015 அன்று, ஜனாதிபதி மைத்திரி இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வார் என்ற செய்தியை வெளியிட்டிருந்தது.

இலங்கையில் வெளி வரக்கூடிய எந்த ஊடகமும் ஜனாதிபதி மைத்திரியின் யாழ்ப்பாண விஜயம் பற்றி அறியாமல் இருக்குமளவில் ஜனாதிபதியின் யாழ்.விஜயம் மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

பலாலி படைத்தளத்திற்குக் கூட ஜனாதிபதி மைத்திரி யாழ்ப்பாணத்திற்கு வருவார் என்ற செய்தி சொல்லப்படவில்லை. 26.05.2015 அன்று யாழ்ப்பாணத்திற்கு அரசின் முக்கிய பிரமுகர் ஒருவர் விஜயம் செய்வார் என்று மட்டுமே பலாலி படைத்தளத்திற்

## மாணவி வித்தியா கொலை நடந்தது என்ன?

லமைச்சர் விக்னேஸ்வரன் ஆளுநர் அலுவலகத்திற்குச் சென்றார். காலை 9 மணியளவில் ஆளுநர் அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரி வந்தாயிற்று. ஜனாதிபதியும் முதலமைச்சரும் சந்திக்கின்றனர்.

என்ன திடீர் விஜயம் என்று ஜனாதிபதியிடம் முதலமைச்சர் நிலை. மாணவி வித்தியாவின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறுவதற்காக வந்துள்ளேன். புங்குடுதீவிற்குச் செல்லவுள்ளேன் என்றார் ஜனாதிபதி மைத்திரி.

ஜனாதிபதி மைத்திரி இவ்வாறு கூறியபோது வடக்கின் முதல்வருக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஒரு தமிழ் மாணவியின் கொலைக்கு அனுதாபம் தெரிவிக்க இந்த நாட்டின் ஜனாதிபதி யாழ்ப்பாணம் வந்து புங்குடுதீவுக்குச் செல்லவுள்

எனினும் ஜனாதிபதி மைத்திரி புங்குடுதீவுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளை மகளிர் விவகாரப் பிரதியமைச்சர் திருமதி விஜய கலா மகேஸ்வரன் மேற்கொண்டார்.

புங்குடுதீவில் அரச பணி புரியும் ஒருவருக்குத் தகவல் கொடுத்து வித்தியாவின் பெற்றோருக்கு, ஜனாதிபதி மைத்திரி உங்கள் வீட்டிற்கு வரவுள்ளார் என்ற செய்தியைத் தெரியப்படுத்துவதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டன.

எனினும் குறித்த அரச உத்தியோகத்தர் புங்குடுதீவில் உள்ள மாணவி வித்தியாவின் வீட்டிற்குச் சென்ற போது வித்தியாவின் தாயும் தமையனும் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று விட்டதாகக் கூறப்பட்டது.

வரப்பட்டனர்.

ஆளுநர் அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரி காத்திருக்கிறார். வித்தியாவின் தாய் ஆளுநரின் அலுவலகத்திற்குள் நுழைந்தபோது இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எழுந்து இரு கரம் கூப்பி தனது ஆழ்ந்த அனுதாபத்தை வித்தியாவின் தாய்க்குத் தெரிவித்துக் கொண்டார்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரி வித்தியாவின் தாய்க்கு இரு கரம்கூப்பி சோகத்தோடு தனது கவலையை வெளிப்படுத்திய போது அங்கு நின்றவர்களின் இதயங்கள் நெகிழ்ந்து கொண்டன.

மனிதநேயத்தின் முன்னிலையில் இனவாதம் உயிர் துறந்து போனது என்ற நிஜம் அந்த இடத்தில் சில நிமிட நேரங்களை நிசப்தமாக்கியது.

(வளரும்)

-புருசோத்தமன்-

# புரவு பெருமக்கள்



உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் தேசத்தின் உயர்ந்த வரி செலுத்தும் புரவு பெருமக்களைக் கௌரவித்து சிறப்புரிமை
உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ்.பிராந்திய ஆணையாளர் பந்துல ஹப்புதந்திரிகே தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உள்நாட்டு இறைவ
இந்நிகழ்வில் தங்க அட்டைகள், வெள்ளி அட்டைகள் வழங்கப்பட்ட அதேவேளை நன்மதிப்பிற்குரிய வரி செலுத்துநர்கள், வரி முகவர்கள் ஆகியோருக்கு சான்றிதழ்களும் வழங்கி



World Class UK Degree @ICBT Jaffna Campus

EQAA Institutionally Accredited (European Quality Assurance Agency)

Apply now for New Intake 2017

ICBT HND IN BUSINESS MANAGEMENT

Finance/ Marketing/ Human Resource Management

TVEC REGISTERED

Duration
- Full Time: 18 Months (Mon-Fri)
- Part Time: 2 Years (Sat & Sun Evening)

Part Time Entry qualifications: GCE A/L + Work Experience

Cardiff Metropolitan University

BSc (Hons) BUSINESS MANAGEMENT

Offered by Cardiff Metropolitan University, UK

Duration
- 1 year

UGC RECOGNIZED

Entry Qualifications
- Higher National Diploma in Business Management or any other accepted programs.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner Education Service Sector

www.icbt.lk





Study Engineering with The Leader

Apply now for New Intake 2017

EQAA

HND IN CIVIL ENGINEERING

Entry Qualifications
- G.C.E. A/L or G.C.E. O/L + Engineering Foundation

Duration
- 2 Years

TVEC REGISTERED

A/L's → HND → BSc → MSc DEGREE COMPLETION IN SRI LANKA

LIVERPOOL JOHN MOORES UNIVERSITY

BSc (Hons) CIVIL & STRUCTURAL ENGINEERING

UGC RECOGNIZED

ice

Entry Qualifications
- Higher National Diploma in Quantity Surveying or any other accepted programs.


Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner Education Service Sector


(சி-9677)

World Class British IT Degree Programme @ ICBT Jaffna Campus

Apply Now For New Intake 2017

EQAA Institutionally Accredited (European Quality Assurance Agency)

ICBT DUAL HNDs Software Engineering + Computing

Duration 2 Years

Cardiff Metropolitan University

UGC RECOGNIZED

BSc (Hons) SOFTWARE ENGINEERING

Offered by Cardiff Metropolitan University, UK

Duration 1 year

Entry Qualifications
Higher National Diploma in Computing/ IT/ Networking/ Systems Development or any other accepted programs.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes

A/L | O/L → HND → BSc DEGREE COMPLETION IN SRI LANKA

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner Education Service Sector

www.icbt.lk





World Class British Degree @ ICBT Jaffna Campus

Apply now for New Intake 2017

EQAA Institutionally Accredited (European Quality Assurance Agency)

ICBT HND QUANTITY SURVEYING

TVEC REGISTERED

» Entry Qualifications
- G.C.E. A/L or Equivalent
- Certificate in related field

» Duration: 2 Years

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

BIRMINGHAM CITY University

Accredited by RICS

BSc (Hons) Quantity Surveying

» Entry Qualifications
- HND or Equivalent Qualifications Acceptable to the University
- Progression Routes for NDT, NDES(Civil), C&G (Civil), NCT(Civil / QS)

UGC RECOGNIZED

» Duration: 1 Year

Week End Part Time Classes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner Education Service Sector



வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று முற்பகல் 11 மணியளவில் வவுனியா மாவட்ட செயலகத்தில் இணைத் தலைவர்கள் தலைமையில் ஆரம்பமான போது.... (படங்கள்: குருமன்காடு செய்தியாளர்)

# ஒரு மாதத்தில் தீர்வு பெற்றுத் தருவேன்;

## சுகாதாரத் தொண்டர்களுக்கு உறுதிமொழி வழங்கவில்லை

### ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

ஒரு மாதத்தில் தீர்வை பெற்றுத்தருவேன் என சுகாதார தொண்டர்களுக்கு நான் உறுதிமொழி வழங்கவில்லை என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஞா. குணசீலன் தெரிவித்தார்.

வவுனியா ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று முற்பகல் 11 மணியளவில் மாவட்ட செயலகத்தில் ஆரம்பமானது.

இதன்போது சுகாதார தொண்டர்களின் போராட்டத்திற்கான தீர்வு தொடர்பாக அமைச்சர் றிசாத் பதியுதீன் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

சுகாதாரத் தொண்டர்கள் 180 நாட்களுக்கு மேலாக நிரந்தர நியமனத்திற்காக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க நான் முயற்சித்துள்ளேன்.

எனினும் ஒரு மாதத்தில் தீர்வை பெற்றுத்தருவேன் என கூறவில்லை. இதற்கான தீர்வை மத்திய அரசாங்கமே தரவேண்டும். பல சுகாதார தொண்டர்கள் இவ்வாறு தொழில்வாய்ப்பு கேட்டுள்ளார்கள். இவர்கள் பல துறைகளைச் சேர்ந்தவர்கள்.

எனவே இவர்களுக்கான நியமனத்தை வழங்க வேண்டும் என நான் மத்திய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளேன். அதற்கான நடைமுறைகள் இடம் பெறுகின்றது. எதிர்வரும் சில நாட்களில் நிதி அமைச்சரை சந்திக்கவுள்ளேன். இதன் போதும் இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடுவேன் என தெரிவித்தார். (2-250)

# காலபோக நெற்செய்கை தொடர்பான கூட்டங்களின் கால, நேர அட்டவணை

### பூநகரி கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவிப்பு

பூநகரி கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள கமக்கார அமைப்புக்களுக்கான 2017-2018 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கை தொடர்பான அறிவுறுத்தல் கூட்டங்களின் கால நேர அட்டவணையை பூநகரி கமநல சேவை நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மு.இரகுநாதன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், இன்று செவ்வாய்க்கிழமை காலை 9:30 மணிக்கு பிள்ளையார் நகர், பள்ளிக்குடா, சிவபூமி ஆகிய கமக்கார அமைப்புகளுக்குட்பட்ட விவசாயிகளுக்கு அந்தந்த கிராம அலுவலர் அலுவலகத்தில் நடை பெறும்.

இதேவேளை இன்று முற்பகல் 10.30 மணிக்கு அரசபுரம், செம்பன்குன்று ஆகிய கமக்கார அமைப்புகளுக்குட்பட்ட விவசாயிகளுக்கு அந்தந்த பொது மண்டபத்தில் நடைபெறும் என அவர் அறிவித்துள்ளார். (2-84)

# அரசியல் தலைமைகள் நடத்துகின்ற கூட்டங்களில் கலந்துகொள்ள முடியாது

### மத்திய நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவிப்பு

(குருமன்காடு)

அரசியல் தலைமைகளால் நடத்தப்படும் கூட்டங்களுக்கு தம்மால் கலந்து கொள்ள முடியாது என இலங்கை பொறியியலாளர் சங்கம் தீர்மானித்துள்ளதால் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் தாம் கலந்து கொள்ள முடியாதுள்ளதாக மத்திய நீர்ப்பாசன திணைக்களம் வவுனியா மாவட்ட செயலகத்திற்கு அறிவித்துள்ளது.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்ற நிலையில் நீர்ப்பாசனத் திணைக்களம் இவ் அறிவித்தலை வழங்கியுள்ளது.

இவ் அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசியல் தலைமைகளால் நடத்தப்படும் கூட்டங்களுக்கு கலந்துகொள்வதில்லை என இலங்கை பொறியியலாளர் சங்கம் தீர்மானம் எடுத்துள்ளதால் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாதுள்ளதுடன் முன்னேற்ற அறிக்கையையும் சமர்ப்பிக்க முடியாதுள்ளது எனவும் மத்திய நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்போது இணைத் தலைவர்கள் இது அரசியல் கூட்டம் இல்லை எனவும் மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பாக நடைபெறும் கூட்டம் என்பதால் அவர்கள் கலந்துகொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

இதன்போது வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் தெரிவிக்கையில்,

அரச உத்தியோகத்தர்களாக உள்ளமையினால் அரசின் செயற்றிட்டத்திற்கு கலந்துகொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் அவர்கள் அரச தொழிலை உதாசீனம் செய்வதாக கருதப்படும் என தெரிவித்தார்.

இதன்போது குறித்த கூட்டத்தில் நீர்ப்பாசன திணைக்களம் கலந்து கொள்ள வேண்டும் என கடிதம் அனுப்புமாறு இணைத்தலைவர்களால் பணிக்கப்பட்டது. (2-250)

# முதலமைச்சரின் காணி அமைச்சுக்கு தெரியப்படுத்தாமல் வன இலாகாவினர் காணிகளை எல்லையிட முடியாது

### வவுனியா ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் தீர்மானம்

(குருமன்காடு)

வடக்கு மாகாண முதலமைச்சரின் கீழான காணி அமைச்சுக்கு தெரியாமல் வன இலாகாவினர் மக்கள் காணிகளை எல்லையிட முடியாது என வவுனியா ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வன இலாகாவினர் முதலமைச்சரின் காணி அமைச்சுக்கு தெரியப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

மக்கள் குடியிருக்கும் காணிகளில் வன இலாகவினர் எல்லைக்கற்களை இட்டு காணிகளை கையகப்படுத்த முடியாது. வவுனியா மாவட்டத்தின் புதிய வேலர் சின்னக்குளம், சூடுவெந்தபுலவு, மூன்றுமுறிப்பு, கொல்லர் புளியங்குளம் ஆகிய பகுதிகளில் மக்கள் வாழ்விடங்கள் மற்றும் அவர்களது பயிர்ச்செய்கை நிலங்களை வனஇலாகாவினர் தமது காணிகளாக எல்லைப்படுத்தி வருவதாகவும் இதனால் மக்கள் பாதிப்படைந்துள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

இதனை இணைத் தலைவரான அமைச்சர் றிசாத் பதியுதீன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் ஆகியோரும் இதே கருத்தை தெரிவித்தனர். இதனையடுத்து இது குறித்து வன இலாகாவினரிடம் பதில் வினவிய போது,

தாம் மக்களது காணிகளை எல்லையிடவில்லை எனவும், மக்கள் தமது காணிதான் என்பதை வெளிப்படுத்தினால் தாம் அதனை விடுவிப்பதாகவும் வன இலாகா அதிகாரி ரவீந்திரன் தெரிவித்தார்.

இதற்கு அமைவாக மக்களது காணிகளை கையகப்படுத்த முடியாது. அவர்கள் காணிகளை எல்லையிட செல்கின்ற போது வடக்கு முதலமைச்சரின் கீழான காணி அமைச்சுக்கு தெரியப்படுத்த வேண்டும். அந்தந்த பிரதேச செயலாளருடன் இணைந்தே வன இலாகாவினர் காணிகளுக்கு எல்லையிட வேண்டும் எனவும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. (2-250)




# காலபோக நெற்செய்கை தொடர்பான அறிவுறுத்தல் கூட்டங்களின் அட்டவணை

### ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவிப்பு

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழான 2017 - 2018 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கை தொடர்பான அறிவுறுத்தல் கூட்டங்கள் நடைபெறவுள்ள கால நேர அட்டவணையை ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ம. சற்குணநேசன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு சிவநகர் கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கு சிவநகர் பொது நோக்கு மண்டபத்திலும் பிற்பகல் 3 மணிக்கு காதலியார் சமணங்குளம் கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கு காதலியார் சமணங்குளம் பொதுநோக்கு மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாபுரம் கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கும் பிற்பகல் 03 மணிக்கு படிவம் - 3, வித்தியாபுரம் கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளிற்கும் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தில் நடைபெறவுள்ளது என அவர் அறிவித்துள்ளார். (2-15)

# இராணுவச் சீருடை வீதியில் மீட்பு



(குருமன்காடு)

வவுனியா நேக்கவத்தைப் பகுதியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இராணுவத்தினர் பயன்படுத்தும் இராணுவச்சீருடை வீதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா நேக்கவத்தைப் பகுதியில் 9ஆம் ஒழுங்கை வீதியில் இராணுவச் சீருடையில் விசேட அதிரடிப் படையினரின் இலச்சினை என்பன இருப்பதாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் அவற்றை மீட்டதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த இராணுவச் சீருடை மற்றும் விசேட அதிரடிப்படையினரின் இலச்சினை என்பன சட்டவிரோத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப் பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதனடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# சட்டவிரோதமாக ஆற்று மணல் ஏற்றி பயணித்த உழவு இயந்திரங்கள் சிக்கின

### சாரதிகள் நாளை மறுதினம் நீதிமன்றில் ஆஜர்



(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள கல்லாறுக் காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக ஆற்று மணல் ஏற்றிப் பயணித்த உழவு இயந்திரங்கள் 02, மற்றும் இரண்டு சக்கர உழவு இயந்திரம் ஒன்றுமாக மொத்தம் 03, உழவு இயந்திரங்களை கிளிநொச்சி மாவட்ட விசேட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரினால் கைப்பற்றியுள்ளதுடன் அதன் சாரதிகள் மூன்று பேரையும் கைது செய்து தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் மேலதிக நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். எம். என். டீ. சதுரங்கா தெரிவித்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நண்பகல் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து துரித கதியில் செயற்பட்ட நிலையில் சட்டவிரோதமான முறையில் இயற்கை சுற்றுச்சூழலைப் பாதிக்கும் வகையில் ஆற்று மணலை ஏற்றி பயணித்த உழவு இயந்திரங்களை கைப் பற்றியுள்ளனர்.

இச்சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று முடிந்த நிலையில் அவர்கள் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப் பட்டுள்ளதுடன், மீண்டும் நாளை மறுநாள் வியாழக் கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை முற்படுத்தப் படவுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (2-15)

# கமால் குணரத்னவின் விமர்சனத்திற்கு கடுமையான பதில் வழங்கிய ஜனாதிபதி

ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன வெளியிட்ட கருத்துக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதிலடி வழங்கியுள்ளார்.

சமகால அரசாங்கத்தில் ஊனமுற்ற இராணுவத்தினரை துரத்தி துரத்தி தாக்குவதை தனது வாழ்நாளில் பார்த்த மோசமான செயல் என கமால் குணரத்ன அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு மறைமுகமாக ஜனாதிபதி கடுமையான பதில் ஒன்றை நேற்று முன்தினம் வழங்கியிருந்தார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இந்த பதிலை வழங்கியுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக போரிட்டு வெற்றி பெற்ற அனைத்து இராணுவத்தினரையும் அரசாங்கம் பாதுகாக்கும். இந்த கொள்கையை நான் ஏற்கனவே அறிவித்திருந்தேன்.

இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி ஒருவர் தற்போது அரசாங்கத்திற்கு எதிராக அரசியலில் ஈடுபட்டு வருவதை நான் அவதானித்தேன்.

ஊனமுற்ற இராணுவத்தினரை நல்லாட்சி அரசாங்கம் துரத்தி துரத்தி தாக்குவதே தனது வாழ்நாளில் பார்த்த மோசமான செயல் என அந்த இராணுவ அதிகாரி குறிப்பிட்டிருந்தார்.

சமகால அரசாங்கத்திற்கு எதிராக செயற்படும் சதியாளர்களே ஊனமுற்ற இராணுவத்தினரின் பின்னாலிருந்து செயற்படுகின்றனர்.

அரசாங்கத்திற்கு எதிராக ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளே செயற்பட்டனர். ஊனமுற்ற இராணுவத்தினரை ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் அழைத்து வந்து ஆர்ப்பாட்டம் மேற்கொள்ள வைத்தனர்.

அந்த இராணுவத்தினருக்குள் வேறு நபர்களை இணைத்துக் கொண்டு போராட்டத்தை வேறு திசைக்கு திசை திருப்பினார்கள்.

அவை அனைத்து அரசாங்கத்திற்கும் எதிராக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# விண்ணப்பங்கள் கோரல்

வடமாகாண விவசாய நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் நீர்வழங்கல் அமைச்சால் வடமாகாணத்தில் சிறந்த பண்ணையாளர்களுக்கான மாவட்ட ரீதியான தேர்வுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் கால் நடை வளர்ப்பு, பண்ணையாளர்கள் அருகிலுள்ள கால் நடை வைத்திய அலுவலகங்களில் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை பெற்று இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்க முடியும் என்றும் கடந்த மூன்று வருடங்களாக குறித்த போட்டியில் வெற்றியீட்டிய பண்ணையாளர்கள் இந்த வருடத்திற்கான போட்டியில் பங்குபற்ற முடியாது என வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக் களம் அறிவித்துள்ளது. (இ-10-23)


# பெயர் மாற்றம்

யோகபுரம் கிழக்கு யோகபுரத்தில் வசிக்கும் சிவானந்தராசா சிவகுமார் ஆகிய எனது மகளின் பெயர் சிவகுமார் வினுஸ்சிகா என பிறப்பு அத்தாட்சி பத்திரத்தில் பதியப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் அவர் சிவகுமார் வினுஸ்கா என மாற்றி அப்பெயரையே தன் சார்ந்த சகல ஆவணங்களிலும் பயன்படுத்துவார் என இலங்கை சனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு இத்தால் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள,
சிவானந்தராசா சிவகுமார்

(323)





## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு
## அடியார்களால் தவறவிடப்பட்ட பொருட்கள் பற்றிய அறிவித்தல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வளாகத்துள் அடியார்களால் தவறவிடப்பட்டு கண்டெடுக்கப்பட்ட தங்க ஆபரணங்கள் உட்பட்ட சில பொருட்கள் கோவிலின் நிர்வாக அலுவலகத்தின் பாதுகாப்பில் உள்ளன. உரியவர்கள் அடையாளத்தை தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை அறியத் தருகின்றேன். 31.10. 2017 வரை பெற்றுக் கொள்ளப்படாத பொருட்கள் யாவும் கோவிலுக்குரிய சொத்தாகச் சேர்த்துக் கொள்ளப்படும் என்பதையும் அறியத் தருகிறேன்.

(9604)

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

அன்னையின் பணியில்
நா.கோபாலகிருஷ்ணன்
செயலாளர், அறங்காவலர் சபை.



# அறிவித்தல்
## பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோருதல்

மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்

**வடக்கு மாகாண பொதுச் சேவையின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2017**

தமிழ்/சிங்களம் மொழி மூலம் மேற்படி பதவிகளுக்குரிய போட்டிப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2017.10.11 ஆகும்.

விண்ணப்பதாரிகள் **www.np.gov.lk → Recruitment and Exam → Advertisement** என்ற வடக்கு மாகாண இணையத்தளத்தில் மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்ளுக்கு ஆட்சேர்ப்புத் தகவல்களையும், தகைமைகளையும் பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

சி.ஏ.மோகன்ராஸ்,
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.

(சி-9608)





# இணுவில் திருப்பதி ஸ்ரீ வேங்கடேஸ்வரர் ஆலய கிருஷ்ண ஜெயந்திப் பெருவிழாவும் உறியடி உற்சவமும்

(12.09.2017 செவ்வாய்க்கிழமை)

அதிகாலை 6.00 மணி முதல் மூலவருக்கு கலச அபிஷேகம்.
காலை 7.30 மணிக்கு மகா தீபாராதனை, உபசாரம், தொடர்ந்து தர்சனம்.
பகல் 10.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவர்களின் இசை ஆராதனை.
மாலை 4.30 மணிக்கு உற்சவம் ஆரம்பம்.
மாலை 5.00 மணிக்கு நவநீதகிருஷ்ண பகவானுக்கு அலங்கார தீபாராதனை.
மாலை 5.30 மணிக்கு பகவான் உறியடி உற்சவ புறப்பாடு திருவீதியுலா தொடர்ந்து உறியடி உற்சவம் இடம்பெறும்.

மாலை 6.30 மணிக்கு
திருமதி.பிரியதர்சினி வாகீசன் தலைமையில்
நர்த்தனஷேத்திரா மாணவர்கள் வழங்கும்
**நாட்டிய சமர்ப்பணம்**

தொடர்ந்து 8.00 மணிக்கு விசேட தொட்டில் தாலாட்டுப்பூஜை. பெரியாழ்வார் அருளிச் செய்த தாலாட்டுப் பாடல் சமர்ப்பணம் செய்யப்படும்.
இரவு 9.00 மணி முதல் சத்திய சாய் சேவா நிலையம் வழங்கும் கிருஷ்ணகான நாம பஜனை.
நள்ளிரவு 12.00 மணிக்கு விசேட அபிஷேகம், விசேட நைவேத்தியம்.
13.09.2017 அதிகாலை 5.00 மணிக்கு தீர்த்தவாரி.

உபயகாரர்

021 224 2300

ஆலய தர்மகர்த்தா
ச.கணேசலிங்கம்



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில் A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7748 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>தகைமை/தொழில்: *BA*<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/7743 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 28<br>உயரம்: 5'7"தகைமை/<br>தொழில்:Diploma/ஆசிரியர்<br>தொ.இ: B/7749 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: சூரிசெவ் 7 இல்<br>தகைமை/தொழில்: வைத்தியர்<br>தொ.இ: G/7746 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 55செவ் 4 இல்<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்:A/L/கனடா PR<br>தொ.இ: B/7751 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம<br>கி.பா: சூரிசெவ் 5 இல்<br>தகைமை/தொழில்:MBBS<br>தொ.இ: G/7747 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 23செவ் 12 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:B.Eng, M.Eng/<br>பொறியியலாளர் அமெரிக்கா<br>தொ.இ: B/7752 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 5'தகைமை/தொழில்:BSc/<br>விரிவுரையாளர்<br>தொ.இ: G/7753 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரச ஊழியர்களுக்கு அழைப்பாணை



(சென்னை)

போராட்டத்தில் ஈடுபட்டு வரும் ஜாக்டோ ஜியோ சங்கங்களை சேர்ந்த அரச ஊழியர்கள் 85 ஆயிரம் பேருக்கு விளக்கம் கேட்டு அழைப்பாணை அனுப்ப அனைத்து துறைகளுக்கும் தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

7-வது ஊதிய குழுவின் பரிந்துரையை அமுல்படுத்த வேண்டும், புதிய ஓய்வூதிய திட்டத்தை கைவிட வேண்டும் என்பது உட்பட 3 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி கடந்த 7 ஆம் திகதி முதல் ஜாக்டோ ஜியோ அமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் அரசு அதிகாரிகள் நடத்திய பேச்சு வார்த்தையில் 60 சங்கங்களை சேர்ந்த ஊழியர்கள் போராட்டத்தில் பங்கேற்கவில்லை. இவர்கள் தங்களது போராட்டத்தை எதிர் வரும் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி வரை ஒத்தி வைத்தனர்.

இதனால் ஜாக்டோ ஜியோ சங்கம் 2 ஆக உடைந்தது. இதில் 17 சங்கங்களை சேர்ந்த அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பணிக்கு செல்லாமல் ஆர்ப்பாட்டம் - மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களது போராட்டத்துக்கு மதுரை உயர்நீதிமன்ற கிளை தடை விதித்திருந்தாலும் தடையை மீறி போராட்டம் நடைபெற்று வருகிறது.


உயர் நீதிமன்ற உத்தரவை மதிக்கும் வகையில் அரசு ஊழியர்கள் உடனடியாக பணிக்கு திரும்ப வேண்டும் என்று தலைமை செயலாளர் சுற்றறிக்கை வெளியிட்டிருந்தார். ஆனாலும் ஜாக்டோ ஜியோ அமைப்பின் ஒரு பிரிவினர் வேலைக்கு செல்லாமல் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில் நேற்று முன்தினம் எடுத்த கணக்கெடுப்புபடி 43 ஆயிரத்து 450 ஆசிரியர்கள், 41 ஆயிரத்து 550 அரசு ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க விளக்கம் கேட்டு அழைப்பாணை அனுப்ப அனைத்துத்துறை அதிகாரிகளுக்கும் தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

மாவட்ட கலெக்டர்கள் மற்றும் அந்தந்த துறை அதிகாரிகள் இதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு உள்ளனர். (8)

# மேட்டூர் அணை நீர்மட்டம் உயர்வு

## விவசாயிகள் மகிழ்ச்சி



(மேட்டூர்)

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 11 மாதங்களுக்கு பிறகு 75 அடியை தாண்டியுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.


கடந்த சில தினங்களாக உயர்ந்து கொண்டே வந்த மேட்டூர் அணையின் நீர் மட்டம் கணிசமாக குறைந்து கொண்டே வந்தது.

இதனால் விவசாயிகளும், பொதுமக்களும் கவலை அடைந்தனர். இந்நிலையில் கர்நாடகா மற்றும் காவிரீ நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக மேட்டூர் அணை நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இதனால் ஒரே நாளில் 1.82 அடி உயர்ந்து. அணையின் நீர்மட்டம் 75.260 அடியை எட்டி உள்ளது.

பிளிகுண்டு பகுதியில் 25 ஆயிரம் கன அடிக்கு அதிகமாக நீர்வரத்து உள்ளதால் மேட்டூர் அணைக்கான நீர் வரத்து மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அணையின் நீர்மட்டம் தற்போது 75.260 அடியாக உள்ளது. அணையில் 37.395 டி.எம்.சி நீர் உள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 700 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. (8)




சென்னையில் எழும்பூரில் இருந்து கோடம்பாக்கம் வரை நீராவி என்ஜின் ரயில் இயக்கப்பட்டது. இந்த ரயிலை மக்கள் ஆர்வத்துடன் பார்த்து ரசித்தனர்.

# விமானம், ரயில் நிலையங்களில் இரசாயன தாக்குதல் நடத்த சதி

## தமிழகத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்



(சென்னை)

விமானம், ரயில் நிலையங்களில் இரசாயன தாக்குதல் நடத்த பயங்கரவாதிகள் சதித்திட்டம் தீட்டி இருப்பதாக மாநிலங்களுக்கு மத்திய அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சமீபத்தில், அவுஸ்திரேலியாவில் விமானத்தில் இரசாயன தாக்குதல் நடத்த பயங்கரவாதிகள் தீட்டிய சதித்திட்டம், முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் முறியடிக்கப்பட்டது.

அதேபோன்று, இந்தியாவில் விமானம், ரயில்கள் போன்றவற்றில் இரசாயன தாக்குதல் நடத்த பயங்கரவாதிகள் திட்டமிட்டு இருப்பதாக உளவுத்துறைக்கு தகவல் கிடைத்துள்ளது.

வன்பொருள் கடைகளில் கிடைக்கும் பொருட்களை கொண்டு, கொடிய நச்சு வாயுக்களை உருவாக்குவதே இரசாயன தாக்குதல் ஆகும்.

விமானம், மெட்ரோ ரயில் போன்ற மூடப்பட்ட கதவுகளைக் கொண்ட வாகனங்களில், இந்த நச்சு வாயுக்கள் பெரும் ஆபத்தை விளைவிக்கும்.

இந்த கொடிய நச்சு வாயுக்களை உருவாக்க இரசாயன பவுடர், பூச்சிக்கொல்லி மருந்து, திராவகம் போன்ற பொருட்கள் பயன்படுத்தப்பட வாய்ப்புள்ளது.

- இப்பொருட்களை மருந்துகள், குளிர் பானங்கள், வீட்டை சுத்தப்படுத்தும் பொருட்கள் என்ற போர்வையில் விமானம் மற்றும் மெட்ரோ ரயிலுக்குள் எடுத்துச்சென்று கொடிய நச்சு வாயுக்களை உருவாக்க முடியும்.


எனவே, பயணிகளின் உடைமைகளை சோதனை செய்யும் பொறுப்பில் உள்ள அனைத்து பாதுகாப்பு அமைப்புகளும் இத்தகைய பொருட்களை கண்டறிந்து தடுக்க வேண்டும் என்று மத்திய பாதுகாப்பு அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த விடயத்தில், அனைத்து மாநில அரசுகளும் எச்சரிக்கையாக இருக்குமாறு அனைத்து மாநில பொலிஸ் டி.ஜி.பிக்களையும் மத்திய உளவுத்துறை உஷார்படுத்தியுள்ளது.

இதையடுத்து, தமிழ் நாட்டில் விமானம், ரயில் நிலையங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பயணிகளின் உடைமைகள் பலத்த சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றன. (8)

# இரு தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

(ஶ்ரீநகர்)



ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் 2 தீவிரவாதிகள் பாதுகாப்பு படையினரால் சுட்டுக்கொல்லட்டனர்.

குல்காமில் தீவிரவாதிகள் சிலர் பதுங்கியிருப்பதாக தகவல் வந்ததையடுத்து பாதுகாப்பு படையினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது அவர்களை நோக்கி தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டனர். பாதுகாப்பு படையினரும் அதிரடியாக பதில் தாக்குதலில் ஈடுபட்டனர். 2 மணிநேரம் நீடித்த கடும் துப்பாக்கி சண்டையில் ஹிஜ்புல் முஜாஹிதீன் அமைப்பைச் சேர்ந்த 2 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

தீவிரவாதி ஒருவன் உயிருடன் பிடிப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. குல்காமில் மேலும் தீவிரவாதிகள் பதுங்கி இருக்கலாம்என்பதால்தேடுதல் வேட்டையில் பாதுகாப்பு படையினர் ஈடுபட்டுள்ளனர். (8)

# கணவர் நடராஜன் உடல் நலக்குறைவு சசிகலா பரோலில் வர விரும்பவில்லை

(பெங்களூர்)

உடல்நிலை சரியில்லாமல் உள்ள கணவரை பார்க்க சசிகலா பரோல் கேட்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சசிகலா பரோலில் வர விரும்பவில்லை.

சசிகலாவின் கணவர் நடராஜன் உடல்நலக் குறைவு காரணமாக சென்னையில் உள்ள ஒரு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு அறுவை சிகிச்சை செய்ய லண்டனில் இருந்து பிரபல வைத்தியர் ரீலா அகமது சென்னை வந்துள்ளார்.

உடல்நலக் குறைவால் அனுமதிக்கப்பட்டுள்ள நடராஜன் தனது மனைவி சசிகலாவை சந்திக்க விருப்பம் தெரிவித்து இருந்தார்.

இதனால் சசிகலா பரோலில் வர வாய்ப்புகள் உள்ளதாக கூறப்பட்டது.

கர்நாடக சிறை விதிகளின் படி ஒரு கைதி 3 மாதம் சிறையில் இருந்தால் அதற்கு பிறகு பரோலில் செல்ல அனுமதி உண்டு.

இதனால் உடல்நிலை சரியில்லாமல் உள்ள கணவரை பார்க்க சசிகலா பரோல் கேட்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் சசிகலா பரோல் கேட்கவில்லை. (8)

# யாழ்ப்பாண - கிளிநொச்சி

# நீர்வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம்

(நேற்றைய தொடர்ச்சி...)

இதில் உள்ள ஒரே ஒரு பாதகமான தன்மை சுத்திகரிப்பு ஆலை அமைய உள்ள ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் படகு அமைப்பது சிரமமானதும் தவிர்க்கப்பட வேண்டியுள்ளதாகும்.

இது தவிர அவுஸ்திரேலியாவின் பேத் நகரில் கழிவு அகற்றி சுத்திகரிப்பு செய்யப்படும் நீரானது மீண்டும் நிலத்தடிக்கு செலுத்தப்பட்டு நிலத்தடி நீர் வில்லையின் மட்டம் உயர்த்தப்படுகிறது.

இது விவசாயத் தேவைகளுக்கு பயன்படுத்தக் கூடியதாக உள்ளது. இயற்கையை தனது தேவைக்கு சாதகமாக பயன்படுத்தினால் சூழலின் சமச்சீர் கெடுவதில்லை. இதற்கு மாற்றாக இயற்கை அமைவுக்கு பாதகமாக செயற்படுவது மட்டுமே பூமியில் வாழும் ஜீவராசிகளின் இருப்புக்கு அச்சுறுத்தல் ஆகும், உ+ம்:- காடழிப்பால் மண் அரிப்பு, மண் சரிவு, புல்வளராமை, புல் இல்லாத இடத்து தாவர உண்ணிகள் அற்றுப் போதல், தாவர உண்ணி இல்லாதவிடத்து மாமிச உண்ணியாகிய புலி, சிங்கம் இல்லாமல் போதல் போன்றதல்ல இச்செயற்பாடுகள்.

இதனால் ஏற்படப் போகும் நன்மைகள்

1. தூய குடிநீர் விநியோகம்
2. நேரடிமறைமுக தொழில் வாய்ப்பு
3. நிலத்தடி நீரில் உள்ள இரசாயன பொருட்கள் செறிவு குறைவடைதல்
4. தொழில் சார்ந்த கருத் திட்டங்களுக்கு நீர் விநியோகம்
5. சூரியகல மின் உற்பத்தி
6. இயற்கை, செயற்கை நீரோட்டங்கள் சங்கமத்தில் மீன்கள் விருத்தி
7. குளத்து நீர் எடுக்கப்படாத இடத்து விவசாயத் தேவைக்கான நீருக்கு அச்சுறுத்தலின்மை. அத்துடன் நீரின் ஒரு பகுதி நிலத்தடி நீரில் சேர்வது.

கடல் நீரினை உவர் நீக்கி குடிநீர் ஆக்கும் திட்டத்தில் உள்ளெடுக்கப்படும் நீரின் 47% குடிநீராக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு விநியோகிக்கப்படுகிறது. மிகுதி 53% வடிகட்டப்பட்டு அதிலுள்ள sludge கூழ் பதார்த்தங்கள் நீக்கப்படும் போதும் மீள் கடலினுள் செலுத்தப்படும் போது நீரில் உப்புச் செறிவு குறைவது ஆய்வுகள் மூலம் நிறுவப்பட்டுள்ளது. எனவே இத்திட்டத்தினால் இவ்வாறான சுத்திகரிப்பு நடைபெற்று நீர்விநியோக அனுகூலத்தை பெறும் மக்



களுக்கு உள்ள உரிமை குடாநாட்டுமக்களுக்குகிடைக்க பெற உள்ள வரப் பிரசாதம் இதற்கு தடையாய் இருப்பது அறிவீனம்.

உண்மையில் இந்த சுத்திகரிப்பு சார் தொழில் நுட்ப அறிவு மிக சிறிய அளவே என்னிடத்தில் உள்ளது. இதில் பல குறைபாடுகள் இருக்கலாம். எனவே துறைசார் வல்லுநர்களின் விளக்கங்கள் மூலம் என்னையும் இத்திட்டத்தினால் நன்மை அடைய போகும் பொது மக்களையும் இத்திட்டத்துடன் தொடர்பு கொண்டு மக்களுக்கு மகத்தான சேவை புரியும் அதிகாரிகளையும் ஊக்குவிக்கும் வகையில் சூழலுக்கோ பௌதீக வளத்திற்கோ பாதிப்பு ஏற்படாத இத்திட்டத்தின் அனுகூலங்கள் இப் பந்தியில் கூறப்பட்டுள்ளது. இதில் பிரதிகூலம் இருப்பின் துறை சார்வல்லுநர்கள் தயை கூர்ந்து பத்திரிகை, கட்டுரை வாயிலாக எமது சமூக நலன் கருதி விளக்கும் படி பணிவுடன் வேண்டுகிறேன்.

18.06.2017 அன்று தினக்குரல் பத்திரிகையில் பிரசுரமான சில்லாலையூர் ஜெ.அலக்ஸ் அவர்களின் கட்டுரையில் (கடல் நீரை குடிநீராக்கும்புதிய அணுகுமுறை மிகக் குறைந்த செலவில் பெற்றுக் கொள்ளக்கூடிய கிரபீன் ஒட்சைட் வடிதாளின் இருபுறமும் எபொக்சினை பூச்சினைப் பிரயோகித்து மிக நுண்ணிய மூலக்கூற்றுப் பருமன் கொண்ட துவாரம் வழியே செல்லும் நீர் தனது பௌதீக இயல்பை இழந்து போவது கண்டறியப்பட்டுள்ளது. இது தொடர்பாக எபொக்சினை பூச்சினைப் பூசப்பட்ட தாளின் பாவனைக்காலம் வர்த்தக முதலீடுகள் ஈர்க்கக் கூடிய பண்புகள் பற்றிய சாத்தியப்பாடு பற்றிய அனுகூலமான விடை கிடைக்குமாயின் கடல் நீரினை மிகக் குறைந்த செலவில் குடிநீராகும் சாத்தியப்பாடு உள்ளது. இதன் ஆங்கில மூலத்தை பெற்றுக் கொள்ள முடியாத காரணத்தினால் இதனை பூரணமாக விளக்க முடியாமைக்கு வருந்துகிறேன்.

இரணைமடுக் குளத்தின் அணையினை 2' உயர்த்தி தற்போது உள்ள 106,500 அடியை 120,000 ஏக்கர் அடியாக உயர்த்தும் போது நீர் ஏந்து பிரதேசம் பலநூறு ஏக்கர் நிலப்பரப்புக்களால் அதிகரிக்கும். இதனால் இப்பிரதேசத்திலுள்ள பயன்தரு மரங்கள் பட்டுப் போவதுடன் சூரிய வெளிச்சத்தினால் ஆவியாகும் நீரின் அளவு தவிர்க்க முடியாதது. 120000 ஏக்கர் அடி நீரில் சுமார் 25% மான ஏக்கர் அடி நீர் மட்டுமே பயன்பாட்டிற்கு உரியதாகும். மிகுதி 75% மும் நீராவியாகவும் நிலத்தடி நீராகவும் மாறுவதை எவராலும் தடுக்க முடியாது.

(முற்றும்)

**க. ஸ்ரீராஜகுமார்**

**இக்கட்டுரை தொடர்பில் வாசகர்கள் தமது கருத்துக்களை பதிவு செய்து கொள்ள முடியும். (ஆ-ர்)**

## சிரியாவில் ரஷ்யப் படைகள் கண்மூடித்தனமாக தாக்குதல்

### 34அப்பாவிபொதுமக்கள்பரிதாபமாகப்பலி!

(பெய்ரூட்)

சிரியாவில் ரஷ்ய படை யினர் நடத்திய விமானப் படை தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 34 பேர் கொல்லப்பட்டனர். சிரியாவில் கடந்த 2011-ம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது.

இதுவரை அங்கு 3 இலட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளை அழிக்கும் நடவடிக்கையில் ரஷ்யாவும் இணைந்து செயற்பட்டு வருகிறது. இதுபோன்ற தாக்குதல் களில் அப்பாவி பொது மக்களும் கொல்லப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், சிரியா வில் ரஷ்யா வின் விமான படை தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 34 பேர் கொல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து ரஷ்ய பாது காப்பு அமைச்சகம் கூறுகை யில், சிரியாவின் டேர் எஸ்ஸர் நகரில் ஐ.எஸ். தீவிர வாதி களை குறிவைத்து ரஷ்ய விமானப்படை தாக்குதலை நடத்தியது. ஆனால், இந்த தாக்குதலில் அப்பாவி பொது மக்கள் படுகொலைக்கு ஆளாகினர். இதில் 9 குழந்தைகள் உட்பட 34 பேர் கொல்லப்பட்டனர். அங்குள்ள ஆற்றில் இருந்து தொடர்ந்து சட லங்கள் மீட்கப்பட்டு வருகின்றன. மேலும் 12 பேர் படு காயம் அடைந்துள்ளனர். தொடர்ந்து தீவிரவாதிகளை அழிக்கும் நடவடிக் கைகள் தொடரும் என தெரிவித்துள்ளது. (8)

## அர்ஜூன் அலோசியஸிற்கு மீண்டும் அழைப்பாணை

(கொழும்பு)

பேர்பெர்ச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜூன் அலோசியஸை நாளை புதன் கிழமை சர்ச்சைக்குரிய பிணை முறி விநியோகம் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவில்முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

பேர்பெர்ச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்-வாங்கல்கள் தொடர்பிலும் தன்மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை தெளிவுபடுத்தும் நோக்கிலும் விசேட அறிக்கை ஒன்றை வழங்க நேற்றுடன் அவர் 5 நாட்களாக குற்றப் புலனாய்வு பிரிவினர் முன்னிலையில் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பொன்சேகாவின் கருத்து தொடர்பாக உடன் கவனம் செலுத்துங்கள்-ஐ.தே.க

(கொழும்பு)

பீல்ட் மார்ஷல் அமைச்சர் சரத் பொன்சேகா யுத்தக்குற்றம் தொடர்பில் தெரிவித்துள்ள கருத்து தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் உடன் கவனம் செலுத்த வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பிரதான அமைப்பாளர் சி.வை.பி.ராம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக் கையில்,

இலங்கையில் நடந்த இறுதி யுத்தத்தில் மனித உரிமைகளை மீறும் வகையில் யுத்தக்குற்றங்கள் இடம்பெற்றுள்ளதாக பல்வேறு குற்றச்சாட்டுகள் காணப்படுகின் றன. சர்வதேச ரீதியாகவும் அழுத் தங்கள் தொடர்ந்தும் உள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அரசாங்கம் பொறுப்புக்கூறுவதை வலியுறுத் தும் வகையிலான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டு இரண்டு ஆண்டுகள் கால அவகாசமும் வழங்கப் பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில் பாதிக்கப்பட்ட தரப்பான தமிழ் மக்கள் தமக்கான நியாயம் கிடைக்கும் என இன்றும் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கின்றார்கள். இந்நாட்டின் தேசிய இனமான தமிழனத்துக்கு நியாயம் வழங்க வேண்டியதிலிருந்து பொறுப்புள்ள அரசாங்கம் விலகி நிற்கமுடியாது.

ஆகவே, அரசாங்கம் அதற் குரிய நடவடிக்கைகளின் ஓர் அங்க மாக குற்றங்கள் இழைக்கப்பட் டிருந்தால் அது குறித்து உரிய முறையில் விசாரணைகள் முதலில் நடத்தப்படவேண்டும். உண் மைகள் கண்டறியப்பட்டு அதற் குரிய வகையில் சட்ட ரீதியாக நீதி நிலைநாட்டப்படவேண்டும்.

இந்தச் செயற்பாட்டை முன்னெடுப்பதாயின் உரிய சாட்சியங்கள் அவசியமாகின்றன. ஏற்கனவே சர்வதேச விசாரணை யொன்றின் மூலம் தான் இராணு வத்தினரின் புனிதத்தினை வெளிப் படுத்த முடியும் என்க் கூறிவந்த சரத் பொன்சேகா, தற்போது பிரேஸிலுக்கான முன்னாள் தூதுவராக செயற்பட்ட ஜெனரல் ஜெகத் ஜெய சூரியவுக்கு எதிரான நியாயமான விசாரணை முன்னெடுக்கப்பட் டால், அதில் சாட்சியமளிக்கத் தயாராக உள்ளதாக தெரிவித் துள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான பீல்ட் மார் ஷல் சரத்பொன்சேகாவுக்கு எதிராக பிரேஸிலில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆகவே, ஜெகத் ஜெயசூரிய விடயத்தில் பொன்சேகா குறிப்பிட்ட கருத்துகள் தொடர்பாக ஜனாதிபதியும் பிரதமரும் உடனடியாகக் கவனம் செலுத்தி என்ன நடந்துள்ளது என்பதை அறிய வேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-7)




| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 100 | 80 | 100 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 140 | 100 | 100 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 250 | 240 | 150 | 300 | 300 | 250 |
| தக்காளி | 200 | 200 | 110 | 200 | 200 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 40 | 80 | 60 | 80 |
| கோவா | 120 | 80 | 40 | 100 | 80 | 120 |
| கரட் | 320 | 100 | 100 | 200 | 160 | 200 |
| பூசணி | 60 | 40 | 25 | 40 | 60 | 50 |
| புடோல் | 120 | 80 | 50 | 80 | 80 | 120 |
| வாழைக்காய் | 120 | 100 | 70 | 100 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 240 | 200 | 300 | 400 | 200 |
| பெரிய வெங்காயம் | 200 | 130 | 220 | 150 | 160 | 140 |
| பாகற்காய் | 300 | 200 | 150 | 280 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 50 | 50 | 50 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 80 | 100 | 120 | 140 |
| பயற்றங்காய் | 100 | 150 | 50 | 120 | 160 | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 40 | 120 | 160 | 120 |
| பீற்றூட் | 30 | 60 | 25 | 40 | 80 | 60 |
| கறிமிளகாய் | 120 | 120 | 70 | 120 | 160 | 160 |
| முருங்கைக்காய் | 20 | 50 | 40 | 60 | 80 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 100 | 160 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 50 | 100 | 80 | 100 | 120 | 140 |
| கீரை-1பிடி | 20 | 40 | 20 | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 300 | 350 | 250 | 300 | 300 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 80 | 60 | 80 | 50-70 | 70 |
| இராசவள்ளி | 50 | 250 | 200 | - | 500 | 300 |
| வெங்காயப்பூ | - | 200 | 150 | 240 | 200 | - |
| முள்ளங்கி | - | 60 | 30 | 80 | 60 | 80 |
| பொல்லாங்காணி | - | 40 | 30 | 30 | 40 | 40 |
| வல்லாரை | - | 15 | 15 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 40 | 60 | 30 | 60 | 40 | 80 |

# ஐ.நாவின் தடைகளை மீறியது இலங்கை!

## கண்காணிப்புக்குழு குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடகொரியாவுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள ஐ.நாவின் பொருளாதாரத் தடையை இலங்கை உள்ளிட்ட சில நாடுகள் மீறியிருப்பதாக ஐ.நா. குற்றஞ்சாட்டியுள்ளது. வடகொரியா மீது கடந்த ஆண்டு செப்டெம்பர் 5 ஆம் திகதி விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளைக் கண்காணிக்க நியமிக்கப்பட்ட ஐ.நாவின் ஏற்றுமதி கண்காணிப்பு நிபுணர்கள் ஐ.நாவுக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் ஓகஸ்ட் மாத முற்பகுதியுடன் முடிந்த கடந்த ஆறு மாதகாலத்தில் இலங்கை, சீனா, இந்தியா, மலேசியா உள்ளிட்ட நாடுகளுக்கு, ஐ.நாவின் தடைகளை மீறி வடகொரியா 270 மில்லியன் டொலர் பெறுமதியான நிலக்கரி, இரும்பு மற்றும் பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது.

ஐ.நாவின் தகவல்களின் படி வடகொரியாவுக்கு எதிரான தடைகளை மீறி 11 நாடுகள் கடந்த ஆண்டு ஒக்டோபர் தொடக்கம் இந்த ஆண்டு ஏப்ரல் வரையான காலத்தில் 44,344,912 டொலர் பெறுமதியான உருக்கு மற்றும் இரும்பை இறக்குமதி செய்துள்ளன.

இலங்கை மாத்திரம் 1,860,516 டொலர் பெறுமதியான உருக்கு மற்றும் இரும்பு என்பனவற்றை வடகொரியாவில் இருந்து இந்தக் காலப்பகுதியில் இறக்குமதி செய்துள்ளது.

வடகொரியாவின் கிம் யாங் உன் அரசாங்கம் ஐ.நாவின் ஆயுத தடை மற்றும் கப்பல் போக்குவரத்து, நிதி கட்டுப்பாடுகளை தொடர்ந்து மீறி வருவதாகவும் ஐ.நா. நிபுணர்களின் 111 பக்க அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வடகொரியாவில் இருந்து உருக்கு, இரும்பு போன்ற பொருட்களை இறக்குமதி செய்து இலங்கை, பார்படோஸ், சீனா, கோஸ்டாரிக்கா, பிரான்ஸ், எல்சல்வடோர், இந்தியா, இந்தோனேசியா, அயர்லாந்து, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் மீறியிருப்பதாகவும் ஐ.நா. அறிக்கை கூறியுள்ளது.

வடகொரியாவிடம் இருந்து இலங்கை கடந்த ஆண்டு ஒக்டோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களிலும் இந்த ஆண்டு ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களிலும் உருக்கை இறக்குமதி செய்துள்ளது.

இதைவிட, இந்த ஆண்டு ஜனவரி, பெப்ரவரி மாதங்களில், சட்டவிரோதமாக வடகொரியாவிடம் இருந்து இலங்கை 32,184 டொலர் பெறுமதியான செம்பையும் இறக்குமதி செய்துள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதைவிட, வடகொரியாவுக்காக கடற்படைக் கப்பல்களை நவீனப்படுத்தும் கிறீன் பைன் என்ற நிறுவனத்தின் இரண்டு பிரதிநிதிகள், இலங்கை வந்த கப்பல்களை விற்க முயற்சித்ததாகவும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அங்கோலாவில் கடற்படைக் கப்பல்களை நவீனமயப்படுத்துவதும் ஐ.நாவின் தடைகளை மீறும் செயல் என்று ஐ.நா. அறிக்கை கூறியுள்ளது. (இ-7)

# வியட்நாமில் தடுத்து வைக்கப்பட்ட இலங்கையின் படைத் தளபதிகள்

இலங்கையின் ஓய்வு பெற்ற மூத்த படைத் தளபதிகளும் அவர்களின் மனைவிமாரும், வியட்நாமில் உள்ள தீவு ஒன்றில் கடந்த வாரம் தடுத்து வைக்கப்பட்டதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிரிகேடியர் மற்றும் அதற்கு மேற்பட்ட பதவி நிலையில் இருந்து ஓய்வு பெற்ற படை அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந்த, நான்கு ஜெனரல்கள், மூத்த படை அதிகாரிகள் மற்றும் அவர்களின் மனைவிமார் என 65 பேர் வியட்நாமுக்கு சுற்றுலா சென்றிருந்தனர்.

சைகூனில் உள்ள மூன்று நட்சத்திர விடுதி ஒன்றில் தங்குமிட வசதிகளுடன் இந்தப் பயணத்துக்கு 120,000 ரூபாவை பயண முகவர் அறவிட்டிருந்தார்.

இதையடுத்து, முன்னாள் படை அதிகாரிகள் மற்றும் அவர்களின் மனைவிமார் என 65 பேர் ஹனோய் சென்று மூன்று நட்சத்திர விடுதி ஒன்றில் தங்கியிருந்தனர். அங்கிருந்து சாய் கூனில் உள்ள தீவு ஒன்றிலுள்ள சிறிய தீவில் உள்ள விடுதிக்கு கடந்தவாரம் சென்றனர்.

எனினும், அவர்களுக்கு அங்கு தங்குவதற்கு விடுதி நிர்வாகம் அனுமதி மறுத்துவிட்டது. ஆளுக்குத் தலா 100 டொலரை செலுத்தாவிடின், தீவை விட்டு வெளியேறுவதற்கு படகு தர முடியாது என்றும் விடுதி நிர்வாகம் கூறியுள்ளது.

பயண முகவர் பின்னர், கட்டணத்தை செலுத்துவார் என்று முன்னாள் படை அதிகாரிகள் கூறிய போதும், விடுதி நிர்வாகம் அதனை நிராகரித்து விட்டது.

தீவை விட்டு வெளியேறுவதானால், 100 டொலர்களை செலுத்த வேண்டும் என்று அவர்களின் கடவுச்சீட்டை வைத்துக் கொண்டு விடுதி நிர்வாகம் மிரட்டியுள்ளது.

இந்த நிலையில், அவர்கள் வியட்நாமில் உள்ள இலங்கை தூதரகத்துடன் தொடர்பு கொண்டு முறையிட்டனர். இதையடுத்து, இலங்கைத் தூதரகம் தலையிட்டு, கட்டணம் செலுத்துவதற்கு தாம் பொறுப்பேற்பதாக கூறியதையடுத்து, அனைவரும் விடுவிக்கப்பட்டு, கொழும்பு திரும்பினர்.

இந்தக் குழுவில் இருந்த முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சிறிலால் வீரசூரிய இது குறித்து இராணுவத் தலைமையகத்திடமும் வெளிவிவகார அமைச்சிடமும் முறையிட்டதை அடுத்து, உடனடியாகவே, சம்பந்தப்பட்ட பயண முகவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை இந்தப் பயணத்தின் போது, சுற்றுலா சென்றவர்களில் ஒருவரின் தங்கச் சங்கலி, ஹனோயில் திருடப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

அதேவேளை, விடுதி பணியாளர்களால் தாம் மனிதாபிமானமற்ற முறையில் அவமானப்படுத்தப்பட்டதாக, முன்னாள் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# சரத்பொன்சேகாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இராணுவ ஒன்றியத்தின் தலைவர் இராஜினாமா

மாத்தளை, பல்லேபொல இராணுவ ஒன்றியத்தின் தலைவர் டபிள்யூ.ஏ.ஜி. சரத் குணவர்தன நேற்று முன்தினம் தனது பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார்.

அமைச்சர் சரத் பொன்சேகா கடந்த சில தினங்களுக்கு முன்னர் விடுத்த அறிவிப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக இவர் இவ்வாறு இராஜினாமா செய்துள்ளார்.

ஊடகங்களுக்கு தனது இராஜினாமா தொடர்பில் அறிவிப்புச் செய்த பின்னர், கருத்துத் தெரிவிக்கையில், இராணுவ சேவை அதிகார சபையின் தலைமைப் பதவியிலிருந்து சரத்பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா விலக வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

நாடு முழுவதிலுமுள்ள இராணுவ ஒன்றியங்களின் அதிகாரிகளும் இவ்வாறு இராஜினாமா செய்யுமாறும், மாத்தளை பல்லேபொல இராணுவ ஒன்றியத்தின் தலைவர் டபிள்யூ.ஏ.ஜி. சரத் குணவர்தன வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

# உடைகள், சூழ்நிலைகள்

முன்பெல்லாம் எத்தகைய சந்தர்ப்பங்களுக்கு என்ன உடை அணிய வேண்டும் என்கிற சிந்தனையோ தெளிவோ எனக்கு இருந்ததில்லை. பூஜைக்கு ஜீன்சும் ஹோட்டலில் நடக்கும் விருந்துக்கு வேட்டியும் சம்பந்த மில்லாமல் அணிந்து சென்றது உண்டு.

இவற்றுக்கெல்லாம் உச்சமாக ஒரு முறை என் மனைவியை ஊருக்கு வழியனுப்ப ரயில் நிலையத்துக்குப் போன போது, இரவு நேரம் தானே யார் கவனிக்கப் போகிறார்கள் என்று மப்டியில் (லுங்கி சட்டை) செல்ல ரயில் நிலை யத்தில் மரியாதைக்குரிய ஏகப்பட்ட பேரைத் தற்செயலாகச் சந்திக்க நேர்ந்துவிட வெட்கம் என்னைப் பிடுங்கித் தின்றது.

சிலர், இழவு நடந்த வீட்டிற்கு வெள்ளையும் சொள்ளையுமாகவும் டிப்டொப்பாகவும் உடை யணிகிறார்கள். இன்னும் சிலரோ நல்ல உடை கள் இருந்தும் கந்தல் கோலத்தில் திருமணங்களில் கலந்து கொள்கிறார்கள்.

எவ்வளவு பக்குவப்பட்ட மனம் உடையவர்க ளும் சரி உள்ளத்தைப் பார்க்குமுன் உடை யைத்தான் பார்க்கிறார்கள்; ஆமாம். இந்த உலகம் எடுத்த எடுப்பில் ஏற இறங்கப் பார்க்கத் தான் கற்று வைத்திருக்கிறது. உடையில் என்ன இருக்கு? மானத்தை மறைக்க ஏதோ ஒண்ணு என்று தத்துவம் பேசுகிறவர்கள் இனி சமூகத்தைப் புதுக் கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டிய கால கட்டம் இது.

ஏதோ நான் சொல்வதை வைத்துக் கொண்டு இந்த இந்த சந்தர்ப்பத்திற்கு இந்த இந்த உடை அணிய வேண்டும் என்றால் ஏகப் பட்ட உடைகளல்லவா வேண்டும்? என்று மலைக்க வேண்டியது இல்லை. இருப்ப வற்றை ரகம் பிரித்துச் சரியான சூழலுக்கு ஏற்ற சரியான உடைகளை அணிந்தால் அதுவே பெரிய விடயம்.

ஏழ்மை நிறைந்த சூழலில் சென்று கலக்கும் போது படாடோபம் காட்டுவதும், வேலை கேட்டுப் போகும் போது ஆர்ப்பாட்டமான உடைகளை அணிவதும் உதவி கேட்டுப் போகும் போது பரிதாபமாகப் போய் நிற்பதும் காரியத்தையே கெடுத்துவிடும்.

அசத்தலாகப் போக வேண்டிய இடத்தில் அசத்தலாகப் போக வேண்டும். ஆர்ப்பாட்டமாகப் போக வேண்டிய இடத்தில் அடக்கி வாசிக்க வேண்டியதற்கு அடக்கி வாசிக்க வேண்டும்.

நல்ல துணிகளெல்லாம் துவைக்கக் கிடக் கின்றன. இருக்கிறவற்றைப் போட்டுக் கொண் டால் சரி என எண்ணாமல் நல்ல உடை ஒன்றை எப்போதும் தயாராக வைத்திருக்க வேண்டும். சுமாராக இருக்கும் ஒன்றிரண்டு உடைகளைப் பாத்திரக் காரருக்குப் போடாமல் சுமாரான சூழலுக்கென வைத்துக்கொள்ள வேண்டும்.

இருக்கின்ற உடைகளைச் சூழ்நிலைகளுடன் சம்பந்தப்படுத்திக் கொள்ளத் தெரிந்தவர்கள் புத்திசாலிகள்!

லேனா தமிழ்வாணன்

# காலபோக நெற்செய்கையை மேற்கொள்வதற்கு நிலத்தை பண்படுத்துகின்றனர் விவசாயிகள்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெற்செய்கைகளை மேற்கொள்வதற்கான நிலத்தை பண்படுத்தி தயார்ப்படுத்தலில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள ஒன்பது பாரிய நீர்ப்பாசனக்குளங்கள் மற்றும் ஏனைய சிறிய நடுத்தரக் குளங்களின் கீழும் மானாவாரிப் பயிர்ச்செய்கை நிலங்களிலுமாக வருடாந்தம் சுமார் 59 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதேபோன்று இவ்வாண்டும் காலபோகச் செய்கைகளை மேற்கொள்ளும் பொருட்டும் விவசாயிகள் தமது பயிர்ச்செய்கை நிலங்களை தயார்படுத்தி வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்மடுக்குளத்தின் கீழ் 3ஆயிரத்து 450 ஏக்கர் நிலப்பரப்பிலும் பிரமந்தனாறுக் குளத்தின் கீழ் 602 ஏக்கர் நிலப்பரப்பிலும் இரணைமடுக்குளத்தின் கீழ் 21 ஆயிரத்து 985 ஏக்கர் நிலப்பரப்பிலும் கனகாம்பிகைக் குளத்தில் 260 ஏக்கர் நிலப்பரப்பிலும், புதுமுறிப்பு குளத்தின் கீழ் 985 ஏக்கர் நிலப்பரப்பிலும், அக்கராயன் குளத்தின் கீழ் 3ஆயிரத்து 417 நிலப்பரப்பிலும், வன்னேரிக் குளத்தின் கீழ் 346 நிலப்பரப்பிலும், கரியாலை நாகபடுவான் குளத்தின் கீழ் 1505 ஏக்கர் நிலப்பரப்பிலும், குடமுருட்டிக்குளத்தின் கீழ் 1100 ஏக்கர் நிலப்பிரப்பிலுமாக மொத்தம் 33ஆயிரத்து 650 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 11ஆயிரத்து 15இற்கும் மேற்பட்ட விவசாயிகள் வருடாந்தம் நெற்செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை சிறிய மற்றும் நடுத்தரக்குளங்களின் கீழும் மானாவாரி பயிர்ச்செய்கை நிலங்களிலுமாக 25 ஆயிரத்து 350 ஏக்கர் நிலப்பரப்பிலும் வருடாந்தம் விவசாயிகள் நெற்செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேபோன்று மேற்படி பயிர்ச்செய்கை நிலங்களில் இவ்வாண்டு காலபோக செய்கைகளிற்காக விவசாயிகள் பயிர்ச்செய்கை நிலங்களை தயார்படுத்தி வருகின்றனர்.

குறிப்பாக பூநகரி, கண்டாவளை ஆகிய பிரதேசங்களில் மழையை நம்பி மேற்கொள்ளப்படும் மானாவாரி பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் பொருட்டு நிலங்களை பண்படுத்தி தயார்படுத்தி வருகின்றனர்.

இதேவேளை உப உணவு மற்றும் தோட்டப்பயிர்ச் செய்கைகளுக்காகவும் விவசாயிகள் முன்னாயத்த வேலைகளை செய்து வருகின்றனர். (2-315)




# தெங்கு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்ள 38.6 மில்.ரூபா நிதி ஒதுக்கீடு

கிளிநொச்சி மாவட்டத்தின் தெங்கு அபிவிருத்திக்காக 38.6 மில்லியன் ரூபா செலவில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் யுத்தத்தினால் அழிவடைந்த பிரதேசங்களிலும் ஏனைய பிரதேசங்களிலும் தெங்குப்பயிர்ச்செய்கையை மேம்படுத்தும் வகையில் தென்னை அபிவிருத்தி சபையால் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கென 38.6 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை 23.30 மில்லியன் நிதி செலவிடப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தெங்கு அபிவிருத்திக்காக மானிய முறையில் தென்னங்கன்றுகளை வழங்குவதற்கு 4.98 மில்லியன் ரூபாவும் புனர்நிர்மாண முறையில் தென்னங்கன்றுகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு 0.82 மில்லியன் ரூபாவும் தரம் 5 பாடசாலை மாணவர்களுக்கு தென்னங்கன்றை வழங்குவதற்கு 0.69 மில்லியனும் பிறக்கின்ற குழந்தைகளுக்கு தென்னங்கன்றுகளை வழங்குவதற்கும் 0.07 மில்லியன் ரூபாவும், வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கைக்கு தென்னங்கன்றுகளை வழங்குவதற்கு 1.166 மில்லியன் ரூபாவும் மானிய முறையில் மாட்டுத் தொழுவம் அமைக்கின்ற திட்டத்திற்கு 0.28 மில்லியன் ரூபாவும் கற்பகதெரு கடன் வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 22.13 மில்லியன் ரூபாவும் கால் ஏக்கர் வீட்டுத்திட்டச் செய்கைக்கு 0.64 மில்லியனும் மானிய நீர்ப்பாசன முறைக்காக 0.648 மில்லியன் ரூபாவும், தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாதிரி தோட்டம் அமைத்தல் 0.6 மில்லியன் ரூபாவும் தென்னங்கன்றுகளுக்கான டொலமைற் பாவனைக்காக 0.4125 மில்லியன் ரூபாவும் தென்னை ஊடு பயிர்ச்செய்கைக்காக 0.39 மில்லியன்ரூபாவும் மண் ஈரப்பதன் பாதுகாப்பதற்காக 0.18 மில்லியன் ரூபாவும் தென்னை உரிமட்டைப் பாதுகாப்புபாவனைக்காக 0.555 மில்லியன் ரூபாவும் சேதனப் பசளைப் பாவனைக்காக 2.1 மில்லியன் ரூபாவும் அசேதனப் பசளைப் பாவனைக்காக 2.408 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் கடந்த மாதம் 20 ஆம்திகதி வரைக்கும் 23.30 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.(2-315)

# காலபோக நெற்செய்கை தொடர்பான கூட்டங்களின் நேர அட்டவணை

## பாண்டியன்குளம் கமநல சேவை நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவிப்பு

(மல்லாவி)

பாண்டியன் குளம் கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழான 2017 - 2018, ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கை தொடர்பான அறிவுறுத்தல் கூட்டங்கள் நடைபெறவுள்ள காலநேர அட்டவணையைபாண்டியன் குளம் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் என் - சுஜீபரூபன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய, எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட் கிழமை முற்பகல்10.30 மணிக்கு பாலைப்பாணி கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கு பாலைப்பாணி பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மறுநாள் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நட்டாங்கண்டல் கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கு நட்டாங்கண்டல் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சிராட்டிகுளம் கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கு சிராட்டிகுளம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மறுநாள் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வன்னிவிளான் குளம் கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கு வன்னிவிளான் குளம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஒட்டறுத்த குளம் கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கு ஒட்டறுத்த குளம் பொது நோக்கு மண்டபத்திலும் மறுநாள் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு மூன்று முறிப்பு கண்ணகி கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கு மூன்று முறிப்பு கண்ணகி பொது நோக்கு மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மூன்று முறிப்பு கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கு மூன்று முறிப்பு கிராம பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இறுதியாக எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அம்பாள்புரம் கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கு முற்பகல் மணிக்கும், பிற்பகல் 01. மணியளவில் கொல்லவிளாங்குளம் கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கும் அந்தந்தப்பகுதியில் உள்ள பொதுநோக்கு மண்டபங்களில் நடைபெறவுள்ளது.

எனவே விவசாயிகள் இதனை கவனத்தில் எடுத்து குளக் கூட்டங்களின் போது, பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதால் அதனைக் கருத்தில் கொண்டு தவறாது கலந்து கொள்ளுமாறும் தங்கள் வரவை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் பாண்டியன் குளம் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (2-15)

# 'இளைஞர் சக்தி ஊருக்கு ஒரு கோடி' முல்லையில் 29 திட்டங்கள் தெரிவு





தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்படும் இளைஞர் சக்தி ஊருக்கு ஒரு கோடி எனும் வேலைத்திட்டத்தின் கீழ் இம்முறை முல்லைத்தீவு மாவட்டத்தில் 29 திட்டங்கள் மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இவ் வேலைத்திட்டத்துக்கென தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதோடு இளைஞர்கள் மூன்று இலட்சம் பெறுமதியான வேலைத்திட்டத்தை செய்ய வேண்டும். போட்டி அடிப்படையில் நடைபெறும் இத்திட்டங்களின் மாவட்ட அடிப்படையில்வெற்றி பெறும் இளைஞர் கழகங்களுக்கு முதலாம் பரிசாக 5 இலட்சம் ரூபாவும் இரண்டாம் பரிசாக 4 இலட்சம் ரூபாவும் மூன்றாம் பரிசாக 3 இலட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளதோடு தேசிய ரீதியில் முதல் பரிசாக ஒரு கோடி ரூபாவும் ஏனைய 1 இடங்களுக்கான பணப்பரிசும் வழங்கப்படவுள்ளது

இத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பனிக்கன்குளம் மின்னல் இளைஞர் கழகத்தின் கரப்பந்தாட்ட மைதானம் அமைப்பதற்கான பணிகள் நேற்று முன்தினம் மாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்

மின்னல் இளைஞர் கழக தலைவர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிராம இளைஞர்,யுவதிகள்,பொது மக்கள்,கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளென பலரும் கலந்துகொண்டிருந்தனர். (2-281)

# கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரவைகளின்றி பயிர்ச்செய்கை காலங்களில் அவதியுறுகின்றோம்

## பண்ணையாளர்கள் கவலை

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயத்தையடுத்து வருமானத்தை ஈட்டக்கூடிய ஒன்றாக கால்நடை வளர்ப்பு காணப்படுகின்றபோதும், கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் இன்மையால் பயிர்ச்செய்கை காலங்களில் கால்நடைப் பண்ணையாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் வாழும் மக்களில் அதிகளவானோர் விவசாயத்தையே அதிக வருமானமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு கால்நடை வளர்ப்பினால் அதிகளவான குடும்பங்கள் அன்றாட வருமானத்தைப்பெற்று தமது ஜீவனோபாயத்தைக் கொண்டு செல்கின்றனர்.

இந்த நிலையில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் இன்மையால் திறந்த வெளி வளர்ப்பு முறைகளில் கால்நடைகளை வளர்க்கும் கால்நடைப்பண்ணையாளர்கள் பெரும்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக பண்ணையாளர்கள் பயிர்ச்செய்கை காலங்களில் மிக நீண்டதூரங்களுக்குக் கொண்டு சென்றும் இரணைமடுக்குளத்தின் கல்மடுக்குளம் ஆகிய குளங்களில் கால்நடைகளை வைத்தும் பராமரிக்கும் நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு குளங்களில் கால்நடைகளை வைத்துப் பராமரிக்கும் போது குளத்தின் நீர்மட்டம் அதிகரிக்கும் போது அவற்றை வேறு இடங்களிற்கு கொண்டு சென்று பராமரிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

எனவே கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாக பண்ணையாளர்கள் தமக்கான மேய்ச்சல் தரவைகளை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்து வருகின்றபோதும், அதற்கான நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

ஏற்கனவே மேய்ச்சல் தரவைகளுக்கென ஒதுக்கப்பட்ட நிலங்களை அத்துமீறிப் பிடிக்கப்பட்டு பயிர்ச்செய்கை நிலங்களாகவும்குடியிருப்பு நிலங்களாகவும் மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(2-315)

# ஜீவநகர் கிராம மக்களை சந்தித்தார் விவசாய அமைச்சர்



வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் அண்மையில் முத்தையன் கட்டு ஜீவநகர் கிராமத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டு அங்குள்ள மக்களின் குறைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது பெற்றோர் விடுத்த வேண்டுகோளிற்கு அமைய feed அமைப்பினூடாக மாணவர்களின் மாலை நேரக் கல்விக்கான மேலதிகக்கொட்டகையை அமைத்து வழங்குவதற்கு உறுதிமொழி வழங்கினார்.

மேலும் பல்கலைக்கழக மாணவி ஒருவருக்கு புலம்பெயர் உறவுகளால் மடிக்கணனி ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது. இவ்வுதவியை அமைச்சர் வழங்கி வைத்தார். (2-310)

# திருத்தத்துடன் 20 மீண்டும் பாராளுமன்றத்திற்கு வரும்

## கல்வியமைச்சர் காரியவசம் தெரிவிப்பு

மாகாண சபை தேர்தல் குறித்தான 20 ஆவது திருத்தச்சட்டமூலத்தில் திருத்தங்கள் செய்த பின்னர் மீண்டும் அதனை பாராளுமன்றத்தில் கொண்டு வருவதற்கு அரசாங்கம் உத்தேசித் துள்ளது. இதன்படி விரைவில் குறித்த சட்டமூலம் பாராளுமன் றத்தில் சமர்ப்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.



அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டமூலம் தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அனைத்து மாகாண சபை தேர்தல்களையும் ஒரே தினத்தில் நடத்தும் நோக்கில் கடந்த மாத இறுதியில் அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டது. குறித்த சட்டமூலத்தில் மாகாண சபைகளுக்கான புதிய தேர்தல்முறைமை அறிமுகப்படுத்தப்படவுள் ளது. அத்துடன் குறித்த சட்டமூலத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கான தேர்தல் திகதியை பாராளுமன்றமே தீர்மானிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டமையை அடுத்து பல தரப்புகளில் இருந்து எதிர்ப்புகள் வெளிவந்த வண்ணமாக உள்ளன. மாகாண சபைகளின் தேர்தலுக்கான திகதியை பாராளுமன்றமே தீர்மானிக்க வேண்டும் என்ற சரத்திற்கு அரசியல் கட்சிகளிடம் இருந்தும் மாகாண சபைகளிடம் இருந்தும் பல கோணங்களில் இருந்தும் எதிர்ப்புகள் வெளி வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பாம்புகளை வைத்திருந்த விவகாரம்; வைத்தியருக்கு ரூ.60,000 அபராதம்

எவ்விதமான அனுமதிப் பத்திரங்களும் இன்றி, எட்டு பாம்புகளைப் பிடித்து வைத்திருந்த வைத்தியர் ஒருவருக்கு, மாத்தறை நீதவான் நீதிமன்ற நீதவான், 60 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்துள்ளார்.

வன விலங்குகள் பாதுகாப்பு அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசிய தகவல்களை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது மாத்தறை, மிரிஜ்ஜவில பகுதியில் வசித்து வந்த அந்த வைத்தியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட, நபரான வைத்தியர், எட்டு பாம்புகளைப்பிடித்து, தனது வீட்டில் வைத்துள்ளார் என்றும், அவற்றை வெளி நாட்டவர்களுக்கு காண்பித்து பணம் சம்பாதித்து வந்ததாகவும் தெரியவருகின்றது.

வன விலங்குகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுமதியின்றி இவ்வாறு பாம்புகளை தன்வசம் வைத்திருந்தது சட்ட விரோதமானசெயலென்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மிருகங்களை பொது மக்களுக்கு காண்பித்து, பணம் பெறுவதற்கு தமது திணைக்களத்தின் விசேட அனுமதி அவசியமென்றும் வன விலங்குகள் பாதுகாப்பு திணைக்களத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால், சந்தேக நபர் தகுந்த அனுமதியின்றி பாம்புகளை வைத்திருந்தமையால், விலங்குகள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் அவருக்கு தகுந்த தண்டனைகளை பெற்றுக்கொடுக்குமாறு அந்த அதிகாரிகள் நீதிமன்றத்தில் விடுத்த வேண்டுகோளை அடுத்து அவருக்கு, மேற்படி தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சந்தேக நபரான அந்த வைத்தியரும் குற்றத்தை, தான் ஒப்புக் கொள்வதாக நீதவானிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்தே, சந்தேக நபரான வைத்தியருக்கு, 60,000 ரூபாய் அபராதம் விதித்த நீதவான், சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பாம்புகளை வன விலங்குகள் பாதுகாப்பு திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (இ-7)

# முச்சக்கர வண்டிக்கு மீற்றர் சங்கங்களுக்கிடையே முரண்பாடு

பொதுமக்கள் அல்லது பொருட்களை ஏற்றிச் செல்லும் முச்சக்கரவண்டிகளுக்கு மீற்றர் பொருத்துவது கட்டாயமாக்குவதற்காக வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் குறித்து, முச்சக்கரவண்டி சங்கங்களுக்கிடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவினால் கடந்த 8ஆம் திகதி நள்ளிரவில் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கமைய, பயணிகளை அல்லது பொருட்களை ஏற்றிச்செல்லும் முச்சக்கரவண்டி சாரதிகள் பயணிகளுக்கோ அல்லது வாடிக்கையாளர்களுக்கோ பற்றுச்சீட்டொன்றை வழங்குவது அவசியமாகும்.

பயணம் செய்த தூரம், வாகனத்தின் இலக்கம் உள்ளிட்ட பல விடயங்கள் இந்தப் பற்றுச்சீட்டில் உள்ளடக்கப்பட வேண்டும் என்று, குறித்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு எமது சங்கம் பூரண ஆதரவு வழங்கும் என, அனைத்து இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்தார்.

எது எவ்வாறாயினும், இந்த வர்த்தமானி அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக, ஒரு முரண்பாடான நிலையொன்று உள்ளதாக, தேசிய ஒருங்கிணைந்த முச்சக்கரவண்டி சாரதிகளின் சங்கத் தலைவர் கே.டீ.அல்விஸ் தெரிவித்தார்.

குறிப்பாக, பற்றுச்சீட்டு முறைமை கட்டாயமாக்கப்பட்டதால், இந்த முரண்பாடு காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில், அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

"அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின்போது, இந்த நடைமுறையை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்க வேண்டாம் எனத் தெரிவித்தோம். வெளி மாவட்டங்களில் முச்சக்கரவண்டி வாடகைக்காக செலுத்தப்படுவது மீற்றர் முறையில் இல்லை. பேரம் பேசும் முறையிலேயே முச்சக்கர வண்டிகள் ஓடுகின்றன. எனவே, இந்த நடைமுறையை மேல் மாகாணத்தில் மாத்திரம் நடைமுறைப்படுத்துமாறு கோரினோம். அதை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. இது தொடர்பில் எமது உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து முடிவொன்றை எடுப்போம்" என்றார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1187

Search for people, places and things Nagendram Home

சர்மிலன்




கயானா




புவியரசன்




துஸ்யந்தன்




ராதிகா




வேணி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# விருது விழா-2017



ரிமை அட்டைகள் வழங்கும் விழா யாழ்.கொக்குவில் பூநாறி மரத்தடி பகுதியிலுள்ள செல்வா பலஸில் கடந்த 9 ஆம் திகதி சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.
இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஐ.திஸ்ஸநாயகே கலந்துகொண்டார்.
வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்




## சுஜாவை இரகசிய அறையில் அடைத்த பிக்போஸ்



பிக்போஸ் நிகழ்ச்சியில் இருந்து நடிகை சுஜா வெளியேற்றப்பட்டதாக கமல் அறிவித்தார்.

ஆனால் அதற்கு பிறகு அவரை கூட்டிச்சென்று ஒரு இரகசிய அறையில் அடைத்து வைத்துவிட்டனர். பிக்போஸ் வீட்டில் நடப்பதை அவர் அந்த ரூமில் உள்ள டிவியில் பார்த்துக்கொள்ளலாம். ஆனால் அவரால் வீட்டில் உள்ளவர்களிடம் பேச முடியாது.

உணவு உள்ளிட்டவை பிக்போஸ் குழுவால் சுஜாவுக்கு வழங்கப்படும். சில நாட்கள் கழித்து சுஜா மீண்டும் வீட்டுக்குள் அனுப்பப்படுவர்.

அதனால் அவர் இன்னும் பிக்போஸ் போட்டியில் இருந்து இன்னும் வெளியேறவில்லை என கமல் கூறியது. சுஜாவுக்கு ஆறுதலாக இருந்தது.

## சுஜா வெளியேறும் போது ஆரவுக்கு கண்ணீருடன் கூறிய அறிவுரை



பிக்போஸ் நிகழ்ச்சியில் விக்ஷனில் ஒரு நபர் வெளியேறுவார் என்பது அனைவருக்கும் தெரியும்.

சுஜா தான் வெளியேறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டதன்படி அவர் தான் வெளியேறினார். மேலும் அவருடன் மீண்டும் வந்த ஆர்த்தி, ஜூலி, சக்தி மூவரும் வெளியேறி விட்டனர்.

சுஜா வெளியேறுவார் என்று கூறும்போது மற்ற அனைவரும் அசையாமல் இருந்தனர். அப்போது ஒவ்வொருவரிடமும் தனது கருத்தை வெளிப்படுத்தினார் சுஜா.

இதில் ஆரவிடம் கூறும் போது, நீ உண்மையை கூற வேண்டும். இன்னும் 3 வாரம் தான் அதற்குள் நீ புரிந்துகொள் சொல்லிவிடு என்று கண்ணீருடன் கூறினார்.

## பிக்போஸ் போட்டியாளரிடம் விளையாடிய கமல்



பிக்போஸ் நிகழ்ச்சியில் இந்த வாரம் சுஜாதான் எலிமினேட் செய்யப்பட்டிருக்கிறார் என்று தெரிகிறது. 10 போட்டியாளர்கள் இருந்த வீட்டில் தற்போது 6 பேர் இருக்கிறார்கள்.

அந்த 6 பேருக்கும் கமல்ஹாசன் ஒரு வித்தியாசமான Task ஒன்றை கூறுகிறார். அந்த விளையாட்டை போட்டியாளர்களுடன் இணைந்து கமல்ஹாசனும் செய்தார்.

## கமலால் ஆரவின் உண்மை முகத்தை அறிந்த சுஜா



பிக்போஸ் நிகழ்ச்சி புதுவரவுகளால் கொஞ்சம் துளிர்விட்டுள்ளது. இந்நிலையில் சுஜாவை கமல் நீங்கள் போட்டியில் இருந்து வெளியேறுகிறீர்கள் என்று கூறினார்.

அதைத் தொடர்ந்து உங்களை ஒரு தனி அறையில் வைத்திருப்போம். நீங்கள் பிக்போஸ் வீட்டிற்குள் நடப்பதை இந்த வீட்டில் இருந்து பார்க்கலாம்.

பிறகு சில நாட்கள் கழித்து வீட்டிற்குள் செல்லலாம் என கமல் கூறினார். அதைத்தொடர்ந்து சுஜாவிற்கு பல அதிர்ச்சி காத்திருந்தது.

ஆரவ், சுஜா குறித்து மிகவும் மோசமாக பேசி வருகின்றார். இதையெல்லாம் சுஜா தனி அறை ஒன்றில் அமர்ந்து பார்த்து வருகின்றார்.

இதனால், கண்டிப்பாக சுஜா வீட்டிற்குள் மறுபடி சென்ற பின் மிகப்பெரும் பிரச்சினை ஒன்று காத்திருக்கின்றது.

## புரியாத பாசையில் பேசிய ஹரிஸ்




நடிகர் கமல் தொகுத்து வழங்கும் பிக்போஸ் நிகழ்ச்சியில் புதிய டாஸ்க் கொடுக்கப்பட்டது.

அதில் அனைவரும் புரியாத பாஷையில் அதிக நேரம் பேச வேண்டும். தனிப்பட்ட திறமைகளை போட்டியாளர்கள் காட்டினார்கள்.

குறிப்பாக அனைவரையும் அதிக நேரமாக ஈர்க்க செய்ய புரியாத பாஷையில் ஹரிஸ் பேசினார். அனைவரும் ரசித்து வேடிக்கை பார்த்து கொண்டிருந்தனர்.

## தமிழகத்துக்கு ஜோசியம் பார்த்த கமல்



நடிகர் கமல் தொகுத்து வழங்கும் பிக்போஸ் நிகழ்ச்சியில் தமிழகத்துக்கு ஜோசியம் பார்த்து தனது பாணியில் பேசினார். பிக்போஸ் நிகழ்ச்சியில் ஒவ்வொரு வார இறுதியில், போட்டியாளர்களிடையே பேசும் கமல் தமிழகத்துக்கு தனது பிரத்தியேகமான பாஷையில் ஜோசியம் பார்த்து கூறினார்.

போட்டியாளர்கள் அனைவரும், பாகுபலியில் வரும் வில்லன் போல பேசிக்காட்டினர். அதே பாணியில், கமல் தமிழகத்துக்கு ஜோசியம் கூறினார். மக்களுக்கு புரியாது என்பதால், இதை இந்த பாஷையில் கூறுவது தவறு. அதனால் மக்களுக்கு புரியும் வகையில் விரைவில் கூறுவேன் என தெரிவித்தார். நேரம் வரும்போது அனைவரும் மூளையை பயன்படுத்தி, விரலில் மை வைக்க வேண்டும் (வாக்களிக்க வேண்டும்) என்று கமல் பேசினார்.

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 02.09.2017-04.10.2018



சமூக சீர்திருத்த கொள்கைகளில் அதிக நாட்டம் செலுத்தும் கும்ப இராசி அன்பர்களே!

உங்கள் இராசிக்கு 2ஆம் இடமான வாக்கு ஸ்தானத்திற்கும் 11ஆம் இடமான லாபஸ்தானத்திற்கும் உரியவர் குருபகவான். இதுவரை உங்கள் இராசிக்கு அஷ்டமத்தில் இருந்து வந்த குரு, இப்போது 9ஆம் இடம் எனப்படும் பித்ரு ஸ்தானத்திற்கு வருகிறார். அங்கிருந்து கொண்டு உங்கள் இராசியை 5ஆம் பார்வையாக பரிபூரணமாக பார்க்கிறார். குருவின் பரிபூரணப் பார்வை பதிவதாலும் உங்கள் இராசிக்கு மற்ற இடங்களில் உலாவரும் கிரகங்களின் அமைப்பை பொறுத்தும் தான் உங்களுக்குரிய பலன்கள் நடைபெறும்.

குதூகலம் தரும் குருப்பெயர்ச்சி

தற்சமயம் பெயர்ச்சியான குருபகவானை தனது பகைக்கிரகமான சுக்ரன் வீட்டில் சஞ்சரிக்கிறார். இருந்தாலும் அவரது பார்வை நடக்காத காரியங்களை நடக்க வைக்கும். பெயர்ச்சியான இராகு-கேதுக்கள் உங்கள் இராசிக்கு 6,12 ஆகிய இடங்களில் வீற்றிருக்கிறார்கள். இன்னும் 3 மாதத்தில் அதாவது 19.12.2017 அன்று பெயர்ச்சி ஆகும் சனி பகவான் உங்கள் இராசிக்கு லாப ஸ்தானத்திற்கு வரப் போகிறார். அதன் பிறகு பொருளாதார முன்னேற்றமும், புகழ் ஒளியின் உச்சிக்கு செல்லும் வாய்ப்பும் கிடைக்கும்.

பொதுவாக இந்த குருப்பெயர்ச்சியால் வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். தொழில் நன்றாக நடக்கவில்லையே என்ற கவலை அகலும். புதிய ஒப்பந்தங்கள் வந்துகொண்டே இருக்கும். எதிர்காலத்தை இனிமையாக்கிக் கொள்ள நீங்கள் செய்த முயற்சிகள் அனைத்தும் கைகூடும். இதுவரை ஆரோக்கியத் தொல்லையால் வாடகை வீடு சொந்த வீடாக மாறலாம்.

குருவின் பார்வை தரும் பலன்

இராசியை குரு பார்க்கும்பொழுது யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். ஜென்மத்தில் குரு பார்த்தால் செல்வாக்கு அதிகரிக்கும் என்பார்கள். எனவே, உங்கள் செல்வாக்கு அதிகரிக்கப் போகிறது. வாய்ப்புகள் வாயில் கதவைத் தட்டும். நீண்ட நாள் நோயில் இருந்து நிவாரணம் பெறுவீர்கள். கௌரவம், புகழ் பெருகும். கல்யாணக் கனவுகள் நனவாகும். உத்தியோகத்தில் நீங்கள் எதிர்பார்த்தபடியே இலாகா மாற்றங்கள் ஏற்படலாம். பயணங்களால் பயன் கிடைக்கும் நேரம் இது.

குருவின் பார்வை 3ஆம் இடத்தில் பதிவதால் முன்னேற்றப் பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். துணிந்து முடிவெடுத்து சில காரியங்களைச் செய்யத் தொடங்குவீர்கள். பணிந்து வேலை பார்க்கும் பணியாளர்களால் நன்மை கிடைக்கும். வழக்குகள் சாதகமாக முடியும். வாய்தாக்கள் ஓயும். கலக்கங்கள் அகல சகோதரர்களே வழிவகுத்துக் கொடுப்பர்.

அப்போது 10இல் வரும் குருவால் பலவித மாற்றங்கள் காணப் போகிறீர்கள். உடன் இருப்பவர்கள் பகையாக மாறலாம். கடன் சுமை அதிகரிக்கும். கடமையில் தொய்வு ஏற்படும். விரயங்கள் அதிகரிக்கிறதே என்று கவலைப்படுவீர்கள். அரை குறையாக பல பணிகள் இருக்கலாம். ஆரோக்கியத் தொல்லைகள் வரலாம். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வீண்பழி ஏற்படும். உறவினர்களுக்குக் கொடுத்து உதவிய தொகை மீண்டும் வருவதில் தாமதமாகும். இக்காலத்தில் எதையும் முன் யோசனையுடன் செய்வதே நல்லது.

அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!

7.3.2018 முதல் 4.7.2018 வரை குரு வக்ர கதியில் இயங்குகிறார். இக்காலத்தில் பண நெருக்கடி அதிகரிக்கும். வாங்கியதைக் கொடுக்க முடியவில்லையே, கொடுத்ததை வாங்க முடியவில்லையே என்று கவலைப்படுவீர்கள். கூட்டுத் தொழிலில் மாற்றங்கள் ஏற்படும். அருகில் இருப்பவர்களின் அனுசரிப்பு குறையும். பெரிய அளவில் பிரச்சினைகள் வராமல் இருக்க ஆரம்பத்திலேயே அச்சுறுத்தும் தகவல்களை இனம் கண்டு கொள்வது நல்லது. உறவினர்களால் ஒரு சிலருக்கு ஏமாற்றம் உருவாகும். பக்கத்தில் இருப்பவர்களைப் பகைத்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ளவும். கோபத்தின் காரணமாக நல்ல வாய்ப்புகளை இழக்க நேரிடும். புதியவர்களை நம்பி தொழிலில் முதலீடு செய்ய வேண்டாம்.

## ஒன்பதில் வரும் குரு பார்த்தால் உன்னத வாழ்வு அமைந்திடுமே!

சகல யோகங்களும் உங்களுக்கு வரப் போகிறது.

புயலுக்குப் பின் அமைதி என்பது போல அஷ்டமத்தில் குரு இருந்த போதும் தடைகளும் தாமதங் களும் தனவிரயங்களும் அதிகரித்து இருக்கலாம். இப்போது அந்த நிலை மாறி அமைதியோடு மகத்தான பலன்களையும் காணப்போகிறீர்கள். இனி பணப்புழக்கம் அதிகரிக்கும். பாடுபட்டதற்கு ஏற்ற பலன் கிடைக்கும். வாழ்க்கையில் இருந்த இடர்கள் அகலும். பொதுவாக உங்கள் இராசிக்கு தனாதிபதியாக விளங்குபவர் குருபகவான். அவரே லாபாதிபதியாகவும் விளங்குகிறார். தனலாபாதியாக விளங்கும் குருபகவான் உங்கள் இராசியை பார்க்கும் போது பணமழையிலும், பாச மழையிலும் நனையப் போகிறீர்கள்.

குரு தனாதிபதியாக விளங்கி சஞ்சரிப்பதால் ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழிகிடைக்கும். உங்களை விட்டு விலகிச் சென்றவர் விரும்பி வந்து சேர்வர். வெளிநாடு சென்று அவஸ்தைப் பட்டவர்கள் கூட நல்ல வேலைக்குச் சென்று நலமோடு வாழ வழி கிடைக்கப் போகிறது. 'அஞ்சும் ஒன்பதும் மிஞ்சும் பயன் தரும்' என்பதால் உங்களுக்கு குரு உலா வரும் ஒன்பதாம் இடம் நன்மை தரும் இடம் என்றே கருதலாம்.

குருபகவானைப் பொறுத்தவரை ஸ்தான பலத்தைவிட, பார்வை பலமே அதிகம் என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. அவருடைய சிறப்புப் பார்வைகளான, 5ஆம் பார்வை, 7ஆம் பார்வை, 9ஆம் பார்வை ஆகிய மூன்று பார்வைகளும் முக்கியத்துவம் வாய்ந்த பார்வைகளாகக் கருதப்படுவதால், அது பார்க்கும் இடங்கள் எல்லாம் புனிதமடையும்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு அவதிப்பட்டவர்கள், உடல் நலம் தேறி உற்சாகத்தோடு செயற்படத் தொடங்குவர். வெற்றிச் செய்தி வீடு வந்து சேரும். குடும்ப ஒற்றுமை கூடும்.

வாழ்க்கை தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள நண்பர்களும் உறவினர்களும் ஒத்துழைப்பு செய்வார்கள். இதுவரை ஏமாற்றங்களை சந்தித்த நீங்கள் ஏற்றங்களையும் மாற்றங்களையும் காணப் போகிறீர்கள். நாட்டுப் பற்று மிக்கவர்களால் நல்ல காரியங்கள் நடக்கப் போகிறது.

ஒன்பதில் குருவும் வந்தால்
உன்னத வாழ்க்கை அமையும்
பொன் பொருள் சேர்க்கை உண்டு
பூமியால் லாபம் சேரும்
நண்பர்கள் ஒத்துழைப்பால்
நலம் யாவும் வந்து சேரும்
இன்பத்தின் எல்லை காண
இறையருள் கை கொடுக்கும்

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. எனவே ஒன்பதில் குருவரும் பொழுது உன்னத வாழ்வு அமைத்துக் கொடுக்கும். பொருளாதார நிலை உயரும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். தொட்டது துலங்கும். சொந்தங்கள் பாராட்டும். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றாக நடைபெறத் தொடங்கும். தொழில் வளர்ச்சி கூடும். மாறுக் கருத்துடையவர் மனம் மாறுவர். உங்கள் திறமை பளிச்சிடும். தெய்வீக காரியங்கள் பலவற்றையும் செய்து முடிப்பீர்கள்.

நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். தைரியமும் தன்னம்பிக்கையும் கூடும். பணி இடத்தில் உங்களுக்கு ஏற்பட்ட பாதகமான சூழ்நிலை அகலும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். வீண்பழிகளும் அவப் பெயர்களும் மாறும். விரோதிகள் அடிபணிவர். உயர் பதவிகளும், கூடுதல் சம்பளமும் கிடைக்கும்.

உங்கள் திறமைக்கு வாய்ப்பு கிடைக்கும் நேரம் இது. பல வருடங்களாக நடைபெற்று முடியாத பஞ்சாயத்துகள் இப்போது முடியும். முன்னோர்கள் கட்டிய கோவில்களுக்குத் திருப்பணி செய்யும் வாய்ப்பு கிடைக்கும்.

குருவின் பார்வை 5ஆம் இடத்தில் பதிவதால், உற்றார், உறவினர்களின் உதவி கிடைக்கும். கல்வியில் இருந்த தடைகள் அகலும். பெற்றோர் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும். பிரிந்திருந்த பெற்றோர்கள் மீண்டும் இணைவர். நிரந்தர வேலை ஒரு சிலருக்கு கிடைக்கும். நேர்முகத் தேர்வில் வெற்றி கிடைத்து, பார் போற்றும்படியாக பணியில் சேருவர். ஊர்மாற்றச் சிந்தனைகள் மேலோங்கினாலும் இக்காலத்தில் இருக்கும் இடத்திலேயே இருப்பது நல்லது. வாகன யோகம் உண்டு. பிள்ளைகளின் கல்வி நலன் கருதியும், கல்யாண வாய்ப்புக் கருதியும், கடல் தாண்டி சென்று பணிபுரியும் சூழ்நிலையைக் கருதியும், நீங்கள் எடுத்த முயற்சிகள் கைகூடும். சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும். பொது நலன் மற்றும் அரசியலில் இருப்பவர்களுக்கு அதிகாரப் பதவி கிடைக்கும்.




குரு அதிசாரம்

14.2.2018 முதல் 11.4.2018 வரை குரு அதிசாரமாக விருச்சிக இராசிக்குச் செல்கிறார்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

கும்ப இராசியில் பிறந்த பெண்களுக்கு, மிகுந்த சாதகமான பெயர்ச்சி இந்த குருப்பெயர்ச்சி ஆகும். நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். வருமானம் திருப்திகரமான நிலையில் இருக்கும். குரு பார்வையால் குழப்பங்கள் அகலும். கொள்கைப் பிடிப்போடு செயற்பட இயலும். எந்த காரியத்தையும் எடுத்தோம், முடித்தோம் என்று செய்து முடிப்பீர்கள். சொந்தங்கள் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவர். கணவன்- மனைவிக்குள் பாசமும் நேசமும் கூடும். பரிகாரங்களின் மூலம், வீட்டில் பிள்ளைச் செல்வம் துள்ளி விளையாடும் வாய்ப்பு உருவாகும். தாய் மற்றும் சகோதர வர்க்கத்தின் ஒத்துழைப்பு கிட்டும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர்வு மட்டுமில்லாமல் தடையாக இருந்த சம்பள பாக்கியும் வந்து சேரும். வீடு வாங்கும் ஆசை நிறைவேறும். திசை மாறிய தென்முகக் கடவுளை வழிபடுவதோடு இராகு-கேது வழிபாடுகளையும் மேற்கொள்ளுங்கள். மலை வலம் வருவது மூலமும் மகத்துவம் உங்களுக்குக் கிடைக்கும்.

(தொடரும்)

# வல்லரசை மிரட்டும் இயற்கை

## அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தை சூறையாடியது "இர்மா" புயல்



(நியூயோர்க்)

அட்லாண்டிக் கடலில் உருவான 'இர்மா' புயல் கரீபியன் தீவுகளை துவம்சம் செய்த பின்னர் அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தை நேற்று முன்தினம் தாக்கியது.

ஏற்கனவே அமெரிக்காவின் கீழ் பகுதியில் உள்ள கரீபியன் கடலில் உள்ள தீவு நாடுக்களை தாக்கி துவம்சம் செய்து 25 உயிர்களை பறித்த இர்மா புயல் தற்போது புளோரிடாவுக்குள் நுழைந்துள்ளதால் அங்கு பலத்த காற்றுடன் தொடர் மழை பெய்து வருகிறது.

ஹவானா பகுதியை பதம் பார்த்த பின்னர் முன்பை விட மேலும் சற்று வலுவடைந்து நான்காம் எண் எச்சரிக்கையுடன் கியூபாவை கடந்து, புளோரிடா மாநிலத்தை தாக்கிக் கொண்டிருக்கும் 'இர்மாவின்' புயல் படிப்படியாக நகர்ந்து ஜோர்ஜியா, கரோலினாஸ் மாகாணங்களையும் அடுத்த வாரம் தாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் அங்கு பலத்த மழையும், வெள்ளப் பெருக்கும் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே அங்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஏராளமான விமானங்கள், ஹெலிகொப்டர்கள், மீட்பு படகுகள், அம்புலன்ஸ் வாகனங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. நீச்சல் வீரர்கள் மற்றும் மீட்பு படையினரும் ஆங்காங்கே குவிக்கப்பட்டுள்ளனர்.

புளோரிடா மாநிலத்தின் கடலோர பகுதிகளில் வாழும் சுமார் 70 இலட்சம் மக்களை தங்கள் வசிப்பிடங்களில் இருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தங்குமாறு அமெரிக்காவின் பேரிடர் மற்றும் அவசர கால நிவாரண முகமை வலியுறுத்தியுள்ளது.

நிவாரண முகாம்களில் சுமார் 2 இலட்சம் பேர் தஞ்சம் அடைந்துள்ளனர். சுமார் 2 இலட்சம் வீடுகளுக்கு செல்லும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. இந்த மாநிலத்தில் அமெரிக்க இந்தியர்கள் அதிக அளவில் வசிப்பது குறிப்பிடத்தக்கது.

புயல் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகள் தொடர்பாக வோஷிங்டன் நகரில் உள்ள வெள்ளை மாளிகையில் உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இர்மா புயல் மிகப் பெரிய பேரழிவை ஏற்படுத்தக் கூடும் என மக்களை எச்சரித்துள்ளார். (8)







# பவள விழாவில்

## பிறந்த நாள் வாழ்த்து

எங்கள் பாசமிகு அம்மாவின் அராஜக அழிப்பின் பின்னும் மனம்
சோராது எம்மை வளர்த்து கல்வியில் உயரவைத்து புலம் பெயர்
தேசத்தில் எம்மை சிறப்புடன் வாழ வழிகாட்டிய


எங்கள் பாசமிகு அப்பா

**திரு பொன்.தில்லைநாதன் (J.P)**

*(முன்னாள் அதிபர், உதவிக் கல்விப் பணிப்பாளர்)*



இன்று 12ஆம் திகதி பவளவிழாவில் கால் பதித்து பிள்ளையார் நகர், பூநகரியில் பிறந்த நாளை கொண்டாடுவதையிட்டு எமது வாழ்த்துக்களை தெரிவித்து நிற்பதோடு அவர் ஆற்றிய கலை, இலக்கிய சேவைக்காக இலங்கை அரசின் "கலாபூஷணம்" விருது, மாவட்ட கலாச்ஷரப் பேரவையின் "கலைக்கிளி", பூநகரி பிரதேச கலாசாரப் பேரவையின் "கலைநகரி" விருது பெற்றமையையும் மகிழ்வுடன் பாராட்டி நீண்ட காலம் நீடூழி வாழ்ந்து சேவையாற்ற வாழ்த்தும்.



75



பிள்ளைகள் : DR.ஆனந்தகுமார் (அமெரிக்கா),
ஆனந்தநிருஜா (நோர்வே),
ஆனந்தவர்மன் (பிரான்ஸ்)
மருமக்கள் : சுபாசினி, இன்பராசா
பேரப்பிள்ளைகள் : ஜோனார்த்தன், ஜெருமி,
லியாதிரேசி, இலக்கியா.

தர்மத்தின் வாழ்வுதனை சூது கௌவும்
தர்மம் மறுபடியும் வெல்லும்

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அறுகின்ற நாளுக்கு எழுவது அகந்தை

தமிழ்ப் பழமொழிகள் கூறுகின்ற அர்த்தங்கள் மிகவும் அற்புதமானவை.

முன்னைய காலத்தில் நம்மவர்கள் தமிழ்ப் பழமொழிகளையே எடுத்துக்காட்டாக உதாரணங்களாக முன்வைத்தனர். இப்போது பழமொழிகள் பழையனவாகிவிட்டன.

இதனால் உண்மைத் தத்துவங்களும் நியாயங்களும் விளங்கப்பட முடியாதவைகளாகியுள்ளன.

எனினும் தமிழ்ப் பழமொழிகள் கூறுகின்ற தத்துவங்களே யதார்த்தத்தில் நடந்து கொண்டிருப்பதை நாம் அவதானிக்க முடியும்.

இந்த வகையில் அறுபது நாளுக்கு எழுவது கந்தை என்றொரு பழமொழி நம் கிராமங்களில் பேசப்படுவதுண்டு.

அறுகின்ற நாளைக்கு எழுவது அகந்தை என்ற பழமொழியே அறுபது நாளுக்கு எழுவது கந்தை என்பதாகக் கூறப்பட்டது.

இதன்பொருள் யாருக்கெல்லாம் அகந்தை எழுகின்றதோ அவர்கள் அழிவுக்குத் தங்களைத் தயார்படுத்துகின்றனர் என்பதுதான்.

இந்தப் பழமொழிக்கு இப்போது இலங்கையில் பௌத்தபீடங்கள் உதாரணப்படுத்தக் கூடியனவாக உள்ளன.

இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று தமிழ் முஸ்லிம் மக்கள் ஏற்றுக் கொண்டால் மட்டுமே தீர்வு பற்றி – அரசியலமைப்புச் சீர்திருத்தம் பற்றி கவனிக்க முடியும் என்பதாக பௌத்த பீடங்களின் போக்கு உள்ளது.

அதிலும் அஸ்கிரிய பீடத்தினர் இது விடயத்தில் மிகவும் உறுதியாக இருப்பதையும் காண முடிகின்றது.

இதுதவிர வடக்கு மாகாணத்தில் பௌத்த விகாரைகளையும் சிங்களப் பாடசாலைகளையும் அமைப்பது தொடர்பிலும் அஸ்கிரிய பீடம் அதீத கவனம் செலுத்தி வருவதாக உள்ளகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மிகப்பெரும் வன்னி யுத்தம் நடந்து அதில் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டு ஒரு பகுதியினர் காணாமல் ஆக்கப்பட்ட நிலையில்; தமிழ்ப் பெற்றோர் கண்ணீரும் கம்பலையுமாக வாழுகின்ற இந்த நேரத்தில்,

தமிழ் மக்களே உங்களின் துன்பத்தில், துயரத்தில் நாங்களும் பங்கெடுக்கின்றோம். உங்களின் உரிமைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

இதற்காக பௌத்த பீடம் பாடுபடும் என்று தமிழ் மக்களை ஆற்றுப்படுத்த வேண்டிய பௌத்த பீடங்கள் – பௌத்த துறவிகள் இவையெல்லாவற்றையும் மறந்து தமிழ் மக்கள் ஆற்றொணாத் துன்பத்தில் வீழ்ந்து கிடக்கையில் இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று உயில் எழுதி வைக்க ஓடித் திரிகின்றனர்.

கௌதம புத்தபிரானின் உயர்ந்த போதனைகளைப் புதைத்து விட்டேனும் இங்ஙனம் நினைப்பது சாத்தியமானதல்ல.

அடிப்படை மனிதநேயம் இருந்தால் கூட இந்த நாட்டில் நாம் அனைவரும் ஒற்றுமையாக வாழ்வோம் என்றுரைப்பதுதான் மனித தர்மம். ஆனால் தர்மத்தைப் போதிக்க வேண்டிய பௌத்த துறவிகள் அதனை மறந்துள்ளனர்.

ஆட்சி அதிகாரங்களும் தங்கள் கையில் என்ற ஒரே கர்வத்துடன் பேரழிவைச் சந்தித்த வடக்கு மாகாணத்தில் பௌத்த விகாரைகளை கட்டுவதற்கு இடம்தேடுகின்றனர்.

ஓ! தர்மம் உரைக்க வேண்டியவர்களே அகந்தைப்பட்டோராயின் தர்மத்தின் தீயில் அகப்பட்டு அழிவீர். இதுவே நிஜம்.

இதையே எங்கள் தமிழ்ப் பழமொழி அறுபது நாளுக்கு எழுவது கந்தை என்றுரைக்கிறது. அறியின்.

# வெளிநாட்டுக் கல்விமுறை வேரூன்றியுள்ளதால் இலங்கையில் தாய்மொழிக் கல்விமுறை புறக்கணிப்பு

## கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் சுட்டிக்காட்டு

இலங்கையில் வெளிநாட்டு கல்வி முறைகள் வேரூன்றியுள்ளதால் தாய்மொழி கல்வியின் பயன்பாடு புறக்கணிக்கப்படும் நிலை தோன்றியுள்ளது என தெரிவித்த கொழும்பு தமிழ்ச் சங்க தலைவர் தம்பு சிவசுப்பிரமணியம், இன்னும் நூறு வருடங்களுக்குள் வழக்கொழிந்து போய்விடும் மொழிகளில் 8 ஆவது இடத்தில் தமிழ் மொழி இருப்பதாகவும் ஐ.நா. அறிக்கை ஒன்றில் இருந்து சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் "முத்தமிழ் விழா" கல்லூரியின் பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம் தலைமையில் நேற்றைய தினம் பேரறிஞர் அழகுசுந்தர தேசிகர் அரங்கில் இடம்பெற்றது. அதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வரலாற்று ரீதியாக எமது நாட்டின் வடபுலத்தை நோக்குவோமாயின் கல்வியில் முதன்மை பெற்றிருந்தமையை அறிய முடிகிறது. அதற்கான காரணங்களை நோக்கினால், மாணவர்களின் அக்கறை, பெற்றோரின் ஊக்குவிப்பு, ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு, அதிபர்களின் மகத்தான சேவை என்பவற்றை குறிப்பிடலாம்.

அன்று கல்வியில் முதலிடம் வகித்த வடமாகாணம், இன்று 9 ஆவது. அதாவது கடைசி இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளதை எண்ணும் போது வேதனை தருகிறது. அதேவேளை கல்வி பொது சாதாரணதரப் பரீட்சையில் 30 வீதமான மாணவர்கள், தமிழ்மொழியில் சித்தியடைய தவறிவிட்டார்கள். இந்த வீழ்ச்சிக்கு பொறுப் பானவர்கள் யார்? பெற்றோரா? ஆசிரியரா? அல்லது மாணவர்களா? எமது மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சி அடைவதற்கான உண்மை நிலையை கண்டறிந்து அதற்கான மாற்றீட்டை கண்டறிய வேண்டிய பெரும் பொறுப்பு எமது கல்விப்புலத்தை சார்ந்ததாகும்.

ஒழுக்க விழுமியங்களை, எமது பண்பாட்டுப் பாரம்பரியங்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் உள்ளது என்பதை எவரும் மறந்து விடக்கூடாது.

பொதுவாக வாசிப்புப் பழக்கம் குறைந்து வருவதால் மக்களின் அறிவு குன்றி வருவதாகவும் குறிப்பாக கல்விபயிலும் மாணவர்களிடையே அறிவுத்தேடல் மந்தகதியில் இருப்பதாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது. நல்ல நூல்களைத் தேடிப் படித்தால் தான் அறிவு வளரும். எனவே வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்திக் கொள்வதன் மூலம் எமது அறிவை பெருக்கிக்கொள்ள முடியும்.

எமது மக்கள் புலம்பெயர்ந்து அந்நிய நாடுகளில் வாழ்கிறார்கள். அவர்களின் பிள்ளைகள் தாம் வாழும் நாடுகளில் உள்ள மொழிகளை கற்பதாலும், எமது பண்பாடு கலாசாரங்களை மறந்து, அந்நிய நாட்டு கலாசாரங்களை பின்பற்றுவதாலும், தமிழ்மொழியும் தமிழர் கலாசாரமும் பின்னடைவைக் கண்டு வருவதாக தெரிய வந்துள்ளது.

இந்த நிலை நீடிக்குமானால் எமது இன அடையாளங்கள் தெரியாமல் போய்விடும் என பலர் அங்கலாய்க்கின்றனர். வடபுல கல்வி வளர்ச்சிக்கு பாடசாலைகள் அமைத்து உரமூட்டிய பெருந்தகைகளை இந்த மண்ணில் நின்று நினைவுகூருவது சாலப்பொருந்தும்.

இன்று எமது நாட்டில் இலவசமாக கல்வி, சீருடை, புத்தகங்கள், உணவு என்பன கிடைத்தாலும் கல்வித்தரம் பின்னடைவைக் கண்டு நிற்கின்றது.

எமது நாட்டின் தேவைக்கு ஏற்றவாறான கல்வித திட்டம் வகுக்கப்படாமல் பிற நாட்டு கல்வி கொள்கைகளை குறிப்பாக உலக வங்கியின் வழிகாட்டலில் கல்வித் திட்டம் வகுக்கப்படு வது பெரும் இடர் வினைகளை தோற்றுவித்துள்ளது.

சர்வதேசப் பாடசாலைகள் வெளிநாட்டு பல்கலைக் கழகங்களின் கற்றல் தொழிற்பாடுகள் இலங்கையில் வேரூன்றியுள்ளமையானது கல்வியை ஒரு வியாபார பண்டம் என்ற நிலைக்கு கொண்டு வந்துள்ளார்கள். தாய்மொழி கல்வியின் பயன்பாடு புறக்கணிக்கப்படும் நிலை தோன்றியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோ நிறுவனம் அண்மையில் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் இன்னும் நூறு வருடங்களுக்குள் 25 மொழிகள் வழக்கொழிந்து போய்விடும் என்றும் அதில் 8 ஆவது இடத்தில் தமிழ்மொழி இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

கல்தோன்றி மண்தோன்றா காலத்துக்கு முன் தோன்றிய மூத்த மொழி என்று வாய்ச் சவாடல் வழங்கி வரும் நாம் யுனெஸ்கோ அறிக்கைக்கு என்ன பதில் கூறப்போகிறோம்.

எம்மவர்களிடையே மொழிப்பற்று குறைந்து போகின்ற இந்தக் காலகட்டத்தில் எதுவும் சாத்தியமாகலாம். ஆகவே எம்மொழி அழிவில்லாமல் வாழவேண்டுமானால் நாமும் எம்மொழியை ஐயந்திரிபுறக் கற்று எமது வருங்கால சமுதாயத்திற்கு உரிய முறையில் கையளிக்க வேண்டும். (இ-9)



## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

சேஷாசலத்துக்கு அருகில் இருந்தது அந்த அடர்ந்த ஆரண்யம். அதனுள் நுழைந்தான் ஸ்ரீநிவாசன்.

அரக்கர்களைப் போல் நெடுநெடுவென நெருக்கமாக வளர்ந்திருந்த மரங்களின் காரணமாகப் பகற்பொழுதிலேயே இருட்டு இடம்பிடித்திருந்தது. குள்ளநரிகளின் கூப்பாடுகளும் காட்டு விலங்குகளின் கர்ஜனைகளும் காடெங்கும் எதிரொலித்தன.

வில்லின் நாணேற்றி கிணர் என்று ஒலியெழுப்பினான் ஸ்ரீநிவாசன் எட்டுத் திக்குகளில் இருந்தும் இடி விழுந்தது போல் அந்தச் சத்தம் வனம் முழுக்க வலம் வந்தது. (தொடரும்)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**அம்மை அப்பர் கலச வழிபாடு**

மூன்று கலசத்தில் முதல் கலசம் கொண்டு புண்ணியக வாசம் செய்த பிறகு அடுத்த இரு கலசங்களில் இந்தத் திருமணத் திற்குச் சாட்சியாக அம்மை அப்பர் தெய்வத்தை ஆவாஹனம் செய்து வரவழைக்க வேண்டும். இந்த முறையையும் தமிழ் வேதியர் நன்கு அறிவார். (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை காலை 8மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யாழ்.பிரதேசத்தில் மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, கொடுக்குழாய், ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில், வெற்றிலைக்கேணி இராணுவ முகாம், கட்டைக்காடு இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் சோலை, ஜெயபுரம், நாகபடுவான், பல்லவராயன் கட்டு ஒருபகுதி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் அட்டம்பஸ்கட கிராமம், தவசிக்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ சுயநலமற்ற தன்மையே கடவுள் ஆகும். ஒருவன் செல்வந்தனாக வாழ்ந்தபோதும் சுயநலம் இல்லாதவனாக இருந்தால் அவனிடம் கடவுள் இருக்கிறார்.

❖ ஒரு நல்ல இலட்சியத்துடன் முறையான வழியைக் கைக்கொண்டு தைரியத்துடன் வீரனாக விளங்குங்கள். மனிதனாக பிறந்ததற்கு வாழ்ந்து சென்றபின்னும் ஏதாவது அடையாளத்தை விட்டுச் செல்லுங்கள்.

❖ உங்களுடைய நரம்புகளை முறுக்கேற்றுங்கள். காலம் எல்லாம் அழுது கொண்டிருந்தது போதும். இனி அழுகை என்ற பேச்சே இருக்கக் கூடாது. சுயவலிமை பெற்ற மனிதர்களாக எழுந்து நில்லுங்கள்.

❖ தூய்மையாக இருப்பதும் மற்றவர்களுக்கு நன்மை செய்வதும் தான் எல்லா வழிபாடுகளின் சாரமாகும். ஏழைகளிடமும் பலவீனர்களிடமும் நோயாளிகளிடமும் இறைவனைக் காண்பவனே உண்மையான வழிபாடு செய்பவன் ஆவான்.

❖ கடவுள் ஒவ்வொரு உயிரினும் குடிகொண்டிருக்கிறார். இதைத் தவிர தனியாக வேறு கடவுள் ஒருவர் உலகில் இல்லை.

# திருச் சிலுவைக் கல்லூரியை வீழ்த்தி தொடரை வெற்றியுடன் ஆரம்பித்தது புனித பத்திரிசியார்



இவ் வருடத்திற்கான பிரிவு I (டிவிஷன் I) பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்பியன்ஷிப் தொடரில் களுத்துறை திருச் சிலுவைக் கல்லூரிக்கு (Holy Cross College) எதிரான தமது முதலாவது போட்டியில், இரண்டாவது பாதியில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தியதன் மூலம் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி (St. Patrick's College) வெற்றி பெற்றுள்ளது.

புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டி ஒரு பாதி 40 நிமிடங்கள் கொண்டதாக அமைந்திருந்தது. பேரட்டியின் ஆரம்பத்திலேயே புனித பத்திரிசியார் கல்லூரி அணிக்கு கிடைத்த ப்ரீகிக் வாய்ப்பை ஹேய்ன்ஸ் உள்ளனுப்ப அதனை கோல் காப்பாளர் தட்டிவிட, அதே வேகத்தில் கிடைத்த அடுத்த வாய்ப்பினை சாந்தன் கோல் கம்பத்திற்கு மேலால் உதைய அம்முயற்சி பலனளிக்கவில்லை.

சானுக பியமல் பேரேரா உள்ளனுப்பிய பந்தை புனித பத்திரிசியார் கல்லூரியின் கோல் காப்பாளர் கியூமன் தடுத்தார். 15ஆவது நிமிடத்தில் புனித பத்திரிசியார் கல்லூரியின் ஹேய்ன்ஸ் லாவகமாக உள்ளனுப்பிய பந்து மயிரிழையில் கோல் கம்பத்தில்பட்டு வெளியேறியது.

மீண்டும் சானுக பியமல் பேரேரா தனித்து சிறப்பான முறையில் கோலை நோக்கி உதைந்த பந்தை புனித பத்திரிசியார் கல்லூரியின் கோல் காப்பாளர் தடுத்தார்.

முறையற்ற விதத்தில் எதிரணி வீரரை வீழ்த்தியதன் காரணமாக பிரீசன் மஞ்சள் அட்டை காட்டப்பட்டு எச்சரிக்கப்பட்டார். அதன் காரணமாக கிடைத்த ப்ரீகிக்கிற்கு இடையூறு விளைவித்தமைக்காக சாந்தனும் மஞ்சள் அட்டை மூலம் எச்சரிக்கப்பட்டார்.

தொடர்ந்து திருச் சிலுவைக் கல்லூரியின் கஜாசான் நேர்த்தியாக கோலை நோக்கி அனுப்பிய பந்தை கோல் காப்பாளர் தடுத்தார்.

திருச் சிலுவைக் கல்லூரியின் கவிந்து தேஷால் முறையற்ற ஆட்டத்திற்காக மஞ்சள் அட்டை காட்டப்பட்டு எச்சரிக்கப்பட்டார்.

இரு அணிகளும் முதலாவது கோலைப் பெறுவதற்கு பலத்த போராட்டத்தினை வெளிப்படுத்திய போதும் கோல் காப்பாளர்களின் சிறப்பான செயற்பாட்டின் காரணமாக எதுவித கோல்களும் பெறப்படவில்லை. முறையற்ற ஆட்டங்களும் மஞ்சள் அட்டைகளும் நிறைந்திருந்த முதல் பாதி கோல்கள் இன்றி நிறைவுற்றது.

முதல் பாதி: புனித பத்திரிசியார் கல்லூரி 0-0 திருச் சிலுவைக் கல்லூரி

முதலாவது பாதி நிறைவுற்ற அதே பரபரப்புடன் ஆரம்பமான இரண்டாவது பாதியின் ஆரம்ப நிமிடங்களிலேயே இரண்டு அணிகளுக்கும் வாய்ப்புக்கள் கிடைத்திருந்த போதும் அவை இலகுவாக முறியடிக்கப்பட்டன.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்றுக்கொண்டிருந்த போட்டியின் 47ஆவது நிமிடத்தில், கிறிஸ் ரீபன் புனித பத்திரிசியார் கல்லூரி சார்பாக முதல் கோலைப் பெற்று கோல் கணக்கை ஆரம்பித்தார்.

அதேவேகத்தில் ஹேய்ன்ஸ் உதைந்த பந்தை கோல் காப்பாளர் தடுத்தார், சாந்தனின் முயற்சியும் கோல் கம்பத்தின் மேல் விளிம்பில்பட்டு வெளியேறியது.

ஹேய்ன்ஸ் உதைந்த பந்து கம்பத்தில் பட்டுத் திரும்ப அதனை வேகமாக செயற்பட்ட சாந்தன் கோலாக மாற்றினார்.

அணித் தலைவர் அபீசன் தன் பங்கிற்கு மேலும் ஒரு கோலைப் புனித பத்திரிசியார் கல்லூரிக்காகப் பெற்றுக்கொடுத்தார்.

அதுவரை நேரமும் போட்டியில் இரு அணிகளும் சமவலுவுடன், மிகப்பலமாக விளையாடிக்கொண்டிருந்த போதும் 3 கோல்களால் புனித பத்திரிசியார் கல்லூரி முன்னிலை பெற, ஆட்ட வேகத்தை திருச் சிலுவைக் கல்லூரி அதிகரித்திருந்த போதும் போட்டி புனித பத்திரிசியார் கல்லூரி பக்கம் சாய ஆரம்பித்தது.

திருச் சிலுவைக் கல்லூரியின் சானுக மற்றும் ஜோகான் எரண்ட ஆகியோர் வேகமான. முயற்சிகளை மேற்கொண்ட போதும் அது பலனளிக்கவில்லை.

67ஆவது நிமிடத்தில் ஹேய்ன்ஸ் கோலுக்கு அனுப்பிய பந்தை கோல் காப்பாளர் நுவான் சதீப பெரேரா தடுக்க, விரைந்து செயற்பட்ட சாந்தன் அதனை கோலாக்கினார்.

நடுவர் முறையற்ற ஆட்டத்தை அவதானிக்கவில்லை என திருச் சிலுவைக் கல்லூரியினர் நடுவரிடம் முறையிட்டனர்.

அடுத்த நிமிடத்தில் பியன்வெனு உள்ளனுப்பிய பந்தை சாந்தன் ஹெடர் மூலம் கோலாக்கி ஹட்றிக் கோல் பெற்றார்.

தொடர்ந்தும் நடுவருடன் திருச் சிலுவைக் கல்லூரி அணியினர் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர்.

போட்டி நிறைவடைவதற்கு 11 நிமிடங்கள் மீதமாகவிருந்த நிலையில் நடுவரது முடிவில் அதிருப்தி தெரிவித்து மைதானத்திலிருந்து வெளியேறினர் திருச் சிலுவைக் கல்லூரியினர்.

இறுதியில் புனித பத்திரிசியார் கல்லூரி 5-0 என திருச் சிலுவைக் கல்லூரியை வீழ்த்தியது. (க)

# அகில இலங்கை தொடர் ஓட்டப் போட்டியில் சம்பியனான பெனடிக்ட், ரத்நாயக்க கல்லூரிகள்



யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நிறைவு பெற்ற அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான மைலோ தொடர் ஓட்டக் கொண்டாட்ட விழாவில் (ரிலே கார்னிவல்) ஆண்கள் பிரிவில் கொட்டாஞ்சேனை புனித பெனடிக்ட் கல்லூரியும் பெண்கள் மற்றும் கலப்பு பிரிவுகளில் வலல்ல ஏ. ரத்நாயக்க மத்திய மகா வித்தியாலயமும் ஒட்டு மொத்த சம்பியன்களாகின.

ஆண்கள் பிரிவில் புனித பெனடிக்ட் கல்லூரி 83 புள்ளிகளைப் பெற்று ஒட்டுமொத்த சம்பியனானதுடன் நீர்கொழும்பு மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரி 71 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தையும் வலல்ல ஏ.ரத்நாயக்க கல்லூரி 60 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

பெண்கள் பிரிவில் ஏ: வலல்ல ரத்நாயக்க மத்திய மகா வித்தியாலயம் 112 புள்ளிகளைப் பெற்று ஒட்டு மொத்த சம்பியனானது.

அஞ்சலோட்டப் போட்டிகளின் இரண்டாவது நாள் போட்டிகள் நிறைவில் வலல்ல ரத்நாயக்க மத்திய மகா வித்தியாலயம் பெண்கள் பிரிவிலும் கலப்பு பிரிவிலும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான 4X800மீ. அஞ்சலோட்டம் மற்றும் 20 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான கலப்பு அஞ்சலோட்டம் என அனைத்திலும் தங்கப் பதக்கங்களை அள்ளிக் குவித்தது.

குருநாகல் சேர் ஜோன் கொத்தலாவல கல்லூரி 66 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தையும் இரத்தினபுரி சுமனா மகளிர் வித்தியாலயம் 42 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

ஆண், பெண் இருபாலாருக்குமான கலப்பு பிரிவில் வலல்ல ஏ. ரத்நாயக்க மத்திய மகா வித்தியாலயம் 172 புள்ளிகளைப் பெற்று ஒட்டு மொத்த சம்பியனானது.

குருநாகல் சேர் ஜோன் கொத்தலாவல மகா வித்தியாலயம் 79 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தையும் பன்னிப்பிட்டிய தர்மபால கல்லூரி 64 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தையும் பெற்றன. (க)

# கிளிநொச்சி மாணவர்களுக்கு சதுரங்கப் பயிற்சி முகாம்

கிளிநொச்சி மாவட்ட சதுரங்கச் சங்கமானது செப்டெம்பர் செஸ் (September Chess) எனும் பெயரில் இந்த மாதத்தில் கிளிநொச்சி மாவட்டம் தழுவிய ரீதியில் 300 வரையான மாணவர்களுக்கு சதுரங்கம் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகளையும் அடிப்படைப் பயிற்சி முகாம்களையும் நடத்தியுள்ளது.

இச் செயற்பாடானது கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தின் ஆதரவுடன் வேள்ட் விசன் நிறுவன அனுசரணையுடன் கடந்த 7 ஆம் திகதி கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயத்திலும் 8 ஆம் திகதி கிளிநொச்சி ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலையிலும் 9 ஆம் திகதி புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்திலும் தலா 100 மாணவர்கள் வீதம் 300 மாணவர்களுக்கு சதுரங்கம் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகளையும் அடிப்படைப் பயிற்சி முகாம்களையும் நடத்தியுள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் மூலம் சதுரங்கத்தினை கிராம மட்டங்களுக்கு விஸ்தரிக்கப்பட முடியும் என ஏற்பாட்டாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இச் செயற்பாடுகளில் வளவாளர்களாக கிளிநொச்சி மாவட்டச் சதுரங்க சங்கத்தின் தலைவர் தி.சிவரூபன், சங்கத்தின் துணைப் பொதுச் செயலாளர் பொறியியலாளர் வி.விஜிதரன், சங்கத்தின் உறுப்பினர்களான எஸ். கயூரன், சு.நிரோஜன், சு.கிருஷாந் ஆகியோர் இணைந்து செயற்பட்டனர்.

செப்டெம்பர் செஸ் இன் ஆரம்ப நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தரும் சங்கத்தின் ஆலோசகருமான எஸ்.மோகனதாஸ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இச் செப்டெம்பர் செஸ் செயற்பாடானது தொடர்ந்தும் இம் மாதம் முழுவதும் முன்னெடுக்கப்படுவதுடன் ஒவ்வொரு ஆண்டும் செப்டெம்பர் முன்னெடுக்கப்படும் என சங்கத்தின் தலைவர் தி. சிவரூபன் தெரிவித்தார். (க)

# இன்றைய போட்டிகள்

கைதடி வள்மதி சனசமூக நிலையம் தனது 58 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கு மின்னொளியில் நடைபெறும் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகமும் தொடர்ந்து இரவு 8.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க)

## கால எல்லையை...

காணாமல்போனோர் பணியகத்தை இலங்கை உடனடியாக செயற்படுத்த வேண்டும். அத்துடன், இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள காணிகளை விடுவித்தல், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ்நீண்டகாலமாக இழுபறிப்படும் வழக்குகளுக்கு தீர்வுகாணல் உள்ளிட்ட ஏனைய நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக அனைத்துலக மனித உரிமைகள் நியமங்களுக்கு ஏற்ப புதிய சட்டம் கொண்டு வரப்பட வேண்டும்.

வடக்கில் பாதிக்கப்பட்டவர்கள் நடத்தும் எதிர்ப்புப் போராட்டங்கள், மெதுவாக நடக்கும் சீர்திருத்தங்கள் அவர்களின் ஏமாற்றத்தை அதிகரிக்கச் செய்து வருவதை சுட்டிக் காட்டுகின்றன.

30/1 தீர்மானத்தின் போது அளித்த வாக்குறுதிக்கு அமைய, நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகளை உருவாக்குவதற்காக செயற்படுமாறு இலங்கை அரசாங்கத்தை ஊக்குவிக்கிறேன்.

அத்துடன், இதனையும் ஏனைய வாக்குறுதிகளையும் நடைமுறைப்படுத்த தெளிவான காலஎல்லை ஒன்றை வகுக்க வேண்டும்.

இந்தப் பொறுப்புகளை நிறைவேற்றுவதை, பேரவையைச் சமாதானப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக அரசாங்கம் கருதக்கூடாது. அதன் எல்லா மக்களுக்கும் உரிமைகளை வழங்குவதற்கான ஒரு அவசியமான கடமை இதுவாகும்.

அனைத்துலக மனித உரிமை மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் குறித்த குற்றச் சாட்டுகளுக்கு பொறுப்புக்கூறலை உறுதி செய்ய நம்பகமான நடவடிக்கைகளை இலங்கை எடுக்காதது, உலகளாவிய சட்ட நடவடிக்கைகளுக்கு இன்னும் அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (மு-11)

## கிழக்கு, மேல் மாகாண...

உள்ளது என்று இரண்டு மாகாண சபைகள் இதனை நிராகரித்திருந்தன.

இந்த நிலையில், நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள திருத்தச்சட்ட வரைபில், குழு நிலை விவாதத்தின் போது திருத்தங்கள் செய்யப்படும் என்று இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தது. இதையடுத்து மீண்டும் மாகாண சபைகளின் அங்கீகாரத்துக்காக இந்த வரைபு அனுப்பப்பட்டது.

நேற்று கிழக்கு மாகாண சபையில் இதுகுறித்து விவாதிக்கப்பட்ட போது, 25 வாக்குகள் ஆதரவாக அளிக்கப்பட்டன. 8 வாக்குகள் எதிராக அளிக்கப்பட்டன.

அதேவேளை, மேல் மாகாண சபையிலும், இந்த திருத்தச்சட்ட வரைபு நேற்று நிறைவேற்றப்பட்டது.

நேற்று மேல் மாகாணசபையில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பின் போது 20 ஆவது திருத்தச்சட்ட வரைவுக்கு ஆதரவாக 45 உறுப்பினர்கள் வாக்களித்தனர். 28 உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர். 5 பேர் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. (மு-11)

## முல்லையில் விபத்து...

அதிவேகமாக பயணித்த இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

படுகாயமடைந்தவர்கள், மாஞ்சோலை வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

வைத்தியசாலை உள்ளிட்ட பொது இடங்களுக்கு அருகாமையில் வேகக்கட்டுப்பாட்டை கடைப்பிடிக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ள போதும், வீதி ஒழுங்கு விதிகளை கடைப்பிடிக்காத காரணத்தால் இவ்வாறான அசம்பாவிதங்கள் ஏற்படுவதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர். (மு-281)

## வித்தியா வழக்கு...

நீதாயவிளக்க (ரயல் அட் பார்) முறைமையில் இன்று நடைபெறவுள்ளது.

வழக்கு தொடுநர் தரப்பு சாட்சிப் பதிவுகள் மற்றும் எதிரிகள் தரப்பு சாட்சி பதிவுகள் கடந்த மாதம் நிறைவடைந்த நிலையில், இன்று இரு தரப்பின் தொகுப்புரைக்காக கூடவுள்ளது.

இன்று மற்றும் நாளை புதன்கிழமை இரு தரப்பு தொகுப்புரைக்காகவும் மன்றினால் திகதியிடப்பட்டு உள்ளது.

இருதரப்பின் தொகுப்புரைகளும் முடிவடைந்த பின்னர் தீர்ப்பு வழங்குவதற்கான திகதியினை நீதிபதிகள் அறிவிப்பார்கள் என தெரிவிக்கப்படுகின்றது. (மு-11)

## இடைக்கால அறி...

இந்த இடைக்கால.அறிக்கை கடந்தவருடம் நவம்பர் மாதம் 19-ம் திகதி உருவாக்கப்பட்டஅறிக்கையாகும்.

இந்த இடைக்கால அறிக்கையில் அரசியல் கட்சிகளின் எழுத்து மூல கருத்துக்களும் உள்ளடக்கப்படும். மேலும் வழி நடத்தல்குழு உறுப்பினர்களும் தங்கள் கருத்துக்களையும் கூறியிருக்கின்றனர். அதேபோல் தமிழ் தேசிய கூட்டமைப்பும் தங்கள் கருத்துக்களை கூறியிருக்கின்றது. அதுவும் இடைக்கால அறிக்கையின் ஒரு அங்கமாக வரும். எமது கருத்துக்களில் நாட்டின் சுபாவம் சமஷ்டி அமைப்பாக இருக்கவேண்டும்,மதசார்பற்ற நாடாக இருக்கவேண்டும். வடகிழக்கு மாகாணங்கள் இணைந்த அலகாக இருக்க வேண்டும். அதேபோல் மாகாண ஆளுநர்களுக்கான அதிகாரங்கள் தொடர்பாக கேட்டுள்ளோம். அதேபோல் பௌத்த சமயத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படட்டும். ஆனால் மற்றைய மதங்களுக்கு சம உரிமைகொடுக்கப்படவேண்டும் என கூறியிருக்கின்றோம்.

அதே சமயம் இடைக்கால அறிக்கையில் பிரதானமான பகுதியாக ஒரு பகுதி வருகின்றது. அதற்கு அரசாங்கத்தின் பிரதானகட்சிகள் இரண்டும் ஒப்புதல் வழங்கினால் அடுத்த கட்டம் தொடர்பாக பேசுவதற்கு நாங்கள் இணக்கம் தெரிவிக்கின்றோம். எனவே 21-ம திகதி இடைக்கால அறிக்கை வெளியான பின்னர் நாட்டிலும், அரசியலமைப்பு பேரவையிலும் விவாதங்கள் நடக்கும். அந்த விவாதங்களின் அடிப்படையில் ஒக்டோபர் மாதம் முழுமையான அரசியலமைப்பை உருவாக்கும் நடவடிக்கைகள் தொடங்கப்படும் என்றார் சுமந்திரன். (மு-4)

## நினைவுத் தூபி...

யில் புலிகளாகவே பார்க்கின்றனர் என ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

முன்னைய ஆட்சியாளர்கள் விடுதலைப் புலிகளை வைத்து அரசியல் செய்தார்கள். ஆனால் தற்போது அவ்வாறு இல்லை. தமிழ் தலைமைகள் எம்முடன் இணைந்து போராடுகின்றார்கள்.

யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூர வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கையை நாம் நிராகரிக்கவில்லை.

ஆனால் மக்களை நினைவுகூருவதற்கு மாத்திரமே நினைவுத்தூபி அமைக்கப்படும். புலிகளை நினைவுகூர அல்ல அவர்கள் இந்த நாட்டில் தடை செய்யப்பட்டவர்கள் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

புலிகளை நினைவுகூருவதற்கு நினைவுத்தூபி அமைக்கப்படுமானால் அது இராணுவத்தினரை அவமதிக்கும் செயல் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், இந்த நாட்டில் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் அமைதியாக வாழ்கின்றனர் என்றால் அதில் இராணுவத்தினரின் பங்களிப்பே அதிகம் எனவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார். (மு-11)

# வவுனியாவில் மோ.சைக்கிள் மோதி தாய் சாவு; மகள் படுகாயம்

(மல்லாவி)

வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட புளியங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள மதியாமடு பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையில் துவிச்சக்கர வண்டியில் பயணித்தவர்களை மோதித் தள்ளிய விபத்துச் சம்பவத்தில் 02 பிள்ளைகளின் தாயொருவர் சம்பவ இடத்திலே உயிரிழந்துள்ளதுடன், அவருடன் கூடப் பயணித்த அவரது 06 வயதுடைய மகள் படுகாய மடைந்த நிலையில் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக புளியங்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7.15 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

வவுனியா வடக்கு நெடுங்கேணி மதியாமடு பகுதியில் இரவு 07 மணியளவில், காலை தோட்டத்திற்கு சென்ற தனது கணவனைத் தேடிக் கொண்டு தனது மகளுடன் துவிச்சக்கர வண்டியில் பயணித்த இளம் தாயொருவர் மீது திடீரென வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த இருவரும் தூக்கி வீசப்பட்ட நிலையில் சம்பவ இடத்திலேயே 02 பிள்ளைகளின் தாயாரான சுமன் வனஜா (வயது 26) என்ற இளம் தாய் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இவருடன் பயணித்த இவரது மகளான சுமன் கிருத்திகா (வயது 06) என்ற சிறுமி படுகாயமடைந்த நிலையில் வீதியால் சென்ற பொது மக்களினால் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் விபத்து பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற புளியங்குளம் பொலிஸார் விபத்தினை ஏற்படுத்திய மோட்டார் சைக்கிளைச் செலுத்தி சென்ற 16 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

இந்த மாணவன் சாரதி அனுமதி பத்திரம் இல்லாத நிலையில், அதிவேகமாக மோட்டார் சைக்கிளை செலுத்தி வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையில் விபத்தினை ஏற்படுத்தியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட வைத்தியசாலையில ஒப்படைத்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (மு-15)

# 12 இந்திய மீனவர் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து தடைசெய்யப்பட்ட மீன்பிடியில் ஈடுபட்டதாக இந்திய மீனவர்கள் 12 பேரை நேற்றைய தினம் இரவு இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்

இலங்கை கடற்பரப்பில் நேற்றைய தினம் இரவு அத்துமீறி நுழைந்து நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட இராமேஸ்வரத்தை சேர்ந்த இந்திய மீனவர்கள் 12 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளதுடன் அவர்கள் பயணம் செய்த 2 படகுகளையும் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த மீனவர்கள் கடற்படையின் விசாரணையின் பின்னர் இன்றைய தினம் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடத்தில் பாரப்படுத்தப்படுத்தப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (மு-9)

# முடிவின்றி தொடரும் போராட்டம்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையிலும் மற்றும் ஏனைய வழிகளாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து தமக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் தீர்வு கிடைக்கும் வரையிலான கவனயீர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்து நேற்று திங்கட்கிழமை 191 ஆவது நாளாகவும் தீர்வு எதுவும் கிடைக்காத நிலையில் தொடர்ந்து தமது சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக உள்ள கரைதுறைப்பற்று பிரதேச சபையின் பொது விளையாட்டு மைதானத்திற்கு முன்பாக சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்து நேற்று திங்கட்கிழமையுடன் 191 நாட்கள் முடிவடைந்துள்ள நிலையில் இதுவரை இவர்களுக்கான தீர்வு கிடைக்கவில்லை.

இந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தமக்கான தீர்வு கிடைக்கும் வரை கவனயீர்ப்பு போராட்டத்தை தொடரப்போவதாக தெரிவித்துள்ளனர். (மு-15)

# லலித், அனுஷ மேன்முறையீடு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட ஆகியோர் தமக்கு வழங்கப்பட்ட தண்டனையை எதிர்த்து மேன்முறையீடு செய்துள்ளனர்.

2015ஆம் ஆண்டு தொலைத்தொடர்பு ஆணைக்குழுவுக்கு சொந்தமான 600 மில்லியன் ரூபாயை பயன்படுத்தி சில் துணிகளை விநியோகம் செய்ததாக இவர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இதன்படி, கடந்த 7-ம் திகதி இவர்கள் குற்றவாளிகள் என தீர்மானித்த கொழும்பு மேல் நீதிமன்றம், மூன்று வருடங்கள் சிறைத் தண்டனையும் விதித்தது.

இந்தநிலையில் இந்த தீர்ப்பை எதிர்த்து, இருவரும் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர். (மு-11)

# தீர்ப்பிற்கு எதிராக நாடு தழுவிய ஆர்ப்பாட்டம்

## கூட்டு எதிர்க்கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் முன்னாள் தொலைத்தொடர்பு மற்றும் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தலைவர் அனுஷ பல்பிட்ட ஆகியோருக்கு வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு எதிராக நாடுதழுவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களையும் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

அதேவேளை அவ்விருவருக்கும் எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பில் இருவரும் தலா ஐந்து மில்லியன் பணத்தை எதிர்வரும் 20-ம திகதிக்கு முன் செலுத்தப்பட வேண்டும் என்பதால் அப்பணத்தையும் இந்த ஆர்ப்பாட்டத்தின் மூலம் திரட்ட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (மு-11)

## கோபமூட்டாதீர்...

செயலாளர் லலித் வீரதுங்கவையும், தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் அனுஷ பல்பிட்டவையும் பார்வையிடுவதற்காக சென்றிருந்த வேளை ஊடகவியலாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்துக்கொண்டிருந்தபோதே கோபத்தில் ஊடகவியலாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

சில் ஆடைகளை வழங்குமாறு நானே பணிப்புரை விடுத்தேன். அது தவறல்ல. மக்களிடமிருந்து கிடைத்த வேண்டுகோளுக்கு அமைவாகவே நான் பணிப்புரை விடுத்தேன். தேர்தலை நோக்காகக் கொண்டு அவை விநியோகிக்கப் படவில்லை.

ஆனால் தேர்தல் காலத்தில் விநியோகிக்கப்பட்டமையினாலேயே தண்டனைக்கு ஆளாக வேண்டி வந்தது என அவர் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

அவரது பதிலின்போது குறுக்கிட்ட ஊடகவியலாளர் ஒருவர், தேர்தல் காலத்தில் சில் ஆடைகள் பகிர்ந்தளிக்கப்பட்டமை குற்றம் தானே? எனக் கேள்வி எழுப்பினார்.

நாம் தவறு செய்யவில்லை. புரிந்துகொள்ளுங்கள். எனக்கு கோபமூட்டாதீர்கள். இதனை ஊடக கண்காட்சியாக மாற்றுவதற்கு முயற்சிக்க வேண்டாம் எனத் தெரிவித்தார்.

இதன்போது ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் வருகை தந்திருந்தனர். (மு-11)


வாடகைக்கு

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் ஆத்திசூடி வீதியில் பல்கலைக்கழக மாணவிகளுக்கு மாத்திரம் அறைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 0777 110 955 (322)

உடனடி வேலை வாய்ப்பு
V2 TRAVELS
UK - 550/= Kg
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
நீண்ட காலமாக வேலை தேடுபவரா?
(5000/= (பயிற்சியின் போது) //15,000/= (பயிற்சியின் பின்னர்)
தகுதி:- 30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)
0768226241
(C-9578)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
UK - 550/= (C9570)
CANADA - 400/= மட்டுமே
V2 TRAVELS - 0768226240
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை


## வடக்கு வைத்தி...

தவிர்ந்த) இன்று பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொள்ளவுள்ளனர்.

சயிட்டம் தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிராக பல வருடங்களாக மாணவர் அமைப்புக்கள், அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் போராட்டம் நடைபெற்று வருகிறது.

நீண்ட காலமாக நிலவும் இப்பிரச்சினை தீர்க்க அரசாங்கத்தின் இயலாமையை வெளிப்படுத்தவும் அதே வேளையில் இலங்கை மருத்துவ சபையை பலவீனப்படுத்த பல்வேறு தரப்பினரை கொண்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும் கண்டித்து இப் போராட்டம் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதே வேளை சயிட்டம் எதிர்ப்பு மக்கள் அரண் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களை ஒன்றிணைத்து சயிட்டம் எதிர்ப்பு வாகனப் பேரணி இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

அந்த வகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து இன்று காலை 9.30 மணியளவில் முற்றவெளி திறந்தவெளி அரங்கிற்கு அண்மையில் இருந்து ஆரம்பித்து யாழ்ப்பாண நகரை அடைந்து பரந்தன் ஊடாக கிளிநொச்சியினை சென்றடையும். கிளிநொச்சியில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். அதனை தொடர்ந்து முறிகண்டியில் இறை வழிபாடும் நடைபெறும். இறுதியில் பிற்பகல் 5மணியளவில் வவுனியா சென்றடையும். அடுத்த தினம் வவுனியாவில் இருந்து அநுராதபுரம் நோக்கி நகரும். இறுதியில் சிலாபம் சென்றடையும்.

இறுதி நாள் அன்று கொழும்பில் அனைத்து வாகனங்களின் பேரணி தெரிவு செய்யப்பட்ட ஒரு இடத்தில் மாலை 3.00 மணியளவில் வந்தடையும். அத்துடன் அனைத்து முக்கிய நகரங்களிலும் கையொப்பங்கள் சேகரிப்பு நடைபெறும்.

இவ் போராட்டத்தில் வட. மாகாண வைத்தியர்கள் (வவுனியா நீங்கலாக) இன்று காலை 8மணி முதல் 24 மணி நேர போராட்டத்தில் ஈடுபடுவர். வவுனியா மாவட்ட வைத்தியர்கள் நாளை மறுநாள் காலை 8 மணி முதல் 24 மணி நேர அடையாள வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடுவர் என ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் தெல்லிப்பழை புற்று நோய் வைத்தியசாலை மற்றும் ஏனைய வைத்தியசாலைகள் அனைத்திலும் அவசர நோயாளர் சேவைகள் இடம்பெறும் எனவும், டெங்கு நோயாளிகளுக்குரிய சேவைகள் தொடர்ச்சியாக வழங்கப்படும் எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-9)

## வவுனியா...

வித்து அதன் உரிமையாளர்களை ஏமாற்றி வாகனத்தில் கடத்திச் செல்லப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று காலை நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றித்தெரியவருவதாவது,

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து மீள்குடியேறியுள்ள மாற்று ஆற்றல் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரிடம் நேற்று முன்தினம் மாலை 6.00 மணியளவில் அவரது வீட்டிற்குச்சென்ற குறித்த நபர் இராணுவமுகாமில் கண்காட்சி ஒன்றும் படப்பிடிப்பு ஒன்றும் இருப்பதாகவும் அதற்கு இருபதாயிரம் ரூபாய் பணம் தருவதாகவும் தெரிவித்ததாகவும் அதன் பின்னர் ஆட்டின் உரிமையாளரின் மகனை வாகனத்தில் ஏற்றிச்சென்று தர்மபுரம் மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களிற்குச் சென்றதாகவும் கிளிநொச்சி பரந்தன் பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதிக்கும் அழைத்துச்சென்று மதுபானம் அருந்தியதாகவும் அதன் பின்னர் வீட்டிற்குக்கூட்டிச்சென்று வீட்டில் இறக்கி விட்டு வாகனத்தைக்கொண்டு சென்றதாகவும் தெரிவித்த பாதிக்கப்பட்ட வீட்டின் உரிமையாளர், குறித்த வாகனத்துடன். நேற்றுக்காலை 6.30 மணியளவில் வந்து ஆடுகள் கட்டி வைக்கப்பட்டிருந்த இடத்தில் இருந்து 18 ஆடுகளையும் ஏற்றிக்கொண்டு வீட்டின் உரிமையாளரான மாற்றுத்திறனாளியையும் அவரது பெறாமகனையும் வாகனத்தில் ஏற்றிச்சென்று ஏ-9 வீதியூடாக கிளிநொச்சி நகரைச்சென்று அங்கு கடையொன்றில் உங்களுடைய தேசிய அடையாள அட்டையின் நிழற்படப்பிரதியொன்றை எடுத்து வருமாறு இறக்கி விட்டு ஆடுகளுடன் குறித்த வாகனம் தப்பிச்சென்றுள்ளது.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் நேற்றைய தினம் கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதையடுத்து விசாரணைகளை மேற்கொண்டு வரும் கிளிநொச்சிப் பொலிஸார் நேற்று முன்தினம் வாகனம் நடமாடிய இடம் மற்றும் விருந்தினர் விடுதி ஆகியவற்றில் பொருத்தப்பட்ட சி.சி.ரிவி கமராவின் ஒளிப்பதிவுகளையும் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனடிப்படையில் களவுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனத்தின் இலக்கத்தகடு, மற்றும் அதன் உரிமையாளர் அடையாளம் காணப்பட்டதாகவும் சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகநபரின் புகைப்படம் ஒன்றும் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ,கடந்த ஜனவரி மாதம் இந்த மாற்றுதிறனாளியினுடைய வாழ்வாதாரத்தேவைக்கென வளர்க்கப்பட்ட பசுமாடுகள் இரண்டு களவாடப்பட்டு வெட்டப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (மு-315)

## படையினரை...

பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட போது அமைச்சர் இதனை தெரிவித்திருந்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அண்மையில் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தொடர்பாக வெளியிட்ட கருத்து காரணமாக மூன்று லட்சத்திற்கும் அதிகமான படையினரின் வாழ்க்கை ஆபத்துக்கு உள்ளாகியுள்ளது.

படையினரை காப்பாற்ற இருக்கும் ஒரே மாற்று வழி சரத் பொன்சேகா மனநோயாளி என்பதை கண்டறிவதாகும்.

ஜகத் ஜயசூரிய போர் குற்றம் செய்ததாக சரத் பொன்சேகா கூறியிருந்தார். இலங்கை இராணுவம் போர் குற்றம் செய்தது என்று போர் காலத்தில் இராணுவ தளபதியாக இருந்தவர் கூறியுள்ளதால், அதனை ஒப்புவிக்க வேறு சாட்சியங்கள் தேவையில்லை.

இதன் காரணமாக கடந்த 8 ஆண்டுகளாக சாட்சியங்கள் இன்றி தவித்த தமிழ் பிரிவினைவாதிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இதனால், வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதிநிதிகள் மட்டுமே பொன்சேகாவை புகழ்ந்து வருகின்றனர் என உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ளார். (மு-11)

## தமிழ் மக்கள்...

பேரவையின் பிரதிநிதிகள்; மல்வத்த பீடாதி பதிகளிடமும் அஸ்கிரிய பீடாதிபதிகளிடமும் தமிழ் மக்கள் பேரவை தயாரித்த தீர்வுத்திட்டத்தை கையளித்திருந்தனர்.

இவ்வாறு தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தை பெற்றுக்கொண்ட மல்வத்த, அஸ்கிரிய பீடங்கள் தற்போது அந்தத் தீர்வுத்திட்ட தொடர்பில் ஆராய்ந்து வருவதாக கொழும்பில் தகவல்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை வடக்கு மாகாண சபை தயாரித்த தீர்வுத்திட்டமும் முதலமைச்சரால் அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகளிடம் கையளிக்கப்பட்டன. (ஜ)

## பூநகரியில் விப...

நேற்று அதிகாலை 6.30 மணியளவில் கிளிநொச்சி பூநகரி வீதியில் 16ஆம் கட்டை சாமிபுரத்தில் வேகக்கட்டுப்பாட்டை மீறிய ஹயஸ் வாகனம் வீதி அருகில் நின்ற பெண் மீது மோதியதில் அவர் ஸ்தலத்திலேயே பலியானார்.

மேற்படி விபத்தில் பலியானவர் பூநகரி சாமிபுரத்தைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தாயார் ஆன சிவகுமார் ஜெகதாம்பாள் (வயது 47) ஆவார்.

மேற்படி சம்பவம்பற்றி தெரியவருவதாவது, கோப்பாயைச் சேர்ந்த 6 பேர் கதிர்காமம் சென்றுவரும் வழியில் இவ் விபத்து நடந்ததெனவும் வானில்வந்த ரவீந்திரன் - வைஸ்ணவி (வயது 22) சிறுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தையடுத்து சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்ற பூநகரி பொலிஸ் நிலைய பொலிஸார் சாரதியை கைது செய்து தடுத்து வைத்துள்ளதுடன் விசாரணையில் ஈடுபட்டுள்ளதாக பூநகரி பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றது. (மு-23.315.84)

## இடைக்கால அறி...

கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர்மேற்கண்டவாறு கூறியுள்ளார். 20ஆவது திருத்தச் சட்டம் அவசர அவசரமாக கொண்டுவரப்பட்டமையினால் மக்களுக்கும், மாகாணசபைகளுக்கும் போதிய தெளிவு இல்லாமல்போனது.

அந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சில ஐயங்களை எழுப்பியிருந்தது. அதாவது மாகாணசபைகள் 5 வருடங்களுக்கு முன் கலைக்கப்பட்டால் மிகுதி காலத்தை நாடாளுமன்றம் பொறுப்பேற்பது என்பதை நாங்கள் எதிர்த்தோம்.

அதேபோல் மாகாணசபைகளுக்கான தேர்தலை ஒரே நாளில் நடத்தும் தீர்மானத்தை நாடாளுமன்றம் எடுக்கும் என கூறப்பட்டதையும் நாங்கள் எதிர்த்தோம்.

அதே சமயம் 20ஆவது திருத்தச்சட்டம் உயர்நீதிமன்றில் வழக்கிலுள்ள நிலையில் சட்டமா அதிபர் முதல்நாளே அரசாங்கம் செய்யவுள்ள சில திருத்தங்கள் தொடர்பாக கூறியிருக்கின்றார். அதில் நாங்கள் கூறிய திருத்தங்களும் உள்ளடங்கியிருக்கின்றது.

அதாவது ஒரே நாளில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நாடாளுமன்றம் தீர்மானிக்காது. அதனை தேர்தல்ஆணைக்குழுவே தீர்மானிக்கும். 5 வருடங்களுக்கு முன் மாகாணசபை கலைக்கப்பட்டால் மிகுதி காலத்தில் மாகாண சபைகளின் அதிகாரங்களை நாடாளுமன்றம் எடுக்காது அந்தகாலத்திற்கு இடைக்கால தேர்தல் நடத்தப்படும்.

மேலும் 5 வருடங்களுக்குள் கலைக்கப்பட்டு மிகுதி காலம் 18 மாதங்களுக்கு குறைவாக இருந்தால் இடைக்கால தேர்தல் நடத்தப்படாது.

அதற்கு காரணம் தேர்தலுக்கான செலவு மற்றும் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான காலம் போதாமை போன்றவற்றால் அதனை நடத்த முடியாது. இந்தஅடிப்படை கலால் 20வது திருத்தச்சட்டத்தை நாங்கள்ஆதரிக்கிறோம். மேலும் புதிய அரசியலமைப்பு தொடர்பாக கடந்த ஒன்றரை வருடங்களாக புதிய அரசியலமைப்பு உருவாக்கமுயற்சிகள் நடைபெற்று கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் எதிர்வரும் 21ஆம் திகதி புதிய அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கை வெளியாகும். 23


ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- வாருங்கள் படிக்கலாம் www.amhafrance-lk.org
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம் (334)

வரவேற்பாளர் தேவை
யாழ்ப்பாணம் ராக்கா வீதியில் அமைந்துள்ள எமது நிறுவனத்துக்கு (ஸ்ருடியோ) வரவேற்பாளர் தேவை. பெண்கள் விரும்பத்தக்கது.
Studio Mayu
077 155 2006 (C-9812)

ACS Technology System (Pvt) Ltd.
1st Mile post Junction, Point Pedro.
Computer courses
- Micro soft office
- Computer Application
- DeskTop Publishing
- Internet & E-mail
- Hardware
- Web Designing
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Programming Languages: Java, C / C++, C#, Pyhon, HTML, PHP
சிறுவர்களுக்கான கணினி கற்கை நெறிகள்
தரம் 10,11 மற்றும் A/L மாணவர்களுக்கான ICT
ACS, 1ம் கட்டைச்சந்தி, பருத்தித்துறை. T.P : 0783035181 (C-9610)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.